சுதேசமித்திரன்

19 - 12 - 1948

விலை 4 அணா





இயற்கையான வளர்ச்சியுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச் : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "தபோநிதி" தியாகராய நகர், மதராஸ் 17.

மதனமஞ்சரி

மாத்திரைகள்.

தேக புஷ்டியின்மை, மலச்சிக்கல் முதலிய நோய்களை நீக்கி, ரத்த விருத்தியும், தேக புஷ்டியும் அளிப்பது. டப்பா விலை ரூ. 1—4—0.

ரமணவிலாசினி

வாழ்க்கையை நன்கு அனுபவிக்க டப்பி ரூ. 1—4—0.

கர்ப்பாமிருத சூர்ணம்

ஸ்திரீகளின் நோய்களை நீக்கி, புத்திர சந்தானம் பெற உதவியளிக்கும் ஔஷதம். டின் விலை ரூ. 2-8-0.

இனம்

பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, நல்ல சந்ததிக்கும் வழி.

வைத்திய விந்தை

மதன மஞ்ஜரி பார்மஸ், 184 சைனா பஜார், மதராஸ்.

சேலம் : மாடர்ன் ஸ்டோர்ஸ்,
முதல் அக்ரஹாரம்.

கோயமுத்தூர் :
T. S. கருப்புசாமிசெட்டியார் & ஸன்ஸ்



1 பவுனில் 4 ஜதை கவரிங் வளையல்கள் கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனா பஜார், சென்னை.

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ். | 9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3432.

டெலிபோன்: 2346. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முகமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தர மான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடி களின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனூர் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்:

ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

உங்கள் எதிர்காலம்

பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்ட நாள், எண், நிறம் மற்றும் எதிர் காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ. 6. வாரப்பலனுக்கு ரூ. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுபலனும் எழுதியனுப்ப ரூ. 5. த.செ.தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி, MADRAS 5

குகன்
சோப்புகள்



சலவைக்கு சிறந்தவை

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

வாரியர்
பிருங்காமலகாதி
தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
கே. எஸ். வாரியரின்
அஷ்டாங்க
ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம்: 1936.)

தேவாம்ருதம்

"பீம-வீர்"

சாஸ்வத சக்தியை கொடுக்கும்

देवामृतम्

'भीम-वीर'

शाश्वत शक्ति देनेवाला है

RESTORES MAN HOOD

Nectar of Life

MAKES MEN YOUNG

"BHEEMA—VEER"

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40-நாள் மருந்து ரூ. 3—12—0. பாக்கிங், தபால் சார்ஜ் இடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.

வி. பி. செலவு அணா 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம், சென்னை 4.

எஸ். எம் டி. வேலு அண்டு கோ.,

சின்னகடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் : பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசிகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர். நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ.3.
தங்கம் விலை ரூ. 10.

சக்தி ஆரூடம்!

நீலகிரி பாரஸ்டு இலாகா மானேஜர் (Retd.) Sri. சாயிராம் T. V. ... சாமி 30-11-48ல் எழுதுகிறார்:—"தங்கள் ஜோதிடத்தில் எனக்கு அபார மதிப்பு. தங்களைக் கேட்காமல் நான் எதுவும் செய்வதில்லை."

1 முதல் 3 கேள்விகளுக்கு ரூ. 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ, 7—8—0. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. வி. பி. பி. தனி.

N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P. O., (S. I.)

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் இடையாது. மணியார்டர் தேவை, கடிதங்கள் ஆங்கிலத்தில்.

KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P. O. Katrisarai, (Gaya)

விநோத கதா மஞ்சரி

விலை ரூ. 1—0—0
(தபால் செலவு பிரத்யேகம்)

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30மாத்திரை சீசா1 ரூ.7.

மஹா பில்வாதி லேகியம்
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதிஸரஸூத்ரம், ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது, கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

சதி-பதி வாழ்க்கை

விஞ்ஞான ரீதியாக இல்லற வாழ்க்கையின் சிற்றின்பச் சிறப்புக்களை வெகு நுணுக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துப் போதிக்கும் ஒரே தமிழ் நூல்

"மணவாழ்க்கையின் - - மர்மங்கள்"

என்னும் புஸ்தகமாகும். சிற்றின்பத்தைப் பேரின்பமாக்கி, கர்ப்பத் தடை முறைகளை நன்கு விளக்கி, மலட்டுத் தனத்தை முற்றிலும் போக்கி, கணவன்-மனைவி வாழ்க்கையை வெகு உன்னதமாக்கி வைக்கும் அத்தனை இரகசியங்களும் பொதிந்த விஞ்ஞான நூல். ஒவ்வொரு ஸ்திரீ புருஷரும் தவறாது படிக்கவேண்டிய அபூர்வ ஔஷதம். மலிவுப்பதிப்பு ரூ. 3/12. பரிசுப்பதிப்பு ரூ. 5/8. தபால் செலவு வேறு. தேவைக்கு உடனே எழுதுங்கள்.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம்—சென்னை 4.



எல்லோரும் எங்கள் பீ. எஸ். வஸ்துக்களை உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும் ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் — பாதம் எண்ணெய் — அம்லா ஹேர் ஆயில் — வாசனை தேங்காய் எண்ணெய் - கஸ்தூரிகுங்குமப்பூ - கோரோஜனம் — ஊறுகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து - பஞ்சாப்தேன் - முத்து பன்னீர் - ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் — இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும், தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரிஹு மார்கழிமீ 5உ ★ 1948-ஹு டிசம்பர்மீ 19உ No. 47

'வேண்டாம் பிரிவினை'

"இப்போதுள்ள நிலைமையில் மாகாணங்களையெல்லாம் பாஷைவாரியாகவோ, அன்றி வேறு முறையிலோ பிரிப்பது சரியல்ல" என்று சென்றவாரம் பாஷாவாரி மாகாணக் கமிஷன் சிபார்சு செய்து தன் யாதாஸ்தை வெளியிட்டுவிட்டது.

வருங்காலத்தில் அத்தகைய பிரிவினை ஏற்படுவதாயிருந்தாலும் அது நிர்வாக வசதியை முக்கியமாகக் கொண்டதாகவிருக்க வேண்டுமென்றும், அக்கமிஷன் அபிப்ராயம் தெரிவித்திருக்கிறது. பலர் இது கண்டு வியப்புற இடமுண்டென்றாலும், கமிஷன் இப்பிரச்னையின் தன்மையை ஆராய்ந்திருக்கும் முறையில் யாரும் குறை கூற இடமில்லை. தேசத்தில் ஒற்றுமை நிலவ வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் கமிஷன் ஒவ்வொரு விஷயத்திலும் கவனம் செலுத்தியிருக்கிறது.

இந்தியா சுதந்திரமடைந்திருப்பதுண்மையே. பெற்ற சுதந்திரக் குழந்தைக்கு இன்னும் பூர்ணமாக இரண்டு ஆண்டுகள்கூடப் பூர்த்தியாகவில்லை. சுதந்திரத்தின் பயனை அனுபவிக்க முதலில் அதை வலுவடையச் செய்வதவசியம். இந்த வேலை இனிமேல்தான் நிறைவேற வேண்டும். இதற்கு நாட்டில் ஐக்கிய பத்தியமிருப்பது முக்கியம். ஆனால் நம்முன்னுள்ள விபரீத சக்திகளுக்கோ கணக்கில்லாமலிருக்கிறது. எனவே இந்த நிலைமையில் பிரிவினை பற்றிய பிரஸ்தாபம் பெரிய தடையென்று கமிஷன் கருதியிருப்பது இயற்கைதான்.

பாஷாவாரிக் கொள்கைப்படி மாகாணங்களைப்பிரிப்பது தேசிய ஐக்கிய வளர்ச்சிக்கு ஒரு தடையாகுமா? தடைதான் என்றும், இதன்மூலம் தேசத்தின் ஒற்றுமையும், சக்தியும் சிதறி வீணான மனஸ்தாபங்கள் பெருகவே வழியேற்படும் என்றும் கமிஷன் வற்புறுத்துகிறது. கால் நூற்றாண்டுக்கு முன்னதாகவே காங்கிரஸ் பாஷாவாரி மாகாணக் கொள்கையை அங்கீகரித்திருப்பதை அக்கமிஷன் அறியாமலில்லை. ஆனால் இப்போதுள்ள நிலைமை வேறு என்றும், இந்த நிலைமையை மனதில் கொண்டே மேற்குறித்த கொள்கையை அமுலுக்குக் கொண்டு வருவது உசிதமா என்று யோசிக்க வேண்டுமென்றும் அக்கமிஷன் வாதிக்கிறது. அது கூறுவது போல உண்மையில் அக்கொள்கை தேசிய ஒற்றுமைக்குக் கேடு விளைவிக்கக்கூடியதா, அதைவிட நிர்வாக சௌகரியத்தைப் பிரதானமாகக்கொண்டு மாகாணங்களைப் பிரிப்பது தான் தேச முழுதுக்கும் க்ஷேமகரமானதா என்பதில் கருத்து வேறுபாட்டுக்கும் வாக்குவாதத்துக்கும் இடந்தரும் விஷயம்.

ஆனால் மாகாணப் பிரிவினைக்கு அடிப்படை எதுவானாலும், அப்பிரிவினைக்கு ஏற்ற சமயம் இது அல்ல என்று கமிஷன் வெளியிட்டுள்ள கருத்து கட்சி வாதத்திற்குப்புறம்பானது. பிரிவினைப்பித்தால் பிரத்தியட்ச நிலைமையைக் காணமுடியாத ஒரு சிலரைத்தவிர வேறு யாரும் இக்கருத்தை எதிர்ப்பதற்கில்லை. பிரிவினை வேலையை இப்போது மேற்கொள்வது உசிதமல்லவென்பதற்கான காரணம் தெளிவு. தற்போது நாட்டின் முன்னுள்ள பல பிரச்னைகள் இதைவிடப் பன்மடங்கு அவசரமானவை. தேச மக்களின் வாழ்வே

—அடுத்த பக்கம் பார்க்க.

அவற்றைப் பொறுத்திருக்கிறது. உதாரணமாக வெளியிலிருந்து தலையெடுத்துள்ள ஆபத்து இன்னும் தீரவில்லை. உள்நாட்டில் பொருளாதார இன்னல் உச்சநிலையில் நீடித்துக் கொண்டிருக்கிறது. பல வழிகளிலும் பண்ட உற்பத்தியைப் பெருக்கி, செலாவணி பெருக்கக் கேட்டைத் தணித்து, மக்களுக்கு உடனடியாக நிவாரணம் ஏற்படச் செய்தாகவேண்டும்.

தேசத்தின் சக்தி முழுதையும் ஒரு முகமாகத் திருப்பி இத்தகைய பிரச்னைகளில் ஈடுபடுத்தினாலேயே இவற்றைக் கூடிய விரைவில் சமாளிக்கக்கூடும். ஆனால் மாகாணப் பிரிவினை வேலையில் இப்போது ஈடுபடுவது அச்சக்தியைச் சின்னாபின்னமாக்கவே உதவும். தற்போது கோரப்படுவதுபோல் ஆறு புதிய மாகாணங்கள் ஏற்படுத்துவதெனில் அவ்வளவு இடங்களிலும் பல்வேறு இலாகாக்களுடனும், சட்டசபைகளுடனும் புதிய அரசாங்கங்கள் ஏற்படுத்துவதற்குப் பெருவாரியாகத் தொகை செலவு செய்தாகவேண்டும். தற்போதைய நிலையில் அவைகளுக்கு செலவுக்குப் போதிய வருவாய் கிடைக்க வழியில்லை. ஏற்கெனவே தாங்கமுடியாத வரிச்சுமையால் தவிக்கும் மக்கள்மீது இன்னும் சுமை ஏறும்; செலாவணி பெருக்கம் மேலும் பெருகுவதோடு ஜனங்களிடையே வீணான மனஸ்தாபங்களும் ஏற்படும் என்று அக்கமிஷன் சுட்டிக்காட்டியிருக்கிறது.

மாகாணப் பிரிவினை இப்போது உசிதமல்லவென்பதற்கு அக்கமிஷன் கூறியுள்ள இன்னொரு காரணம் சமஸ்தானங்களின் நிலையைப் பொறுத்தது. பிரிவினைக்கு எந்தக் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட போதிலும், சமஸ்தானங்களும் அதற்கு உள்பட்டால்தான் அதை குறைபாட்டுக்கு இடமின்றி நிறைவேற்றிவைக்கமுடியும். திருவாங்கூர், கொச்சி இவற்றை ஒதுக்கிவிட்டு ஒரு கேரள மாகாணமோ, மைசூரை ஒதுக்கிவிட்டு ஒரு கர்னாடக மாகாணமோ ஏற்படுவதென்பது எவ்வளவு மோசம் என்பது ஏற்கெனவே வெளியிட்ட கருத்தே. சமஸ்தானங்களின் நிலைமை அதிவேகமாக மாறி வருவதால், இவ்விஷயத்தில் யாரும் பொறுமை இழக்கத் தேவையில்லை. இறுதியாக எந்த அடிப்படையில் மாகாணப் பிரிவினை ஏற்பட்டபோதிலும், அதன் மூலம் தேசிய ஒற்றுமைக்கு எவ்விதத்திலும் ஆபத்து நேர இடமிருக்கக்கூடாதென்பதை நாட்டின் க்ஷேமத்தில் அக்கரையுள்ள ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்வர். ஆனால் பாஷாவாரி மாகாணங்கள் அமைந்தால் கேடுண்டு என்று வாதிப்பதும், அப்படி அமைந்தால் புதிய மாகாணங்களின் செல்வ நிலை சீர்குலையும் என்று சாதிப்பதும் போதிய ஆதாரங்களைத் தழுவிய அபிப்பிராயங்களாகக் காணவில்லை.

அட்டைப்படம்

இந்தியா சுதந்திரமடைந்த பின் முதன் முதலாக ஜெய்பூரில் 55-வது இந்திய தேசிய காங்கிரஸ் கூடுகிறது. டாக்டர் பட்டாபி சீதாராமய்யா தலைமையில் நடைபெறும் இந்தக் காங்கிரஸ், இந்தியா பெற்றுள்ள சுதந்திரம் சகல துறைகளிலும் பலப்படுவதற்கான முடிவுகளைச்செய்து தேசத்துக்கு வழிகாட்டவேண்டும்.

ராஷ்டிரபதியைக் காங்கிரஸ் கூடுமிடத்துக்கு வெள்ளி ரதத்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்ல ஏற்பாடாகியிருக்கிறது. இவ்விதழின் அட்டையில் டாக்டர் பட்டாபி மலர் மாலைகளோடும் மலர்ந்த வதனத்தோடும் காட்சி அளிக்கிறார்.



தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

6

நீதியில் வளர்ந்த சோகம்

★

வில்லை எறிந்துவிட்டுத் தேர்த் தட்டில் உட்கார்ந்திருந்த அர்ஜுனன் கண்களிலிருந்து அருவிபோல் நீர்பெருகிற்று. முகம் சோபை குன்றி விகாரமடைந்தது. நெஞ்சில் விபரீதமாகத் தோன்றிய கருணையில் வந்த துக்கத்தை நன்கு பிரதிபலிக்கும் கண்ணுடியாகவே அவன் முகம் காணப்பட்டது. இவற்றையறிந்த கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குக் கட்டளை வடிவில் நீதியை உபதேசித்தார்.

எத்தாலே உன்னைத் தசாவிடத்தே
இக்கலக்கம்
சத்தானர் சாராது சார்ந்ததுதான்–
இத்தாலே
மேலுலகம் இல்லை மிகுபழியாம்
பார்த்தனே
ஏலுமதன் றேகா ணிது.

(இ-ள்) சத்தானர் சாராது—ஞானிகள் அடையாத, இக் கலக்கம்—இந்த விபரீத ஞானம், தசா இடத்தே—தகாத காலத்தில், எத்தாலே உன்னைச் சார்ந்தது?—எவ்விதம் உன்னை வந்து அடைந்தது! இத்தாலே—இக் கலகத்தால், மேல்உலகம் இல்லை—மறுமையில் நன்மை இல்லை, மிகு பழியாம்—(இம்மையில்) மிகுந்த பழி உண்டாகும், பார்த்தனே!—அர்ஜுனு! இது—இவ்வாறு கலங்குவது, ஏலும் அதன்று காண்—பொருத்தம் அற்றது என்பதை அறிந்து கொள்.

3
குதஸ்த்வா கஸ்மல மிதம்
2
விஷமே ஸமுபஸ்திதம்
3
அநார்யஜுஷ்டம் அஸ்வர்க்யம்
அகீர்த்திகரம் அர்ஜுந.

(இ-ள்) அர்ஜுந—அர்ஜுநா!, அநார்யை:—தெரியாதவர்களால், ஜுஷ்டம் — போற்றப்படுவதும், அஸ்வர்க்யம்—ஸ்வர்க்கத்திற்கு விரோதியும், அகீர்த்தி கரம்—அபகீர்த்தியை உண்டாக்குவதும் (ஆகிய) இதம் கஸ்மலம்—இந்தச் சோகமானது, விஷமே—தகாத வேளையில் (சங்கடத்தில்,) குத:—ஏன், த்வா—உன்னை, ஸமுபஸ்திதம்—அடைந்தது?

உலகில் ஒவ்வொருவனும் ஒரு காரியத்தைச் செய்வதற்கு இச்சையே தூண்டுகோலாகவிருக்கும். நீ மேற் கொள்ளவிருக்கும் விபரீதச் செயல் மோக்ஷ இச்சையாலும் ஸ்வர்க்க இச்சையாலும் ஏற்பதற்கில்லை. கீர்த்தியில் இச்சை கொண்டும் ஏற்கத்தக்கதில்லை. இம்மையில் பொருள், போகம் இவற்றின் இச்சையாலும் கொள்ளத்தக்கதில்லை. எந்த விதமான ஆசைக்கும் இடமில்லாததால் இவ் விபரீதக் கலக்கம் உனக்கு எதனால் உண்டாயிற்று என்பார் 'எத்தாலே' என்றார். கீர்த்தியில் இச்சை இல்லாதவன் கீர்த்திதரும் செயலை விட்டிருக்கலாம். அச்செயலே விடுவது பழிக்கிடமாகுமானால் விடத்தகாது என்பதை ஆலோசித்துப் பார்த்தால் அறியலாகும் என்று கூறுவார் 'காண்' என்றார். மேற்கொண்ட கருமத்தை விடுவதால் வரும் இழிவை சிந்தித்தால் நீயே காண்பாய் ஆதலால் அச்சத்தை விடு. தாமதம் இன்றிப் போருக்கு எழு என்று கிருஷ்ணன் நீதியை தர்க்க ரீதியாகச் சுருங்க உபதேசித்தார். அதன் முடிவைக் கட்டளை வடி
2
விலே 'எழு' 'உத்திஷ்ட' என்று வெளியிட்டார்.

அவ்வுத்திரவை அர்ஜுனன் அப்பொழுதே ஏற்றுப் போரைத் தொடங்கி இருந்தால், இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் பெரிய அளவில் கீதை தோன்றியிராது. 'ஒன்றைச் செய். ஒன்றைச் செய்யாதே' என்ற தோரணையில் வரும் உபதேசம் நன்மை பயப்பதாயிருந்தாலும், எப்பொழுதும் உலகில் அனுஷ்டானமாக வருவதில்லை. அத்தகைய உபதேசங்களைச் சட்டத்தின் பெய

ரால் மக்களைக் கைக்கொள்ளுமாறு வற்புறுத்தினாலும் காரியகரமாவதில்லை. இம்மையிலோ, மறுமையிலோ ஹிதம்பயக்கும் நீதிகளையும் விவேகத்திற்கியைந்த விஷயமாக்காமல் பயத்தாலும் நம்பிக்கையாலும் பலவந்தத்தாலுமே மேற்கொள்ள நேர்ந்தால் அது சோகத்தையே பெருக்கும்.

ஆகவே ‘கர்மத்தை விட்டால் பழிவரும் கர்மத்தைக் கைக்கொள்’ என்ற கிருஷ்ணனின் உபதேசம் அர்ஜுனனின் சோகத்தையே பெருக்கியது. கிருஷ்ணனின் உத்திரவுப்படிப் போர் செய்தால், நேரும் சம்பவங்களை நினைக்க நினைக்க அர்ஜுனனுக்குச் சோகம் வளர்ந்துகொண்டே போயிற்று. அவன் கிருஷ்ணனுக்குப்பதில் கூறும் வார்த்தைகளிலும் முன்னிலும் பன்மடங்கு சோகம் ததும்புவதைக் காணலாம்.

தொழப்படு மேலோரைத்
தொலையாது உலகில்
எழப்படுதல் நன்றே யிரப்பில்—
விழப்படுத்தி
வாய்ந்த பொருள் காமித்த
மற்றவரை யக்குருதி
தோய்ந்ததுவோ போகத்தின்
துய்ப்பு.

(இ-ள்) தொழப்படு மேலோரை—வணங்கற்குரிய(தந்தை, ஆசாரியர் போலும்) பெரியோரை, தொலையாது—கொல்லாமல் (விலகி), உலகில் இரப்பில் எழப்படுதல் நன்றே—உலகில் பிக்ஷை எடுப்பதைமேற்கொண்டு பிறரால் பரிகசிக்கப்படுவது சிறந்தது, வாய்ந்த பொருள் காமித்தவரை—அமைந்த பொருளில் ஆசை கொண்டவர்களை, விழப்படுத்தி—(போரில்) கொன்று, அக் குருதி தோய்ந்ததுவோ-அவ்விரத்தத்தில் முழுகி வருவதுதானா, போகத்தின் துய்ப்பு?-இன்பத்தின் அனுபவம்?



“என்னண்ணா! நா இட்டண்ணாழி ஷொன்னதெல்லாம் புழிஞ்சுதா.”

“நீர் வாயிலே இருக்கிறதையெல்லாம் துப்பிட்டு எல்லாத்தையும் முதல்லேந்து சொல்லுங்கோ. இது வரைக்கும் ஒரு அக்ஷரம் கூட புரியலே..”

3
குரூந் அஹத்வா ஹி மஹாநு
4
பாவாந்
4 4
ஸ்ரேயோ போக்தும் பைக்ஷ
மபீஹ லோகே
2
ஹத்வார்(த்)த காமாம்ஸ்து
குரூந் இஹைவ
4 4 3 4 3 3
புஞ்ஜீய போகாந் ருதிரப்ரதிக்
4
தாந்

(இ-ள்) மஹாநுபாவாந்-பெரியோர்களான. குரூந்-ஆசாரியர்களை, அஹத்வா-கொல்லாமல், இஹைவலோகே-இவ்வுலகத்தில், பைக்ஷம்-பிச்சை அன்னத்தை. போக்தும் அபி—புசிப்பதும், ச்ரேய: ஹி-நல்லதல்லவா? அர்த்தகாமாந்-செல்வத்தை விரும்பிய, குரூந் ஹத்வா-குருக்களைக் கொன்று, ருதிரப்ரதிக்தாந்-ரத்தத்தால் பூசப்பட்ட போகங்களை, இஹைவ-இங்கேயே, ஸ்தித்வா-இருந்து, கதம் புஞ்ஜீய-எப்படி அனுபவிப்பேன்?

‘புகழை விரும்பிப் போரைச் செய். பழிக்கிடமாகப் போரைக் கைவிடாதே’ என்ற கிருஷ்ணனின் உபதேசம் அர்ஜுனன் சோகத்தைப் பெருக்கியதோடு விபரீதமாகவும் கொள்ளத் தூண்டிற்று. புகழும் வேண்டாம், பழியும் வரட்டும் அதுவே நன்மை என்ற விபரீத உணர்வு உறுதிப்பட்டே அர்ஜுனன் கண்ணனுக்குப் பதில் கூறுகிறான். விபரீத உணர்வு உறுதிப்படப்பட, சோகம் பெருகுவது உலக இயற்கை. சோகப்பெருக்கில் வரும் கலக்கமே அர்ஜுனன் பேச்சில் பெரிதும் காணப்படுகிறது.

போரில் எதிரியாக நிற்போர் தான் வணங்கற்குரிய பெரியோர். அவர்களை வணங்காதிருத்தல் தவறு. அதனினும் தவறு அவர்களைக் கொல்லுதல். அதனினும் தவறு அவர்களைக் கொன்றதால் வரும் செல்வத்தைக் கொண்டு போகம் அனுபவித்தல் என்று அலை அலையாய் அர்ஜுனன் உள்ளத்தில் நினைவுகள் எழுகின்றன. இதனடுவே தனக்கு வெற்றி வருவதாயினும் அதற்குமுன் தன் மரியாதைக்குரிய பெரியோருக்கு ஏற்படவிருக்கும் ஆபத்துக்களும் அவன் மனக் கண்ணுக்குப் புலனாகின்றன. அனைவரையும் வெட்டியும் குத்தியும் பெருகும் ரத்த வெள்ளத்தில் தான் நீந்தியே போகக் கரையை அடையவிருக்கும் அவசியம் யுத்தம் செய்வதில் இருப்பது தெரிய வருகிறது. கத்தியும் ஈட்டியும் அம்பும் கொண்டு பெரியோர் உடலை அழிப்பது வெறுப்பிற்கும் சோகத்திற்கும் இடமாகிறது. அதுவே பழியாகவும் அர்ஜுனனுக்குத் தோன்றுவதால் போரை விட்டுப் பிக்ஷையெடுத்துப் பழிக்கிடமாக வாழ்வது அதினும் மேல் என்று தோன்றவே ‘உலகில் எழப்படுதல் நன்றே இரப்பில்’ என்றான்.

சோகமிகுதியில் கலக்கமுற்றிருந்த அர்ஜுனன் எவ்வகையிலானும் தெளிவுபெற விரும்பினான். அதனால் தெளிவுபெற விரும்பிக் கண்ணனைச் சரண்புகுந்து தன்னைத் தேற்றுமாறு வேண்டினான். கண்ணன் அப்பொழுது அர்ஜுனன் பேச்சில் தோன்றிய சோகம் அபிமானமாகிய வேரைப் பற்றியிருப்பதைக் கண்டு கொண்டார். அதை வேருடன் களையத் தீர்மானித்து உபதேசிக்க வாரம்பித்த பகுதியே சாங்க்ய யோகம் எனப்படுகிறது.



சமயசஞ்சீவி

—நியாயவாதி—

1

“உன் மாமியார் வந்திருக்கிறாளாமே?” என்று கேட்டாள் பொன்னம்மாள், தன் மகன் கோவிந்தனை.

ஏதோ பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த அவன், அக்கரை கொள்ளாதவன்போல் “அப்படியா?” என்றான்.

“ஆமாம். இப்படி அவள் எதற்கு அடிக்கடி ஊரிலிருந்து வருகிறாள்? உன் அகமுடையாளை நான் என்ன அடித்துத் தின்றுவிடுகிறேனா?” என்று கூறிய பொன்னம்மாள், தன் முகத்தைச் சுளித்துக்கொண்டாள்.

‘அவளுக்கு அண்ணா வீடு இந்த ஊரில் இருக்கிறது. அங்கே வருகிறாள். வந்தால் பெண்ணைப் பார்க்காமல் போக முடியுமா? அதில் என்ன குற்றம் இருக்கிறது?” என்று பதிலுக்குக் கேட்டான் கோவிந்தன்.

பொன்னம்மாள்: “அது என்னமோ அப்பா! போன மாதம் உன் மாமியார் வந்து பெண்ணைப் பார்த்துவிட்டுப் போனாள். சரியாய் முப்பது நாள் ஆகவில்லை. மறுபடியும் வந்துவிட்டாள். அக்கம் பக்கத்தார் என்னென்ன கேள்விகள் என்னைக் கேட்கிறார்கள் தெரியுமா?” என்றாள்.

“அவர்களை நீ லட்சியம் செய்ய வேண்டாம்” என்று கோவிந்தன் தாயுடன் கூறி மேலேசம்பாஷணை தொடர்வதற்கு முற்றுப் புள்ளி வைத்தான்.

2

மேற் குறிப்பிடப்பட்ட சம்பாஷணையை உள் அறையிலிருந்து கமலா கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. தன் மாமியாரான பொன்னம்மாளை அவள் எவ்வளவு திருப்தி பண்ண முயன்றும் பயனில்லை. மாமியார், மாமியார் சுபாவத்தைத்தான் காட்டினாளேயன்றி தாயாய்விடவில்லை.

கமலா நல்ல புத்திசாலியான பெண். அடக்கமும் பணிவும் உடையவள். கணவனிடம் அன்பு, மாமியாரிடம் மரியாதை.” பொன்னம்மாளின் அன்பை அவளால் அடைய இயலவில்லை. மாமியார் ஏதேனும் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டேயிருப்பாள். அவள் கமலாவை வையமாட்டாள், திட்டமாட்டாள். அவள் பேச்சு மிகவும் மிருதுவானதாயிருக்கும். ஆனால், வாழைப்பழத்தில் ஊசியைச் செருகுவதுபோல் இருக்கும் அதன் தன்மை.

கோவிந்தன் மனைவியிடம் மிகவும் அன்பாகவே இருந்தான். தன்னால் கூடியமட்டும் தன் தாயின் மனோபாவத்தை மாற்ற முயன்றான். ஆனால், அவனால் முடியவில்லை. தாய்க்கு மருமகளிடம் மகன் கொண்டுள்ள மோகம் நன்கு தெரியும். கமலாவிடம் அவளுக்கு உள்ளூர ஆத்திரம். சந்தர்ப்பம் நேருந்தோறும் அவள் அதைக் குறிப்பாய்க் காட்டிக்கொண்டே வந்தாள். கோவிந்தன் தாயிடமும் சரி, மனைவியிடமும் சரி, எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இருந்துகொண்டு தனது பொறுமையையும் நிதானத்தையும் இழக்காமல் நாஸூக்காய் இருந்து வந்தான்.



சாப்பிடுகிறவர்:—சொந்த வெண்ணெயை உருக்கின ‘ஸ்பெஷல் நெய்’யுன்னு நீ சொன்னபோது நான் நம்பலே. ஆனா இப்போ நீ குத்தின மோரைப்பார்த்தப்புறம் அதைப் பரிபூரணமா நம்பறேன்......”

3

கமலாவின் தாய் அப்பொழுது வந்ததற்குக் காரணம், மகளை ஊருக்கு அழைத்துக்கொண்டு போவதற்காகத்தான் சில நாட்களுக்கு முன் அவள் ஊருக்கு ஒரு ஆயுர்வேத வைத்திய நிபுணர் வந்திருந்தார். அவரிடம் அபூர்வமான மருந்துகளும் மூலிகைகளும் இருந்தன. பிரபல மேல் நாட்டு வைத்திய நிபுணர்கள் கைவிட்ட "கேஸ்"களையும் அவர் சொஸ்தம் பண்ணினதால் அவர் பெயர் வெகு சீக்கிரத்தில் பிரபலமாயிற்று. கமலாவுக்கு இருமல் வியாதி. அவளை அவரிடம் காட்டவேண்டுமென்பது அவள் தாயின் அவா.

கமலாவின் தாய் சம்பந்தியம்மாவான பொன்னம்மாளை அணுகி, அவளது அனுமதியைக் கேட்டாள். அதற்கு பொன்னம்மாள், "என் காதில் ஒன்றையும் போட வேண்டாம். உங்கள் பாடு. உன் மாப்பிள்ளை பாடு. அவன் அனுமதி கொடுத்தால் மகராஜியாய்க் கூப்பிட்டுக்கொண்டு போகலாம் உங்கள் பெண்ணை" என்று கூறிவாயை மூடிக்கொண்டாள்.

4

சற்று நேரத்துக்குப்பின் கமலாவின் தாய் தனது சகோதரனை அழைத்துக்கொண்டு கோவிந்தனிடம் வந்தாள். அவள், விஷயங்களையெல்லாம் கூறி, கமலாவை ஊருக்கு அழைத்துப் போகவேண்டிய அவசரத்தை வற்புறுத்தினாள். ஆனால், அச்சமயம் கோவிந்தனுக்குத் தன் மனைவியை அனுப்ப இஷ்டமில்லை. கமலாவுக்கு இருமல் உபத்திரவம் என்பது அவனுக்குத் தெரியும். அதற்காக அவள் மருந்துகள் வாங்கிச் சாப்பிட்டும் தகுந்த பலன் ஏற்படவில்லையென்பதையும் அவன் அறிவான். அந்த நிலைமையில் மனைவியின் நன்மையை உத்தேசிப்பின் அவளைத் தாயுடன் அனுப்புவதே அவனது கடமை. இது அவனது மனதில் பட்டபோதிலும், இந்தத் தடவை தனது தாயைத் திருப்தி செய்ய வேண்டி அவன் முற்பட்டான். கமலாவை விட்டுப் பிரிந்திருக்க அவனுக்கு மனமில்லை. அதுவும் அவனது மனப்போக்குக்கு ஒரு காரணம்

எனவே, அவன் கண்டிப்பாய், "இப்போது கமலாவை அனுப்ப முடியாது" என்று கூறினான். அவன் மாமியாரின் சகோதரன் எவ்வளவோ மன்றாடிப் பார்த்தான். மாப்பிள்ளை அசைந்து கொடுக்கவில்லை.

5

இனி வற்புறுத்துவதில் பிரயோசனமில்லை என்று மனம் வருந்திய இருவரும் எழுந்த சமயம், வாசலில் வண்டி நின்றது. அதிலிருந்து இறங்கினவள் வேறு யாருமல்ல. கோவிந்தனின் தங்கை லட்சுமிதான். அவள் ஊரிலிருந்து நேராக ரயிலில் வந்து, அங்கே வந்து சேர்ந்தாள்.

கோவிந்தனும் பொன்னம்மாளும் ஆச்சரியத்துடன் "லட்சுமி! என்ன இப்பொழுதுதான் வருகிறாயா? என்ன விசேஷம்? என்று கேட்டார்கள்.

லட்சுமி: "இப்பொழுதுதான் வருகிறேன். தபால் எழுத எனக்குச் சாவகாசமில்லை" என்று கூறிவிட்டு அங்கே இருந்த கமலாவின் தாயைப் பார்த்து, 'நல்ல வேளை, நீங்கள் இருக்கிறீர்களா? சரியான சமயத்தில்தான் வந்தேன். உங்கள் ஊரில் ஒரு ஆயுர்வேத வைத்தியர் வந்திருக்கிறாராயே? அவரிடம் என் உடம்பைக் காண்பிக்கவேண்டும். எனக்கு அடிக்கடி தலை சுற்றல், குமட்டல், வாந்தி இவை வருகின்றன. அதற்காக நான் அவரிடம் மருந்து சாப்பிட 'அவர்' என்னை இங்கே அனுப்பினார். மன்னியைக் கூப்பிட்டுக்கொண்டு போகப் போகிறீர்களாமே உங்கள் பிள்ளை ஊரிலிருந்து அவருக்கு எழுதினார். எப்பொழுது புறப்படப் போகிறீர்கள்? மன்னி எங்கே? என்ன அண்ணா விழிக்கிறாய்?" என்று கேட்டாள். கோவிந்தன் முகத்தில் அசடு வழிந்தது. பொன்னம்மாள் முகத்தில் கோபம் தோன்றியது. ஆனால், கமலா தனது நாத்தனாரை சமய சஞ்சீவி என்று வாழ்த்தினாள்.



மனம்போல....

தில்லைவாசி

அவன்

அக்டோபர் 8, 9 தேதிகள். சர்க்கார் விடுமுறை நாட்கள்.

இந்த இரண்டு நாட்களோ என்னை முழுக்க முழுக்க வேலை வாங்கிய நாட்கள். காலை முதல் சாயந்திரம் வரையில், வீடு வீடாக நான் படியேறி இறங்கிய நாட்கள், ஆம். நான் ஒரு வாக்காளர் பதிவாளனாகயிருந்த அந்த இரண்டு நாட்களைத்தான் சொல்லுகிறேன்.

வெள்ளையர் ஆட்சியினின்று விடுபட்ட இந்தியாவின் புதிய அரசியல் நிர்ணயம், இருபத்தொரு வயதுவந்த ஆண்களும், பெண்களும், வாக்காளர்களாக உரிமையுண்டு என்று திட்டமிட்டு விட்டது. அத்திட்டத்தின்படி வாக்காளரைப் பதிவு செய்யும் வேலையும் எனக்குக் கிடைத்தது.

முதல் நாள் எங்களுக்குப் பதிவு செய்யும் முறையைப்பற்றி சொல்லிக் கொடுத்தார்கள். கோஷா ஸ்திரீகளைப் பதிவு செய்வதற்கு உதவியாக பள்ளிக்கூடத்து உபாத்தியாயினிகள் வேறு.

எனக்கு உதவிக்காக மிஸ். சுலோசனாவை நியமித்திருந்தார்கள். அவளும் ஒரு உபாத்தியாயினி. அவளுடைய உதவி அவசியம்வேண்டும்பொழுது போய்க்கூப்பிட்டுக் கொள்வதற்கு அவளுடைய விலாசமும் எனக்குக் கொடுத்திருந்தார்கள்.

முதலில் இந்தவேலை வேடிக்கையாகயிருந்தது. சுலபமாகவும் பட்டது.

வேலையோ நினைத்தபடி சுலபமாகயிருக்கவில்லை, வேடிக்கையாகவும் தோன்றவில்லை.

அடேயப்பா! அந்த எட்டாம் தேதி வேலையை நினைத்தால் இப்பொழுதுகூட என் கால்கள் வலிக்கின்றன. ஒரே தெருவில்தான் எத்தனை தரம் சுற்றுவது? ஒரே வீட்டில்தான் எத்தனை தரம் ஏறி இறங்குவது? மனிதர்களில்தான் எத்தனை விதம், எத்தனை குணம்?

கோபக்காரர்களிடமும் பழகி விட்டேன். பயந்த சுபாவமுடைய மனிதர்களையும் சந்தித்து விட்டேன்.

வீட்டுக்கே வராமல் பொழுதைப் பணமாகக் கணக்குப்பண்ணக்கூடியவர்களையும், பிழைப்பிற்காக மணிக்கும் பணத்திற்கும் அடிமையாகி உழைக்கும் உழைப்பாளிகளையும் சந்திக்காமலேயிருந்திருக்கிறேன்.

நான் ஒரு வீட்டுக்குப்போனேன். வாக்காளர் பதிவுசெய்வதற்காகத்தான். வீடு வெளித் தோற்றத்திற்கு மிகவும் சிறியதாகவிருந்தது. உட்புறமும் சிறிய அளவில்தானிருக்கும் என்று நினைக்கிறேன். அதில்தான் எத்தனை குடித்தனங்கள்! எண்ணிக்கையில் ஏழு! ஒவ்வொரு குடும்பத்திலும் மூன்று, நான்கு பேர்கள். அத்தனை பேர்களும் அந்தக் "குகையில்" எப்படித்தான் வசித்தார்களோ? எங்கு சாப்பிடுவார்களோ? எங்கு படுத்து உறங்குவார்களோ?

இந்த ஒரு வீட்டிலிருக்கும் நபர்களைப் பதிவு செய்வதற்குள் எனக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. இரண்டு மணி நேரத்தை அங்கே கழிக்கவேண்டியதாயிற்று. அப்படியானாலும் எல்லோரையும் ஒரே சமயத்தில் பதிவு செய்ய முடிந்ததா? அந்த ஒரு வீட்டிற்கே இரண்டு, நாட்களிலும் பத்துத் தடவைகள் போய் வந்திருப்பேன். இரண்டு மூன்று பேர்கள் என்னை ஏய்த்தே விட்டார்கள். என் கண்ணில் பட மறுத்து விட்டார்கள்! புதிய அரசியல் திட்டத்தில் பங்கு வேண்டாம் என்று நினைத்து விட்டார்களோ என்னவோ, அவர்களை என்னால் சந்திக்க முடியவில்லை. அவர்களும் வாக்காளர்களாகப் பதிவு ஆகவுமில்லை.

இந்த ஒரு வீட்டைப்போல் இன்னும் எத்தனையோ வீடுகள். இப்படி எத்தனையோ பேர்கள் பதிவு ஆகாமல் பாக்கியிருந்தார்கள்.

நான் போகிற சமயம் பார்த்து ஒருவர் சாப்பிட்டுக்கொண்டிருப்பார். இன்னொருவர் குளித்துக் கொண்டிருப்பார். அடுத்த வீட்டு நபர்களைக் குறித்துக்கொண்டு விட்டு, மீண்டும் சாப்பிட்டுக் கொண்டிருந்தவரைப் பதிவு செய்யலாம் என்று போனால், அதற்குள்ளாக அவர் சாப்பிட்டு விட்டு தன் காரியமாக வெளியில் போயிருப்பார்.

குளித்துக்கொண்டிருப்பவர் லேசில் வெளியே வரமாட்டார், காத்திருப்போம் என்று வெளித் திண்ணையில் உட்கார்ந்திருந்தாலும், குளித்தவர் "பூஜை அறையில் உட்கார்ந்திருக்கிறார்" என்று சொல்லுவார்கள். மேலும் உட்கார்ந்திருந்தால், அரை மணிக்குப் பிறகு "சாப்பிடுகிறார்" என்று பதில் வரும். இன்னும் சில வீடுகளுக்குப் போய்த் திரும்பி வந்தாலும், அவர் சாப்பிட்டுக்கொண்டுதானிருப்பார், என்னதான் சாப்பிடுவாரோ? சாப்பிட்டு முடிப்பதற்கு ஒரு மணி நேரமா?

கடைசியாக அவரைப் பதிவு செய்து, கையெழுத்துப் போடச் சொன்னால் கையெழுத்துப் போட மறுத்து விட்டார். அவர் ஒரு சந்தேகப் பேர்வழி; பயந்த சுபாவமுடையவர்; விஷயத்தை அவருக்கு விளக்கச் சொல்ல இன்னொரு அரை மணி நேரத்தை அங்கே கழிக்க வேண்டியதாயிற்று.

இப்படி எத்தனையோ பேர்கள். ஒரு வீட்டில் என்னிடம் சண்டைக்குக்கூட வந்து விட்டார் ஒரு மனுஷர்.

ஒருவாறாக முதல் நாளும் முடிந்து விடுகிறது. தெருவிலிருந்த முக்கால்வாசிப் பேர்கள் தான் பதிவானார்கள்.

"முதல் நாளிலேயே எல்லோரையும் பதிவு செய்துவிடவேண்டும். மறுநாள் முழுதையும் பூரண ஓய்வுக்காக எடுத்துக்கொள்ளலாம்" என்றுதான் எண்ணியிருந்தேன். அந்த நினைப்போடுதான் வேலையைத் தொடங்கினேன். அன்று முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போதோ ஒரே அலுப்பு; களைப்பு; வேலை இன்னும் பாக்கியிருக்கிறதே என்று கவலை.

மறுநாள் மிஸ். சுலோசனாவின் உதவி எனக்கு அவசியம் தேவையாகயிருந்தது. தெருவில் மூன்று நான்கு கோஷா ஸ்திரீகள் வீடுகளிருந்தன. அவர்களைப் பதிவு செய்துவிட வேண்டும்.

அன்று காலையிலேயே அவள் வீட்டுக்குப் போனேன். எனக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தாளோ என்னவோ, எனக்குப் பெரிய வரவேற்பு நடந்தது. வீட்டு வாயிலிலேயே சந்தித்துவிட்டேன். இதற்கு முன்பின் பேசிப் பழகியில்லாத எனக்கு அவள் வீட்டில் நிறைய உபசரணைகள் நடந்தன.

வீடு சிறிய வீடுதான். துணைக்கு அவள் தாய் கூட இருந்தாள். எளிய வாழ்க்கை, ஏழ்மையிலும் மகிழ்ச்சி. எப்பொழுதும் மலர்ந்த முகம். வசீகரம் நிறைந்த உருவம், பிரம்மன் கையின் உன்னத சிருஷ்டி!

நான் ஒரு விதத்தில் அரசாங்கத்தின் ஊழியன். அரசாங்கம் முதல் தேதி கொடுக்கும் சம்பளத்திற்காக உழைக்கக் கடமைப் பட்டவன்.

அவளும் அரசாங்கத்தின் இன்னொரு துறையில் ஊதியம் பெற்று ஊழியம் செய்பவள்.

எனக்கு உபசாரம் செய்வதற்கோ, வரவேற்பு அளிப்பதற்கோ அவளுக்கு ஏன் இவ்வளவு அக்கரை?

இசு

எனக்கிட்டிருந்த வேலையைச் செய்ய நான் கடமைப்பட்டிருந்தேன். அவளுக்குப் பணித்திருந்தபடி அவள் செய்தாகவேண்டும்.

ஒருவருக்கொருவர் சொந்த முறையில் எந்த உதவியையும் நாடவில்லை. இருந்தும் எனக்கு அவள் வீட்டில் உபசாரமும், மரியாதையும்.

புது மனிதர்களுக்கு அளிக்கும் மரியாதைதான். இப்படி உபசரித்து, மரியாதை செய்கிற காரணத்தினால்தான் இந்தியாவின் பெருமை உலகமெங்கும் பரவியிருக்கவேண்டும். இதில் சந்தேகமிருக்க முடியாது.

அவளும் சரி, அவள் தாயாரும் சரி என்னிடம் பேசிய வாஞ்சை மிகுந்த, கனிவுடன் கூடிய அன்பு நிறைந்த வார்த்தைகளை என்னால் மறக்கமுடியாது.

அவள்

எங்கள் பள்ளிக்கூடத்திலிருக்கும் நான்கு உபாத்தியாயினிகளில், என்னைமட்டும் வாக்காளரைப் பதிவு செய்யும்படி கட்டளையிட்டிருந்தார்கள்.

நான் கணபதியுடன் கூடப் போய் வாக்காளர்களைப் பதிவு செய்வதில் அவருக்கு உதவிசெய்ய வேண்டும். அவருடன்கூட தெருச் சுற்றி வரவேண்டும்.

அன்று முனிசிபல் ஆபீசுக்கு என்னைப்போல் மற்ற பள்ளிக்கூடத்து உபாத்தியாயினிகளும் வந்திருந்தார்கள். ஆடவர்களும் பலர் பல ஆபீசுகளிலிருந்தும் வந்திருந்தார்கள்.

அத்தனைபேர்களில் கணபதியைக் காண்பித்து எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். கோஷா ஸ்திரீ வாக்காளர்களைக் குறித்துக்கொள்வதற்கு அவருக்கு நான் உதவி செய்தாகவேண்டும். அவர் கூப்பிடும்போது அவருடன் கூடப்போக வேண்டும்.

அவரை அங்கு சந்தித்ததுமே என் உள்ளத்தில் ஏதோ ஒரு கிளர்ச்சி உண்டாயிற்று. ஆரம்பத்தில் தெருச் சுற்றும்வேலை எனக்குப் பிடிக்காதிருந்தது. அவரைச் சந்தித்து அவருடன்கூட நான் போகவேண்டும் என்று ஏற்பட்டவுடன் "எல்லாம் நல்லதிற்கே" என்று மனம் குதூகலப்பட்டது.

அந்த இரண்டு நாட்களிலும் அவருடைய வருகைக்காக எந்த நிமிஷமும் தயாராகக் காத்திருந்தேன். முதல் நாள் அவர் வரவேயில்லை.

மறுநாட்காலை எதிர்பார்த்திருந்தபடியே, வீடு தேடி வந்துவிட்டார்.

அவருந்தான் எப்படி அவசரப்பட்டார் வெளியில் போவதற்கு. கடமையைப் பெரிதென்று மதிக்கக்கூடியவர் என்பது எனக்கு அந்த நிமிஷமே நன்கு தெரிந்துவிட்டது. அவருக்குக் கொஞ்சம் காப்பிக்கொடுப்பதற்குள் எனக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது.

பேசுவதற்கே கூச்சப்பட்டார். கேட்கிற கேள்விகளுக்குத்தான் பதில் சொன்னார். அம்மாவும் அந்த சில நிமிஷ நேரத்திற்குள் அவரைப்பற்றிப் பல கேள்விகள் கேட்டுத் தெரிந்துகொண்டாள்.

அவருக்கு ரிஜிஸ்டிரார் ஆபீசில் குமாஸ்தா வேலை. சொந்த ஊர் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் குளித்தலை. தான் மட்டும் இங்கு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு உத்தியோகம் பார்த்து வந்தார். தாய் இருக்கிறாள். விவாகமான இரண்டு தங்கைகளுண்டு, குடும்பத்திற்கு அவர்தான் தலைவர். எதையும் சுதந்திரமாகச் செய்ய அவருக்கு உரிமையிருந்தது. இன்னும் அவருக்கு விவாகமாகவில்லை. தாயார் எங்கெங்கோ பெண் பார்த்துக் கொண்டு வருகிறாள். எந்தப் பெண்ணும் கணபதிக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தினால் கல்யாணம் இவ்வளவு நாள் தள்ளிக்கொண்டு வந்துவிட்டது.

அன்று இரண்டு பேருமாகத் தெருச் சுற்றினோம். எல்லா கோஷா ஸ்திரீகள் வீட்டுக்கும் சென்று பதிவு செய்தோம். அப்பொழுதெல்லாம் அங்குமிங்கும் ஒவ்வொரு வார்த்தைகள்தான் பேசினோம்.

அவரோ தனக்கிடப்பட்டிருந்த காரியத்தில் கண்ணுயிருந்தார். என் சிந்தனை வேறெங்கேயோ லயித்துப் போயிருந்தது.

சிற்சில சமயம் எங்கள் கண்கள் மட்டும் பேசிக்கொண்டன. கண்கள் இம்மாதிரி பேசிக்கொண்டதினால் எங்கள் வாய்ப் பேச்சுக்கு இடமில்லாமலே போய்விட்டது போலும்!

நான் அவருக்கு உதவி செய்ய வேண்டியது பூர்த்தியானதும், விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பினேன். அவரோ இன்னும் மற்ற வீடுகளுக்குப் போய்க்கொண்டிருந்தார்.

வீட்டுக்குத் திரும்பி வந்ததும் என் உள்ளம் பறிபோனதை யறிந்தேன். இத்தனை நாளும் எவ்விதமான அலைகளும் என் மனதில் அடித்ததை நான் உணர்ந்ததில்லை.

இன்றோ என்ன அலைகள் மாறி மாறி அடித்துக்கொண்டேயிருக்கின்றன. மழையை நோக்கி வாடும் பசும் பயிர்போல, என் உள்ளமும் கணபதியின் கருணை மழைக்காகக் காத்து ஏங்கிக் கொண்டிருந்தது.

அவன்

இரண்டு நாட்களிலும் ஓயாமல் ஒழியாமல் வாக்காளர்களைப் பதிவு செய்தும்,தெருவில் இன்னும் இருபது, முப்பது பேர்கள் பாக்கியிருந்தார்கள். என்ன சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்தும் அவர்கள் என் கண்ணில் தென்படவேயில்லை.

என்னால் கூடுமானவரைக்கும் கடமையை உண்மையாய்ச் செய்தோம் என்ற மனத்திருப்தியுடன் வாக்காளர் பதிவு செய்திருந்த புத்தகங்களை மேல் அதிகாரியிடம் கொடுத்துவிட்டேன்.

அத்துடன் நாட்கள் சென்றுகொண்டிருந்தன. மனம் மட்டும் சதா சர்வ காலமும் மிஸ். சுலோசனாவைப்பற்றியே சிந்தனையிட்டுக் கொண்டிருக்கும். ஏனோ தெரியவில்லை, முதல் சந்திப்பிலேயே மனம் அவளிடம் உறவுகொள்ள ஆரம்பித்துவிட்டது.

நான்தான் அவளை விரும்புகிறேன். வாழ்நாள் பூராவும் துணைவியாகக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவள் என்ன நினைப்பாளோ? என்னை அவளும் விரும்புகிறாள் என்று எப்படி உறுதியாகச் சொல்லமுடியும்?

அன்றைக்கு எனக்குப்பண்ணின உபசாரங்களுக்கு எல்லாம் என்ன அர்த்தமிருக்கமுடியும்? மாமனார் வீட்டுக்கு வந்த மாப்பிள்ளையை உபசரிப்பதுபோலல்லவா எனக்கு எல்லாம் செய்தார்கள்!

சுலோசனாவின் தாய் ஏன் என்னைப்பற்றி அத்தனை கேள்விகளாகக் கேட்டுத் துளைத்துவிட்டாள்?

மேலும் பற்பல சிந்தனைகளுடன் நாட்கள் உருண்டோடிக்கொண்டிருந்தன.

மாகாணம் பூராவும் வாக்காளர் பதிவானதைப்பற்றி பத்திரிகைகளில் பலவிதமாகத் தகவல்கள் வந்துகொண்டிருந்தன. நாற்பது சதவிகிதம் பதிவாகியிருக்கிறது. சரியான முறையில் வாக்காளர்களைப் பதிவு செய்யவில்லை என்று சிலர் வாதித்தார்கள்.

இதன் விளைவாக மற்றும் ஒரு முறை விட்டுப்போன வாக்காளர்களைப் பதிவு செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள்.

மீண்டும் எனக்கு, இந்த வேலை கிடைத்தது. இந்தத் தடவையோ ஐந்தாறு தெருக்களைச் சேர்த்துக் கொடுத்து விட்டார்கள். இவை





களிலோ தெருவுக்குத் தெருவு, நாலைந்து வீட்டிற்கு ஒருவீடாக கோஷா வீடுகள் அமைந்திருந்தன. என் அதிர்ஷ்டமாகத்தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால், மீண்டும் என் உதவிக்கு மிஸ். சுலோசனாவை ஏன் ஏற்பாடு செய்வார்கள்?

மறுபடியும் ஒரு வாரத்திற்கு இந்த வேலை. இந்தத் தடவையோ காலை 7–மணி முதல் 10–மணி வரைக்கும், சாயந்திரம் 6–மணி முதல் இரவு 9–மணி வரைக்கும், தெருத்தெருவாய், வீடுவீடாய், சுற்றிப் பதிவு செய்தாகவேண்டும். இதற்கு முழுக்க முழுக்க மிஸ். சுலோசனாவின் உதவி எனக்கு வேண்டியிருந்தது.

வாக்காளர்களை ஒருவர் விடாமல் பதிவு செய்துவிட்டேன். கோஷா ஸ்திரீகளில்கூட யாரும் பாக்கியில்லை.

நானும் மிஸ். சுலோசனாவுடன் அதிகம் பழகும்படி இம்முறை ஏற்பட்டுவிட்டது. இரண்டு, மூன்று தடவைகள் அவள் வீடு தேடிப்போகும்படி எனக்கு ஏற்பட்டது.

என் வாயை ஏதாவது அவள் தாயார் கிண்டிக்கொண்டேயிருப்பாள். ஏதாவது ஒரு பதிலை அவளுக்குச் சொல்லி வைப்பேன். என்னை சிறு வயது முதல் தூக்கி வைத்து வளர்த்தவள்போல் என்னிடத்தில் அவ்வளவு வாஞ்சையாகயிருந்தாள் அவள் தாய். மிஸ். சுலோசனாவோ என்னிடம் தான் சிரிப்பின் மூலமே அதிகம் பேசினாள். அவள் உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சி உருப்பெற்றுக்கொண்டிருக்கிறதோ, யார் கண்டார்கள்?

அவள் மனதை அறிந்து அவள் தாயாவது நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற ஒரு வார்த்தையைச் சொல்லமாட்டாளா என்று அவர்கள் வீட்டுக்குச் செல்லும் ஒவ்வொரு சமயமும் நான் எண்ணுவதுண்டு. என்ன இருந்தாலும் அவ்விருவரும் இவ்வளவு மன அழுத்தம் உள்ளவர்களாகயிருக்கக்கூடாது. நான் முந்திக்கொள்ளமாட்டேனா என்று என் வாயை அவர்கள் நோக்கியதை நான் அறியாமலில்லை. நான் எப்படி வாய்விட்டுச் சொல்லமுடியும்? அதற்கு எதிர்பாராத பலன் கிட்டிவிட்டால்? கெட்ட பெயர்தான். நானும் மௌனம் சாதித்தேன்.

மிஸ். சுலோசனாவும், அவள் தாயாரும், எனக்குப் பழக்கப்பட்டு, தெரிந்தவர்களாகிவிட்டார்கள் என்ற நினைப்போடு நிறுத்திக்கொள்ளவேண்டியதுதான். மற்றெவ்வித உணர்ச்சிக்கும் உள்ளத்தில் இடம் கொடுக்கக்கூடாது.

அவள்

ரயில் சிநேகிதர்கள்போல்தான் நாங்கள் அடிக்கடி சந்தித்தோம். கடமையைச் செய்ய வேண்டிய துறையிலே அந்தச் சந்திப்பு ஏற்பட்டது. சின்னஞ்சிறு வயது முதற்கொண்டு பழகும் பால்யத் தோழர்கள்போல நாங்களிருவரும் இந்தக் குறைந்த கால அளவிலேயே பழகியாகிவிட்டது.

அவரும் இந்த வாக்காளர் பதிவு செய்கிற வேலை காரணமாக எங்கள் வீட்டிற்குப் பன்முறை வந்து போய்விட்டார். நானும் அவருடன் பலமுறை வீட்டிலும், வெளியிலுமாகப் பழகிப் பேசிவிட்டேன்.

அவர் என்னை விரும்புகிறாரா? அவர் அன்று பேசிய பரிகாசப் பேச்சுக்கு அர்த்தம் என்னவாம்? என்னை மணக்கக்கூடிய பாக்கியசாலி எங்கிருக்கிறானோ என்று ஒரு கேள்வியை வேறு கேட்டு நிறுத்திவிட்டாரே!

ஏதோ சொல்ல வாய் எடுப்பார். வார்த்தையோ வெளியில் வராது. பேச்சோ வேறு விதமாக மாறிவிடும். அவர் உள்ளத்தின் கள்ளத்தனத்தை நானறிந்துதானிருந்தேன். இருந்தும் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. ஒரு கால் என் மனத்திலுள்ளதை அவரும் படம் பிடித்துவிட்டாரோ?

என் மனதிலுள்ளதை அம்மாவும் அறிந்திருந்தாளோ என்னவோ? அவள் பேசிய பேச்சிலிருந்து, "கணபதி சம்மதித்தால், என்னை அவருக்குக் கல்யாணம் செய்துகொடுத்துவிடலாம்" என்ற எண்ணம் கொண்டிருந்தாள் என்பது எனக்குப்பட்டது.

இருந்தும் அவள் கணபதியிடம் இதைப்பற்றித் தைரியமாகப்பேச்செடுக்கவில்லை. தெரிந்து கொண்டு கான் மேலேபேசவேண்டும் என்று அவளும் சும்மாயிருந்திருப்பாள். மொத்தத்தில் எங்கள் மூவரிடத்திலும் நீண்ட மௌனம்.

என் மனக்குரங்கு மட்டும் அவரையும் என்னையும் வைத்து ஒப்பிட்டுக்கொண்டேயிருக்கும்.

நான்ஒரு உபாத்தியாயினி. அவர் ஒரு ரிஜிஸ்டிரார் ஆபீசுகுமாஸ்தா. பார்க்கப் போனால் எங்கள் உத்தியோகத்தில் அதிக ஒற்றுமை இருக்கத்தான் செய்தது.

அவர், உத்தியோகத்திலிருந்து விலகி பென்ஷன் வாங்கும்வரை பத்திரங்களைக் காப்பியடித்து, காப்பியடித்து, பெரிய பெரிய புத்தகங்களிலே எழுதிக் கொண்டே யிருக்க வேண்டும். பல மாதிரி தமிழ்நடையிலே அமைந்த பத்திரங்கள் என்ன, பிழை மலிந்த பத்திரங்கள் என்ன, தலையெழுத்து, கிறுக்கெழுத்தாலான பத்திரங்கள், இன்னும் எத்தனையோ விதமான பத்திரங்கள்— இவைகளை எல்லாம் பார்த்து எழுதித் தீரவேண்டும். தினந்தோறும் இதே வேலை. பொறுமை அதிகமிருக்கவேண்டிய வேலை. அலுப்புத் தட்டக்கூடிய வேலை.

நானோ ஒரே பாடத்தை, ஒரே வகுப்பில் இருந்து சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். படித்த புத்தகத்தையே படித்துப் படித்து, பிள்ளைகளுக்குப் பாடம் போதிக்கவேண்டும். பூமி உருண்டையென்றோ, ஜீவ நதி கங்கையைப்பற்றியோ, சூரிய கிரகணத்தைப்பற்றியோ, திரும்பத் திரும்ப சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கவேண்டும். வருஷா வருஷம் பிள்ளைகள், படித்து, வகுப்புமாறி மேல்வகுப்புக்குப் போவார்கள், எனக்கோ கடைத்தேற வழியில்லை. கடைசிவரைக்கும் அந்த ஒரு வகுப்பிலேயே தங்கிவிடவேண்டும்! இதுவும் பொறுமையைச் சோதிக்கும் வேலைதான்.

இந்த இரண்டு பொறுமைசாலிகளும் வாழ்க்கையில் சதிபதிகளாகிவிட்டால்?

அவன்

என்னை ஊருக்கு வரும்படி அம்மாவிடமிருந்து கடிதம்வந்து கொண்டேயிருந்தது. ஊருக்குப் போய் அவளைப்பார்த்து ஒரு வருஷத்திற்குமேலாகிவிட்டது. ஏதாவது ஒரு காரணத்தை எழுதிப் பிரயாணத்தைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்தேன். தீபாவளிக்குக்கூட நான் போகாமல் இங்கேயே தங்கிவிட்டேன்.

என்னைப்பற்றி என்ன நினைத்தாளோ, ஒருநாள் சாயந்திரம் ண்டிக்கு என்னைத் தேடிக்கொண்டு இங்கு வந்துவிட்டாள். எப்படியோ விசாரித்து, நான் தங்கியிருந்த ஹோட்டலின் மேல் மாடிக்கும் வந்துவிட்டாள். பெற்ற மனம் பித்து!

அவளைக்கண்டதும், எனக்கு ஒரே திகைப்பும், ஆச்சரியமுமாகி விட்டது. நான் ஊருக்கு வராமல் இருந்ததுபற்றி அழ ஆரம்பித்து விட்டாள். அவளைச் சமாதானப்படுத்துவதற்கே என்னால் முடியவில்லை.

ஹோட்டலில் அவள் தங்குவதற்கோ வசதியில்லை. மிஸ் சுலோசனாவின் வீடும் ஞாபகத்திற்கு வந்தது. அவர்களும் எவ்வளவு தங்கமானவர்கள், எவ்வளவு பிரியமாகப் பழகுகிறார்கள். அவர்களிருக்கும் வரையில் அவர்கள் வீட்டிலேயே தங்கும்படி ஏற்பாடு செய்தேன்.

ஒருவாரம் அவர்கள் வீட்டில் தங்கியிருந்தாள். அடிக்கடி அங்கு போய்ப் பேசியிருந்துவிட்டு, அவளுக்கு வேண்டியதை வாங்கிக் கொடுத்துவிட்டு வருவேன்.

அவள் வந்து இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு, என் கல்யாணவிஷயமாக மீண்டும் பேச்செடுக்க ஆரம்பித்துவிட்டாள். "நான் ஒரு நல்ல பெண் பார்த்து வைததிருக்கிறேன். சீக்கிரமே கல்யாணம் செய்துவிடவேண்டும்", என்று மிகவும் பரபரப்புடனும், ஆசையுடனும் பேசிக்கொண்டே போனாள். கல்யாணத்திற்கு இப்பொழுது என்ன அவசரம்? இதற்குத்தான் ஊரிலிருந்து வந்திருக்கிறாயோ?" என்று அவளிடம் கோபமாகப் பேசினேன்.

அவள் பார்த்திருக்கும் பெண் யாருக்கு வேண்டும்? என் மனம் தான் மிஸ். சுலோசனாவை நாடிக் கொண்டிருக்கிறதே!

அவள்

சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பெய்ததுபோல், நல்ல சமயத்தில் கணபதியின் தாயார்அவரைத் தேடிக்கொண்டே வந்துவிட்டார். கல்யாணம் பண்ணுதபிள்ளை எப்படியிருக்கிறானோ என்று பெற்ற வளுக்குக் கவலை இருக்கத்தான் இருக்கும். போதாக் குறைக்கு அவரை எங்கள் வீட்டிலேயே தங்கும்படி செய்தது எவ்வளவு நல்லதாய்ப்போச்சு!

அவர் தாயாரும், என் தாயாரும் மணிக்கணக்காக உட்கார்ந்து ஏதேதோ பழங்காலத்துக் கதைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். தங்கள் குலம், கோத்திரத்தைப்பற்றிக்கேட்டு, சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள அவர்கள் மறந்துவிடவில்லை.

என்னை அவர் தாயாருக்கு நன்றாய் பிடித்திருக்கிறது என்றும், என்னைத் தன் மகனுக்குக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டம் என்றும் அவர் தங்கியிருந்த ஒரு வாரமும் இதே பேச்சாகத்தான் இருந்தது.

சமயம் எப்பொழுது வாய்க்கும் என்று எதிர்பார்த்திருந்த என் தாயாரும் "சரி" என்று சொல்லிவிட்டாள். பிறகு ஒரு வாரம் இருந்து விட்டும். அவரும் ஊருக்குப் போய்விட்டார்.

ஊரிலிருந்து வந்தக் கடிதத்தைப் பார்த்துத்தான் கணபதிக்கு அவர் தாயார் பார்த்திருந்த 'நல்ல பெண்' நான்தான் என்று தெரிய வந்ததாம்.

கணபதியும் தாயார் பார்த்திருந்த இந்தப் பெண்ணை வேண்டாம் என்று மறுக்கவில்லை. கரும்பு தின்னக் கூலியாவேண்டும்?



மாதர் மகா சபை

'குங்குமம்'

'எல்லாம் அந்தக் கடிதத்தைப் பற்றிய பேச்சுதான் நடந்து கொண்டிருக்கிறது' என்றாள் ருக்குவின் மாமியார் அங்கு வந்த சரோஜாவைப் பார்த்து.

'எந்த கடிதத்தைப்பற்றி?' என்றாள் சரோஜா.

'எந்த கடிதத்தைப்பற்றியா? இந்தியாவின் கவர்னர் ஜெனரல் நிஜாமுக்கு எழுதிய கடிதத்தைப்பற்றி' என்றாள் பானு.

எல்லோரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள்.

'என்னடி 'பின்னே!' பத்து நிமிஷகாலம் உட்கார்ந்து கொண்டு நடுவில் யாரும் பேசக்கூடாது என்ற நிபந்தனையெல்லாம் போட்டுவிட்டு ஒரு எழுத்துகூட விடாமல், பாவம் குன்றாமல் படித்துவிட்டு எந்த கடிதத்தைப்பற்றி' என்று ஒன்றுமே தெரியாதவள்போலக் கேட்டால் பற்றிக்கொண்டு வந்தது கோபம், சொன்னேன், என்றாள் பானு.

'ஏது, ஹாஸ்யம் அளவுக்கு மிஞ்சிப்போய்விட்டது!' என்றாள் சரோஜா.

'இல்லாமலென்னடி? மஞ்சுளாவின் அகமுடையான் மஞ்சுளாவுக்கு எழுதிய கடிதத்தை நேற்று நீ படித்தது இதற்குள்ளாகவா மறந்துபோய்விட்டது? ஒன்றும் தெரியாத மாதிரி பாசாங்கு செய்கிறாயே என்று சொல்கிறாள்' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அது கிடக்கட்டும். உண்மையில் அந்தப்பிள்ளை எழுதிய கடிதமா அது?' என்றாள் பானு.

'அது எழுதியதேதான். ஏன்? அது எழுதக்கூடாதா என்ன?' என்றாள் சரோஜா.

'அதற்கில்லையடி. பார்த்தால் என்னமோ மாதிரி இருக்கிறது. கடிதத்தைப் பார்த்தால் நம்பவே முடியவில்லையே என்று கேட்கிறேன்'.

'நான் கூட முதலில் அப்படித்தான் நினைத்தேன். அப்புறம் மஞ்சுளா சொன்ன பிறகு தானே தெரிந்தது எல்லாம், நான் நினைத்ததற்கு எல்லாம் நேர் விரோதம் என்று.'

'ஏன், மஞ்சுளாவின் குடும்ப விவகாரத்தையும் விசாரித்துத் தெரிந்துகொண்டு விட்டாயா? ஆமாம். அவள்தான் உன்னுடைய ஆப்த சினேகிதியாயிற்றே. எல்லாவற்றையும் சொல்லியிருப்பாள்.'

'என்ன சொல்கிறாள் மஞ்சுளா தன் புக்ககத்தைப்பற்றி?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'என்னமோ முன்பின் தெரியாத புது இடத்துக்குப் போகிறோமே. அவர்கள் எப்படி இருப்பார்களோ. ஏதாக இருப்பார்களோ? சுலோசனாவின் புக்ககம் மாதிரி எல்லாம் ஒரே அசடுகளாக இருக்குமோ அல்லது பத்மஜாவின் புக்ககம் மாதிரி எல்லாரும் ரஸிகர்களாக இருப்பார்களோ என்ற சந்தேகத்துடனேயேதான் புக்ககம் சென்றாளாம். புக்ககம் போன புதிதில் ஒரு மாசகாலம் வரையில் எதை எதை எப்படிச் செய்தால் யார் யார் என்ன நினைத்துக்கொள்வார்களோ, என்று எதையும் வெகு நிதானத்துடன், சுயேச்சையைக் காட்டாமல், பயபக்தியுடன் செய்து வந்தாளாம். இதன் மத்தியில் மாமியாரின் போக்கு மாமனாரின் போக்கு, அகமுடையானின் குணம், மனோபாவம் எல்லாவற்றையும் தராசில் வைத்து நிறுக்கிறமாதிரி நிறுத்துக்கொண்டு வந்தாளாம்.' என்று சரோஜா சொல்லிக் கொண்டிருக்கையில். 'சரிதான், சரோஜா கதைசொல்ல ஆரம்பித்துவிட்டாள்' என்றாள் வசந்தா.

'சொல்லட்டுமேடி. மஞ்சுளாவின் குடும்பத்தைப்பற்றி தெரிந்துகொள்வது பிசகா என்ன? நீ சொல்லடி மேலே' என்றாள் ருக்குவின் மாமியார்.

'மாமியார் ரொம்ப கர்னாடகமாம். அத்துடன் வைதிக குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவளாம். ஆசார அனுஷ்டானம், நியம நிஷ்டை தவறாதவராம். படிப்பு மாத்திரம் பூஜ்யம் தானும். ஒன்றிரண்டு கிளாஸ் வரையில் படித்தாளாம். அதற்குமேல் படிப்பை நிறுத்தி விட்டாளாம். இப்பொழுது எழுத்தெல்லாம் கூட மறந்து போய் விட்டதாம். கனகாம்புஜம் என்ற தனது பெயரை

தட்டுத்தடுமாறி 'கணகம் புஜம்' என்று எழுதுவாளாம். இதை எழுதி முடிப்பதற்குள் ஐந்துதரம் பேனுவை இங்கி பெட்டியில் தோய்ப்பாளாம். பத்துதரம் பேனுவிலிருந்து இங்கியைக் கீழே உதறுவாளாம். ஆனுல் ஸஹஸ்ரநாமம், ஸ்ரீஸ்துதி, நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் ஐந்நூறு பாசுரங்கள், தலை கீழ்ப் பாடமாம். 'கனக்காம்புஜம் சாத்தமுது (ரஸம்) செய்யவேண்டும், சாப்பிட வேண்டும்' என்று சொல்லிக்கொண்டு வாரத்துக்கு ஒருதரம் சாப்பிடுவதற்கு அங்கே வந்து விடுவாராம் அவளுடைய மாமா. சமையல் அவ்வளவு நன்ருகச் செய்வாளாம்.

இந்தக் காலத்துப் பசங்கள் பாத்திரங்களை உள்புறம் மாத்திரம் தேய்த்துவிட்டு வெளியே இரண்டு 'குழப்பு குழப்பிவிட்டு' வைத்து விடுகிறதுகளே அந்த மாதிரி இராமல், உள்ளும் புறமும் பளபளவென்று தேய்த்துக் கண்ணுடி மாதிரி வைத்திருப்பாளாம். ஆனுல் வேலையில் மாத்திரம் ரொம்ப நிதானமாம். நொடிப்பொழுதில் வேலை முடிந்து விட்டதென்று எடுக்கும பண்டங்களையெல்லாம் கொட்டி வாருங்களே இந்தக் காலத்துப் பசங்கள் அந்தமாதிரி கொட்டி வாரமாட்டாளாம். சமையல் செய்வதுகூட அவ்வளவு ஆச்சரியமில்லையாம். இரவு வேலையெல்லாம் முடிந்த பிறகு அவள் உள்பார்த்து மூடுகிற ஆச்சரியத்தை எப்படிச் சொல்லுகிறது! எலிக்கோ பூனைக்கோ எதுவும் கிடைக்காதாம். அவ்வளவு ஜாக்கிரதையாக எல்லாவற்றையும் மூடி வைத்துவிட்டு வருவாளாம். கதவையெல்லாம் தாளிட்டுக்கொண்டு வந்து படுத்துக்கொள்கிருளே. திடீரென்று கதவைத் தாளிட்டோமா இல்லையா என்று சந்தேகம் வந்துவிடுமாம். மறுபடியும் எழுந்துபோய் சரியாய்த் தாளிடப்பட்டிருக்கிறதா என்று பார்த்து மனதைத்திருப்தி செய்து கொண்ட பிறகுதான் அவளுக்குத் தூக்கம் வருமாம். எதிலும் அவ்வளவு ஜாக்கிரதை' என்று சரோஜா சொல்கையில் அதெல்லாம் சரிதான். முன் காலத்து ஜனங்களுக்கே பொதுவாக சொத்தில் ரொம்ப கருத்து உண்டு.' மஞ்சுளாவிடம் அவள் எப்படி நடந்து கொள்கிருள்? அதைச் சொல்லவில்லையே? என்ருள் சாந்தா.

'அதைத்தான் சொல்ல வாயெடுத்தேன். அதற்குள் அவசரப்படுகிருயே. மஞ்சுளா போன புதிதில் அதனிடம் அசாத்திய ஆசையாக இருந்தாளாம். எந்த வேலையையும் அதைச் செய்யவிடமாட்டாளாம். 'அறியாதது பாவம்! உழைக்கவேண்டியகாலம் இருக்கவே இருக்கிறது. எனக்கு என்ன வேலை? நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று ஒரு வேலையையும் அதன் கண்ணில் காட்டமாட்டாளாம். சோம்பலே கிடையாதாம். மஞ்சுளா தலையை வாரிப்பின்னிக் கொள்ள உட்கார்ந்தால் 'இங்கே வாடி, நான் பின்னுகிறேன்' என்று நேர் வகிடு எடுத்து கர்னடக ரீதியில் பின்னிவைப்பாளாம். என்ன செய்கிறது? அவிழ்த்து தனக்கிஷ்டமானபடி கோணவகிடு எடுத்துப் பின்னிக்கொள்வதற்கு என்ன நினைத்துக் கொள்வாளோ என்ற பயம். ஆகையால் அப்படியே கொஞ்சநாள் இருந்து வந்ததாம்!' என்ருள் சரோஜா.

'எஸ். எஸ். எல். சி. படித்த ஒரு பெண் இதற்குக் கூடவா கட்டுப்பட்டு இருக்கும்? ஆச்சரியமாக இருக்கிறதே! என்ருள் விமலா.

'எஸ். எஸ். எல். சி. படித்திருக்கிறதே தவிர துளி கர்வம் கிடையாது. அடக்க ஒடுக்கமான பெண். தலை கவிழ்ந்து போகிற நாகரிகமும் கிடையாது. ஆசார அனுஷ்டானங்கள் பற்றி அதிகமாகத் தெரியாவிட்டாலும் அதில் பக்தி சிரத்தை உண்டு. புடவைத் தலைப்பையும் நகத்தையும் பல்லால் கடிப்பது தான் நாகரிகம் என்



"...... நான் பின்னுகிறேன் என்று கர்நாடக ரீதியில்......"

றால் அப்படிப்பட்ட நாகரிகம் நமக்கு வேண்டாமென்று கண்டிப்பாக சொல்லி விடுவாள். எப்பொழுது கலியாணம் ஆயிற்றோ அன்று முதல் பதினெட்டு முழம் சேலைதான் கட்டி வருகிறாள். இதனால் சுத்த 'கட்டுப்பெட்டி' என்று எண்ணிவிடவும் வேண்டாம். நடுத்தரமான ஒரு குடும்பத்துக்கு ஏற்ற ரீதியில் அதிக ஆடம்பரமில்லாமல் இருக்கக்கூடிய பெண்' என்றாள் சரோஜா.

'அப்படியானால் மாமியாருக்கு ஏற்ற நாட்டுப் பெண்தான். சண்டை சச்சரவு இல்லாமல் சௌகரியமாக இருக்கும்' என்றாள் வசந்தா.



“...சௌந்தரம் நல்ல அதிர்ஷ்டசாலிதான் என்று...”

'அதுதானே இல்லை! இதெல்லாம் முணு முணுப்போ' மனஸ்தாபமோ இல்லை. மாமியார்காரி எதிர்பார்த்ததில் நாலில் ஒரு பங்கு கூடச் செய்யவில்லையாம். பிள்ளையின் கல்யாணம் ஆனவுடனே சீர், வரிசைகளையெல்லாம் கொண்டுவர ஒரு லாரி போதுமா அல்லது இரண்டு லாரிக்கு ஏற்பாடு செய்யும்படியாக இருக்குமா என்ற மனக்கோட்டையில் கலியாணத்துக்குப் புறப்பட்டாளாம். கல்யாணம் முடிந்த பிறகு பார்த்தால் எல்லாம் இரண்டு ஜட்காவுக்கே போதும் போதாததுமாகப் போய்விட்டதாம். அப்பொழுது ஏற்பட்ட ஏமாற்றம் கொஞ்சம் கொஞ்சமாக உருவாகி மஞ்சுளாவையோ அவள் பிறந்தகத்தவர்களையோ கண்டாலே விஷத்தைப் பார்க்கிற மாதிரியான ஒரு வெறுப்பு, துவேஷம் ஏற்பட்டுவிட்டதாம். சாதாரண விஷயங்களுக்கெல்லாம் முணு முணுப்பு, மனஸ்தாபந்தானாம். அப்புறம் மஞ்சுளா எதைச் செய்தாலும் அதில் குற்றம் குறை கண்டு பிடிக்காமல் இருக்கவே மாட்டாளாம்,' என்றாள் சரோஜா.

'மஞ்சுளாவின் அகமுடையானும ஒரு 'அம்மா செல்லம்' போலிருக்கிறது' என்றாள் பானு.

'ஆமாம்! அவ்வளவு சீர்வரிசைகள் எதிர்பார்க்கிறதற்கு மஞ்சுளாவின் புக்ககத்தார்கள் பெரிய பணக்காரர்களா'? என்றாள் சாந்தா.

'அப்படியிருந்தாலும் பரவாயில்லையே. ஏதோ பிதுரார்ஜிதமான சொத்தை விற்றும், சொற்ப சம்பளத்தில் நெருக்கிப் பிடித்தும் பையனுக்கு பி.ஏ. வரை படிப்பு சொல்லிவைத்து விட்டார்கள். குலம் கோத்திரம் இருக்கிறது. பையன் மன்மதன் மாதிரி இருக்கிறான். நல்ல படிப்பும் இருக்கிறது. சொத்தைப்பற்றிய வரையிலும் தகப்பனார் ஏதோ உத்யோகத்தில் இருந்து சமீபத்தில்தான் 'ரிடையர்' ஆனார். அவ்வளவுதான் என்றாள் சரோஜா.

'அப்படியானால் பரவாயில்லை. ஒன்றுமில்லாததெல்லாம், புருஷப் பிள்ளை' என்ற ஒரு யோக்யதைக்காகவே எவ்வளவோ எதிர்பார்க்கிறதுகளே! இவர்கள் 'ஆகாயத்தைப் பார்ப்பதில்' என்ன ஆச்சரியமிருக்கிறது! என்றாள் ருக்குவின் மாமியார்.

'மஞ்சுளாவுக்கு இதிலெல்லாம் கூட அவ்வளவு கஷ்டமில்லை. ஐந்து வருஷமாகக் கோடித்து, மஞ்சுளாவின் நாத்தனாருக்குக் கல்யாணம் செய்தார்களாம். 'அதிக செலவில்லாமலும், நல்ல வரனாகவும் கிடைத்து விட்டது. சௌந்தரம் (மஞ்சுளாவின் நாத்தனார்) நல்ல அதிருஷ்டசாலிதான்' என்று மஞ்சுளாவின் மாமியார் அடிக்கடி சொல்லிப் பெருமைப் பட்டுக்கொள்கிறாளாம். அதுவும் மஞ்சுளாவின் எதிரிலேயே தானாம். எப்படி இருக்கிறது நியாயம்!' என்று சொல்லி 'மாய்ந்து போகிறது' மஞ்சுளா' என்றாள் சரோஜா.

எல்லாம் ஒரே தித்திப்பாக இருந்தாலும் சீக்கிரத்தில் தெவிட்டிப்போய்விடும். என்றாள் ருக்குவின் மாமியார்.

'அப்படியானால் முதலில் மஞ்சுளாவிடம் அதன் மாமியார் அதிக ஆசையாக இருந்ததெல்லாம் வெறும் நடிப்புதானா?' என்றாள் வசந்தா.

'சரி! மாமியார் படலம் முடிந்தது. இனி மாமனார் படலம் ஆகவேண்டும். உம்! ஆரம்பிக்கலாம்' என்றாள் பானு.

நேரமாய்விட்டதடி. இன்று சினிமாவுக்குப் போவதாக ஏற்பாடு. மாமனார் படலம் நாளைக்கு' என்று எழுந்தாள் சரோஜா.

——

மெய் விளங்கிய அன்பர்கள்

பெரிய புராணப்பூங்கோயிலில்

1. ஒரு சோதனை—விளக்கு.

தமிழர்களின் நதிக்கரை நாகரிகம் வட வெள்ளாற்றின் இரு கரையிலும் குடிவளமும், பொருள் வளமும் பெருக்கியிருந்தது. 'திருமா மகளின் திவ்யப் பிரதேசமோ?' என்று கருதும்படி சிற்பச்செல்வங்களாகிய மாட கூடங்கள் நிறைந்திருக்க, அவற்றுக்கெல்லாம் உயிர் நிலையாகப் பெருகிவந்த நதியைச் சேக்கிழார் பெருமான்,

திருக்கிளர்சீர் மாடங்கள்
திருந்துபெருங் குடி நெருங்கிப்
பெருக்கு வட வெள்ளாறு

[திருக்கிளர் சீர்மாடங்கள்—அழகுத் தெய்வமாகிய திருமகள் நித்திய வாசம் செய்வதுபோன்ற மாட மாளிகைகள்.]

என்று பாடுகிறார்.

செழிப்பும் செல்வமும், பக்தியும்

இந்த ஆற்றின் தென் கரையிலே ஒரு புறம் ஒரே பசுஞ் சோலையாகத் தோன்றும். நெருங்கிப் போனால் பலா மரத் தோப்புகளும் குளங்களும் வயல்களும் 'பார்த்தாலே பசி தாகம் தீர்ந்து போம்!' என்று வியக்கும்படி அமைந்திருக்கும், இந்த ஊருக்கு இருக்கு வேளூர் என்று பெயர்—இடைக்காலத் தமிழுலகில் பெயர் விளங்கிய பதி:

வருக்கை நெடுஞ் சுளைபொழி
[தேன்
மடு நிறைத்து வயல்விளைக்கும்
இருக்குவே ளூர் என்ப(து)
இவ்வுலகில் விளங்குபதி.

32

ஐந்து கார்த்திகைத் தீபங்கள்

★

[வருக்கை—ஒரு வகைப் பலா. மடு—குளங்கள். பதி—ஊர்.]

அவ்வூரில் ஒரு செல்வர்,சிவபக்தி செல்வத்திலும் குறைவில்லாதவர். கோவிலில் திருவிளக்கு எரிப்பதைத் தமது தொண்டாகக் கொண்டிருந்தார்.

ஓவாத ஒளிவிளக்குச்
சிவன்கோயி லுள்ளெரித்து
நாவாரப் பரவுவார்.

[ஓவாத—நீங்காத. நாவாரப் பரவுவார்—நாவு நிறைய ஸ்தோத்திரம் செய்வார்.]

உயிர்க்குலத்தின் இதயத்திலே ஓயாத ஒளி விளக்காம். சிலபரஞ்சுடருக்கு ஒரு நினைவுக்குறியாக இந்த அன்புச்செல்வர் சிவசந்நிதியில் திருவிளக்கேற்றித் தெய்வம் தொழுது வந்தார். வருகையில் சிவசோதனையாக இவருக்கு வறுமை நேர்ந்தது. அதனால் இவர் ஊரைவிட்டுப் போகவும் நேர்ந்தது. சிவபக்தர் சிதம்பரம் சென்றார்.

தேவாதி தேவர் பிரான்
திருத்தில்லை சென்றடைந்தார்.

[திருத்தில்லை—சிதம்பரம்.]

சைவ உலகின் ஞான ராஜதானியான தில்லை நகரில் சபாநாயகரைத் தரிசனம் செய்தார்.

தில்லைநகர் மணிமன்றுள்
ஆடுகின்ற சேவடிகள்
அல்கிய அன் புடன் இறைஞ்சி
அமர்கின்றார்.

[அல்கிய—நிலைபெறுன]

சிதம்பரத்திலே

இப்படித் தில்லைக்கூத்தனை வழிபட்டதும் பழைய திருத்தொண்டைத் தொடர்ந்து செய்யவேண்டும் என்ற உறுதி ஏற்பட்டது. வீட்டுப் பொருள்களையெல்லாம் விற்று விற்றுத் தொண்டு நிகழ்த்தினார். அந்தப் பரம தரித்திர நிலையிலும் இரத்தலை விரும்பவில்லை நாயனார். இரத்தல் இறத்தலினும் கொடிது என்று கருதினார்.

கணம்புல் என்னும் புல்லுக்களை அறுத்துக்கொண்டுவந்து விற்று நெய்வாங்கித் திருவிளக்கு எரித்தார். இதனால் இவருக்குக் கணம் புல்ல நாயனார் என்னும் பெயர் ஏற்பட்டது.

ஒருநாள் இவர் அரிந்துகொண்டு வந்த புல் விலைப்படவில்லை. மறுபடியும் திருவருளின்சோதனை. கணம்புல்லர் சோர்ந்துபோகாமல் அந்தப் புல்லுக்களைத் திரித்து விளக்கு எரித்தார். புல்லுப் போதவில்லை. இதுவும் திருவருளின் சோதனைதான். நாயனாரா இத்தகைய பரீட்சைகளில் தவறிப் போகிறவர்? தமது முடியை அன்போடு எரிக்கத் தொடங்கினார்!

முடியையா எரித்தார்! வினையின் பந்தத்தை எரித்துவிட்டார் என்பர் சேக்கிழார் பெருமான். சிவபெருமானின் 'மங்கலமாம் பெருங் கருணை' இவரைச் சிவலோகத்தில் குடியேற்றி வாழ

வைத்ததாம். சிவபக்தியுலகில் இத்தகைய நாயனுரின் கதைகள் ஒரு சோதனை—விளக்காக மெய்யன்பர்களுக்கு உதவும் என்பர்.

2. மூர்க்கரின் மாகேசுரபூஜை

தொண்டை மண்டலத்தில் பாலாற்றின் வடகரையில் வேற்காடு என்ற பதியில் சிவநேசரான ஒரு வேளாளர், சிவனடியார்கள் விரும்பும் பொருளைக் கொடுப்பதும், அவர்களை அமுதுசெய்வித்த பின்பே தாம் உண்பதும் நியதியாகக் கொண்டிருந்ததார். அடியார்கள் அமுது செய்வதை 'மாகேசுரபூஜை' என்று சைவர்கள் குறிப்பிடுவர்.

நாளுக்குநாள் அடியவர் கூட்டம் பெருகிவர, இந்த நாயனுர் ஏழையாகிவிட்டார். தாம் ஏழையானது குறித்து இவருக்குக் கொஞ்சமும் வருத்தம் இல்லை; மாகேசுரபூஜை குறைவின்றி நடக்கவேண்டுமே என்ற ஒரு கவலைதான்.

இந்த நாயனுர் சூதாட்டத்தில் வல்லவராக இருந்ததால் அந்த வழியிலாவது பொருள் தேடி அடியவருக்குத் தொண்டாற்றத் துணிந்தாராம். வேற்காட்டில் சூதாடுவோர் இல்லாமற்போக, இவர் ஊரைவிட்டுப் பலதலங்களுக்கும்சென்று சுவாமி தரிசனம் செய்வதும் சூதாடி மகேசுரபூஜை செய்வதுமாய் இருந்தாராம்.

நாயனுர் 'திருக்குடந்தை' என்ற கும்பகோணத்தை அடைந்தார். அங்கும் சூதாட்டத்தால் பொருள் பெற்றுத் தொண்டாற்றினுராம்.

நற்சூதர் மூர்க்கர்எனும்
பெயர்பெற்ருர் நாவிலத்தில்!

என்பர் சேக்கிழார். இத்தகைய மூர்க்கருக்கும் சிவபெருமான் திருவருள் சுரந்தாராம்.



3 மறைப் பெருவள்ளலார்

சோழநாட்டிலே ஆக்கூர் என்ற ஊரில் சிறப்புலியார் என்ற ஒரு பக்தப் பெருவள்ளல் இருந்தார்—இப்பெரியாரையும் இவர் ஊரையும் சைவ உலகின் தனி நாயகமான திருஞானசம்பந்தரே,

இன்மையால் சென்(று)
இரந்தார்க்(கு) இல்லை
என்னு(து)
ஈந்(து) உவக்கும் தன்மையால்
ஆக்கூரில்

என்று தேவாரத்திலே போற்றியுள்ளார்.

இவ்வூரைச் சேக்கிழார் பெருமானும்,

பொன்னி நீர் நாட்டின் நீடும்
பொற்பதி

[பொன்னி—காவேரி.]

ஆலைசூழ் பூக வேலி
அந்திரு ஆக்கூர்

[ஆலை-கரும்பு ஆலை. பூக வேலி—கமுகவேலி.] என்று வருணிக்கிருர். கமுக மரங்கள் வேலி போலச் சூழ்ந்திருந்த அவ்வூரிலே கரும்புத் தோட்டங்களும் கரும்பாலைகளும் ஏராளமாய்க் காணப்பட்டன.

பூஞ்சோலைகளுக்கிடையே வானளாவிய மாடங்கள்; அம்மாடங்களிலே வேதகோஷங்கள்:

தூமலர்ச் சோலை தோறும்,
சுடர்தொடும் மாடம் தோறும்,
மாமழை முழக்கம் தாழ
மறையொலி முழக்கம் ஓங்கும்.

[தூமலர்-பரிசுத்தமான பூக்கள். சுடர் தொடும்-சந்திர, சூரியர்களைத் தொழுவதுபோன்ற மாடமாளிகைகள்.]

இவ்வூரில் சிறப்புலியார் சீலத்திலும் ஈகைத்திறத்திலும் சிறந்து விளங்கினுர்;

சீலராய்ச் சாலும் ஈகைத்
திறத்தினில் சிறந்த நீரார்.

[நீரார்—தன்மை வாய்ந்தவர்.]

இந்த நாயனுர் சிவனடியார்களைக் கண்டதும் அடியில் தாழ்ந்து நமஸ்கரிப்பார். பிறகு,

மூளும்ஆ தரவு பொங்க
முன்புநின்(று), இனிய கூறி,
நாளும்நல் அமுதம் ஊட்டி,
நயந்தன எல்லாம் நல்கி,
நீளும்இன் பத்துள் தங்கி,
நிதிமழை மாரி போன்ருர்

[ஆதரவு-அன்பு. நயந்தன—விரும்பிய பொருள்கள். மாரி—(இங்கே) மேகம்.]

இத்தகைய அழகுமிக்க பண்பாடும் வண்மையும் வாய்ந்த இவர் இன்னும் பல சிவ புண்ணியங்கள் செய்துகொண்டிருந்து சிவபதம் அடைந்தாராம். இவருடைய பணிகளை எல்லாம் இடையருத ஒரு பொற்சரடு போல் கோத்துவைத்தது, அடியவர்மீது இவருக்கு என்றும் குன்ருத அன்புதான்:

எஞ்சலில் அடியார்க்(கு) என்றும்
இடையரு அன்பால், வள்ளல்
தம்செயல் வாய்ப்ப, ஈசர்
தாள்நிழல் தங்கினுரே.

* * * * *

இந்த நாயன்மார் மூவருக்கும் குருபூஜை கார்த்திகை மாதம் நடைபெறும். இவர்களுடன், குழலிசைத்துச் சிவபெருமானை வசீகரித்த கோபாலரான ஆனய நாயனுருக்கும் இம்மாதத்திலேதான் குருபூஜை. சத்தியாக்கிரகியான மெய்ப்பொருள் நாயனுருக்கும் இதே மாதத்தில் குருபூஜை. இந்த ஐந்து சிவநேசர்களையும் 'ஐந்து கார்த்திகைத் தீபங்கள்' என்று கருதலாமல்லவா?

அத்தியாயம் 13

அஸ்தமன வேளை. நிலா கிளம்பிவிட்டது. விசாலாட்சி ஏதோ செடிக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தாள். இளந் தென்றல் வெகு சுகமாக வீசிக்கொண்டிருந்தது. சினிமாவில் காதலன் இதைப்போன்ற சமயத்தில்தான் காதலியிடம் தன் காதலைத் தெரிவிப்பது வழக்கம். இதை நடராஜன் மறந்துவிடவில்லை. அவன் ரொம்ப முன் ஜாக்கிரதையான பேர்வழி. படித்த பெண்களிடம் காதலைத் தெரிவிக்கவேண்டுமென்ருல் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று அவனுக்குத் தெரியும். ஆகையால் பிரபல நவீனங்களில் வரும் காதல் சம்பாஷணைகளில் காதலன் பாகத்தைமட்டும் நன்ருய் நெட்டுருப் போட்டுக்கொண்டு தோட்டத்துக்குச் சென்ருன்.

“விசாலாட்சி! உன்னுடைய...ஒல்லியான, இல்லை, அதாவது, மிருதுவான—ஆமாம்—தாழம் பூ போல்—இல்லை மல்லிகைப்பூ போன்ற மிருதுவான கைகளால் நீ குடத்தைத் தூக்கலாமா?” என்று முடித்தான் நடராஜன். அவன் மனதில் தோன்றியதைச் சட்டென்று சொல்ல முடியாமல் வார்த்தைகள் வெளிவராது சதி செய்தன. சமயத்தில் உவமை சொல்ல மல்லிகைப் பூ கூட மறந்துபோய்த் தாழம் பூ அவனுடைய ஞாபகத்துக்கு வந்தது.

விசாலாட்சிக்குச் சிரிப்பு வந்தது. சேகரன் கதலீபுரத்தை விட்டு விட்டுப் போனபிறகு அவள் வெகு அபூர்வமாகத்தான் சிரித்தாள். அசடு வழிந்துகொண்டு நடராஜன் பேசும்போது அவளுக்கு ரொம்ப வேடிக்கையாக இருந்தது.

“குடம் இல்லை. நன்ருய்ப் பாருங்கோ, அத்தான்! வாளி! நீங்கள் கண்ணுடி போட்டுக் கொள்ள வேண்டியதுதான்!” என்று பதிலளித்தாள் விசாலாட்சி.

தான் காதலிக்கும் ஒரு பெண் கண் டாக்டரைப் போலப் ‘பிரிஸ்கிரிப்ஷன்’ கொடுப்பதை ஒருவன் விரும்பமாட்டான்.

“ஆமாம் வாளிதான், வாளிதான்! ஹி! ஹி!” என்று புன் சிரிப்பு சிரிக்க முயன்ருன் நடராஜன். “இந்த அந்தி வெயிலில் உன்முகம்............... (யோசித்து) தாமரைப் பூபோல இருக்கிறது” என்று காதல் சம்பாஷணையைத் தொடர்ந்தான் நடராஜன்.

“அந்தி வெயில் போய் அரைமணி நேரமாச்சு. நிலா கிளம்பிவிட்டது” என்று ஞாபகப்படுத்துகிருள் விசாலம். சினிமாவில் காதலர்கள் இதைப்போலத் தடுமாறுவதும் இல்லை; காதலிகள் இதைப்போல அவர்கள் சொல்லுவதைத் திருத்துவதும் இல்லை!

இதனுல் நடராஜன் மனந்தளர்ந்துவிடவில்லை.

“பூரண சந்திரனின் கதிர்கள் உன் முகத்தில் பட்டுப் பரிசுத்தமடைகின்றன”

"..............."

"இளந்தென்றல் வெகு சுகமாக வீசுகிறது"

"அப்படியா?"

"வந்து, விசாலம், நான் வந்து, ஹி! ஹி!......"

"நீங்கள் வந்து?" என்று குறுக்கிட்டாள் விசாலம்.

"உன்னை......"

"என்னை இன்ஷ்யூர் பண்ணிக்கொள்ளச் சொல்லுகிறீர்களா? நான் எப்போதாவது இன்ஷ்யூர் பண்ணிக்கொள்வதாயிருந்தால் உங்களிடமே செய்துகொள்கிறேன்"

நடராஜன் இன்ஷ்யூரன்ஸ் பேச்சைக்கொஞ்சமும் விரும்பவில்லை.

"இல்லை, இல்லை. உன்னைக்கல்யாணம் செய்துகொள்ளலாம் என்று ஆசை. அப்பாகூட சரின்னு சொல்லிவிட்டார்"

"அப்போ என்ன? கல்லியாணமெல்லாம் ஆய்விட்டாற்போலத்தான்!" என்று வெடுக்கென்று சொன்னாள் விசாலம். "அத்தான்! நீங்கள் பெர்னார்ட்ஷா படித்திருக்கிறீர்களா?"

"இல்லையே!" காதல் உலகத்திலிருந்து பெர்னாட்ஷாவின் உலகத்திற்குத் தாவுவதை நடராஜன் சற்றும் விரும்பவில்லை.

"படித்திருந்தால் நீங்கள் கல்யாணத்தைப் பற்றியே பேசமாட்டீர்கள். நிறைய பெர்னார்ட்ஷா படியுங்கள்."

"படிக்கிறேன்"

"என்னிடம் பெர்னார்ட்ஷாவின் புத்தகம் எல்லாம் இருக்கிறது, விடாமல் படியுங்கள்"

"சரி"

"படித்துவிட்டு எப்படி யிருக்கிறது என்று சொல்லுங்கள"

"சரி.........அது கிடக்கட்டும். அந்தத் திருட்டு ராஸ்கல் சேகரன் உன்னோடு சேர்ந்து தோட்டத்தில் சிரித்தானே, அன்று என்மனம் எப்படிப் புண்பட்டது தெரியுமா?" என்று சொல்லி பெர்னார்ட்ஷாவிடமிருந்து தப்பித்துக்கொள்ள முயன்றான் நடராஜன்.

"சேகரனைப்பற்றி என்னிடம் பேசும்போது கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்கள். அவர் திருடிக்கொண்டு போயிருப்பார் என்பது வெறும் பேத்தல். நான் அவரை மனப்பூர்வமாக நம்புகிறேன். இதில் ஏதோ சூது இருக்கிறது. அது தானாக வெளியாகும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு"

"இல்லாவிட்டால் அவன் சொல்லிக் கொள்ளாமல் ஓடுவானேன்?" என்று கேட்டான் நடராஜன்.

"விசாலம், அம்மா, விசாலம்!" என்று ராவ் பகதூர் கூப்பிடவே விசாலம் வீட்டிற்குள் சென்றாள். நடராஜன் தன் காதல் முயற்சி தோல்வியடைந்தது கண்டு மனஞ்சோர்ந்தான். நாட்கள் செல்லச் செல்ல விசாலாட்சியின் மனம் மாறும் என்று அவன் நம்பினான். பெர்னார்ட்ஷாவை மனதிற்குள் திட்டினான்—பெண்கள் பெர்னார்ட்ஷாவைப் படிப்பதால் எவ்வளவு அதிகப்பிரசங்கிகளாகி விடுகிறார்கள் என்று ஆச்சர்யப் பட்டான்.

வான வீதியில் உல்லாசமாகப் பவனி வந்து கொண்டிருந்த பூரணசந்திரனைப் பார்த்துக் கொண்டே இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் பெருமூச்சுவிட்டான்.

* * * * *

சேகரன் அமெரிக்காவுக்குக் கிளம்பிச் சென்ற பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு நாம் இந்தப் பகுதியைத் தொடங்குகிறோம்.

சேகரன் கோபாலசாமியின் பூரண மதிப்புக்குப் பாத்திரமானான். கோல்ட்ஸ்மித்தின் கிராமப் பள்ளிக்கூட வாத்தியார் பேசுவதைக்கண்டு அந்த ஊர்க்காரர்கள் ஆச்சர்யத்தால் வாயைப் பிளப்பார்களாம். அதே போல கோபாலசாமிக்கு சேகரனின் சண்டமாருதமான இங்கிலீஷ் அளவற்ற ஆச்சர்யத்தை உண்டாக்கிற்று. கோபாலசாமியின், பழக்கத்தினால் சேகரனுக்கு அநேக நன்மைகள் ஏற்பட்டன என்பதில் சந்தேகமில்லை. ஆரம்பத்தில் தேக்குமரங்களைப் பற்றியும், பேப்பர் மில்களைப்பற்றியுமே பேசி கோபாலசாமி, சேகரனுக்கு உலகமே ஒரு பெரிய தேக்குத்தோட்டம், நாம் காணும் பொருள்களெல்லாம் தேக்கு மரத்தின் அம்சங்களே என்ற வேதாந்த பரமான சிந்தனை ஏற்படும்படி செய்தார். சேகரன் தன் பெரு முயற்சியினால் உலகத்தில் தேக்கு மரத்தைத்தவிர மற்ற விஷயங்களும் இருக்கின்றன என்ற மகத்தான உண்மையைக் கோபாலசாமிக்கு உணர்த்தியபிறகு அவருடன் பொழுது போக்குவது அவ்வளவு சிரம

மாக இல்லை. தேக்கு பிஸினஸ், மரக்குழம்பு தயாரித்தல், காகிதம் தயாரித்தல் இவற்றிலெல்லாம் சேகரனுக்கு நல்ல அனுபவம் ஏற்பட்டது. வெளிநாடுகளில் பதினெட்டு மாதங்களைக்கழித்துவிட்டு வந்த பிறகு அவனுடைய சரீரம் ஆரோக்கியமாக வளர்ந்திருந்தது. அவனுடைய மனதிற்குக்கூடக் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டிருந்தது. ஆனால் அந்த நிம்மதி ஸ்திரமாக இல்லை. விசாலாட்சியைப்பற்றிய எண்ணம் தோன்றும்போதெல்லாம் அவன் மனம் மிகுந்த வேதனையடைந்தது. அவள் இல்லாத உலகம் பாழ் என்றெண்ணினான். கதலீபுரத்தில் எத்தனையோ குறைபாடுகள் இருந்தன என்பதைச் சேகரன் ஒப்புக்கொண்டான். இருந்தாலும் விசாலம் ஒருத்தி இருந்ததனால் அந்த ஊரின் குறைபாடுகளெல்லாம் மறைந்துபோயின. நாட்கள் அதிகமாக, ஆக விசாலத்தைப்பற்றிய எண்ணம் அதிகரித்தது. இன்னும் சில நாட்களாகவே அவளே அவன் கண்முன் நின்றாள். தான் கதலீபுரத்தை விட்டுவந்தது பெரிய தவறு என்று சில சமயங்களில் எண்ணினான். ஒருகால் விசாலாட்சிக்கு இதற்குள் கல்யாணமாகியிருக்குமோ என்ற சந்தேகம் தோன்றியபோது தன் வாழ்க்கையே பாழாகி விடுவது போல அவனுக்குத் தோன்றியது. பம்பாயில் காலடி வைத்தவுடன் கதலீபுரத்திற்குப் பிரயாணமாகவேண்டும்; தான் குற்றவாளியல்ல என்பதை நிரூபிக்க வேண்டும்......

பம்பாய்த் துறைமுகத்தில் கோபாலசாமியும், சேகரனும் இறங்கினார்கள். அவர்களை ராமசாமி எதிர்கொண்டழைத்தான். இந்த சந்தர்ப்பத்தில் ராமசாமியைப் பற்றி சில விஷயங்களைச் சொல்ல வேண்டிய அவசியமேற்படுகிறது. கோபாலசாமியின் கம்பெனியின் பிராஞ்சு ஒன்று பம்பாயில் இருந்தது. கோபாலசாமி நியூயார்க்கில் இருந்தபோது அதன மானேஜர் இறந்து விடவே, அவர் அங்கிருந்தே ராமசாமியை பம்பாய் பிராஞ்சின் மானேஜராக நியமித்தார். தவிர நடேசய்யரின் குமாரியான சௌபாக்யவதி மங்களத்தை அவன் மணந்துகொண்டான். இந்தக்கல்யாணப் பத்திரிகை நியூயார்க்கில் ராமசாமி மூலம் தனக்குக் கிடைத்தபோது சேகரன் மிக ஆச்சர்யமடைந்தான். மங்களத்தையும் ஒருவன் மணந்துகொண்டான் என்று அவனால் நம்பமுடியவில்லை ஆனால் மங்களத்தினிடம் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தன என்பதை அவன் மறுக்கவில்லை. ராமசாமியின் ரஸிகத்தன்மையில் சேகரனுக்கு நம்பிக்கை போய்விட்டது. ராமசாமி மங்களத்தைக் கல்யாணஞ் செய்துகொள்ள எப்படிச்சம்மதித்தான் என்பதற்குக் காளிதாஸனுடைய 'லோகோ பின்னருசி' என்ற வாக்கியந்தான் சரியான சமாதானம் என்று தோன்றியது.

ராமசாமியின் ஜாகையில் சேகரனும், கோபாலசாமியும் இறங்கினார்கள். சேகரனைக்கண்டதும் மங்களத்திற்கு அடக்கமுடியாத ஆச்சர்யம் ஏற்பட்டது. சேகரனுக்கும் பழைய சம்பவங்களைப் பற்றிய நினைவுகள் ஏற்பட்டதால் சட்டென்று மங்களத்துடன் பேச முடியவில்லை. பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு "என்ன மங்களம்! இந்த 'ஸில்லி இடியட்'டை எப்படிப் பிடித்தாய்" என்று சிரித்துக்கொண்டே கேட்டான்.

மங்களம் நாணத்துடன் தலை குனிந்து கொண்டாள். அவளுடைய கடைக்கண்கள் ராமசாமியை நோக்கின. கல்யாணம் செய்து கொண்ட பின்

மங்களத்துக்கு அழகும், அச்சம், நாணம் என்ற பெண்மைக் குணங்களும் தானாகவே ஏற்பட்டு விட்டன என்று சேகரன் எண்ணினான்.

'ஏண்டா ராமசாமி! நீ ஒரு அதிர்ஷ்டக்காரன் என்கிறதில் சந்தேகமேயில்லே. உனக்கு எங்க அம்மங்காளை மணந்துகொள்ள என்ன யோக்யதை இருக்கு?' என்று சிரித்துக்கொண்டே ராமசாமியைக் கேட்டான்.

"உங்க மாமா பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டபிறகு,நான் ரொம்ப திருந்திவிட்டதாக எல்லோரும் சொல்லுகிறார்கள். சேகர்! நம்ம பழைய ஜாகரபி வாத்தியார்கூடஎன்னைப்பார்த்து அதே ராமசாமிதானா என்று ஆச்சர்யப்படுகிறார். பெண்மையின் ஆதிக்கத்தின் கீழ் மனிதன் ரொம்ப முன்னேறிவிடுகிறான். என்ன? இதை ஒப்புக்கொள்கிறாயா சேகர்?......இப்போ நம்ப குடும்ப ராஜாங்கத்திலே வருமான இலாகா மட்டுந்தான் என் கையிலே இருக்கு. நிதி இலாகா, உள் நாட்டு இலாகா, வெளி நாட்டு விவகாரங்கள் எல்லாம் மங்காதான்!......என்ன சொல்றே, மங்கா?"

மங்களம் ராமசாமியிடம் கடைக்கண்ணை வீசி விட்டு மின்னலென மறைந்தாள்.

அன்றிரவு சாப்பிட்டுவிட்டு நண்பர்கள் இருவரும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருக்கும் போது,

"ஏண்டா சேகர்! உனக்கு வைரக்கல்லைப் பரிசோதனை செய்யத் தெரியுமா?" என்று கேட்டான் ராமசாமி.

இது சேகரனைப் பொறுத்தவரைக்கும் ரொம்ப சூட்சமமான கேள்வி. அவனுடைய ஹிருதயத்திலிருந்த ரத்தத்தையெல்லாம் இது குடித்து விட்டது.

"என்ன கேட்கிறாய்?"

"வைரப் பரிசோதனை?"

"ஏன்?"

"ஒன்றுமில்லே. 'ஒய்பு'க்கு ஒரு வைர அட்டிகை வாங்கணும்னு ஆசை. என்னடா ஆம்படையான் கொள்ளையாய்ச் சம்பாதிக்கிறான். இதுக்குக்கூட யோக்யதை இல்லையான்னு நினைச்சுக்கமாட்டாளா? அதுவும் இந்தமாதிரி சமயத்திலே அவ கேட்கிறதை வாங்கிக் கொடுக்கணும்னு சொல்லுவா!"

"எந்தமாதிரி சமயத்திலே?"

"போடா, 'டாம் இடியட்!' உனக்குச்சமாசாரம் தெரியாதா? ஓ! சொல்ல மறந்துவிட்டேன். மங்கா வந்து ஐந்து மாதமாய்..." ராமசாமியின் முகத்தில் அசடு வழிந்தது.

"ஓ! ரொம்ப சந்தோஷம்! திருட்டுப்பயலே!... ஆனால் வருங்கால சந்ததிகள் புத்தி தீட்சண்யத்தில் உன்னைக் கொள்ளாமலிருந்தால் நல்லது..."

"அது கிடக்கட்டும். ஒரு வைர அட்டிகை ஸெகண்ட் ஹாண்டிலே கிடைக்கும்போல இருக்கு!"

சேகரனுக்கு மனதில் ஏதோ ஒரு சந்தேகம் எழுந்தது.

"ஆமாம்! யார் விற்கிறார்கள்?"

"நம்ப பக்கத்து ஆசாமி ஒருத்தன் ஏதோ வைர வியாபாரி ஒருவனிடம் வேலையாயிருக்கிறானாம். அவனிடம்தான் அட்டிகை இருக்கிறது..."

"அங்க அடையாளங்களைச் சொல்லு!"

"நூறு காரட் வைரம் இருக்கும். தங்கம் வந்து சுமாராய்............"

"கழுதை! அட்டிகையின் அடையாளங்களைக் கேட்கவில்லை. அதை விற்கிறவனைப் பாதாதி கேசம் வரை வர்ணி, பார்க்கலாம்!"

ராமசாமி யோசித்துப்பார்த்தான். "பாதாதி கேசவர்ணனை வேண்டுமா? அப்படி வர்ணிக்கும் படியாய் ஒன்றும் இல்லை. முதலில் கேசபாகத்தை எடுத்துக்கொண்டால் கிராப்புத்தலை. பார்த்தால் அகஸ்தியரைப்போல இருக்கிறான். அவன் பேசும்போது பார்த்தால் ரொம்பத் தமாஷ்! கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டிப் பேசுவான்!"

"ஆ! அப்படியா? அற்புதம்! அதிசயம்! ஆச்சர்யம்!......" என்று சேகரன் குதிக்க ஆரம்பித்தான்.

ராமசாமிக்கு முதன் முறையாக சேகரனின் புத்தி ஸ்வாதீனத்தில் சந்தேகம் எழுந்தது. அமெரிக்க சுற்றுப்பிரயாணத்தினால் மனிதர்களுக்குப் பைத்தியம் பிடித்ததாக இதுவரை அவன் கேள்விப்பட்டதில்லை. ஒருகால் கோபால்சாமியின் இடைவிடாத தேக்குமரப் பிரசங்கங்கள் சேகரனின் மூளையைப் பாதித்துவிட்டதோ என்றும் அவன் ஐயமுற்றான்.

"ஏண்டா, ப்ளடி! ஒருவன் கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டிப் பேசினுன் என்றுல் இப்படியா குதிக்க வேண்டும்?"

"அவன்தான் அந்த ஆசாமி!"

"எவன்தான் எந்த ஆசாமி?" என்று பொறுமையின்றி விசாரித்தான் ராமசாமி.

"ஓ! கொஞ்சம் விரிவாகச் சொல்லவேண்டியிருக்கிறது. நான் அமெரிக்காவுக்குப் போன தன் நோக்கமென்ன தெரியுமா உனக்கு? ஒரு பெரிய திருட்டுக் குற்றத்திலிருந்து தப்புவதற்காகத்தான்!........."

ராமசாமி வாயைப் பிளந்தான். அவனுல் கன்னக்கோலைக் கையில் தாங்கிக்கொண்டு இருட்டில் பதுங்கிக்கொண்டு போகும் சேகரனை மனதில் உருவகப்படுத்த முடியவில்லை.

"எங்கே, எதற்காகத் திருடினுய்?......நீ தேவலைடா, ஒரு ஆல்ரௌண்டர் (எல்லாந் தெரிந்தவன்)!"

"கேளு முழுக்க! நான் சத்தியமாய்த் திருடவில்லை. கதலீபுரத்திலே ஒரு போலீஸ் ஸார்ஜெண்ட் வீட்டிலே ஒரு பையனுக்கு—பையன் என்றுல் என்ன கிஷ்கிந்தை அவதாரம்!—டியூஷன் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தேன். அவா வீட்டிலே ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டு இருந்தான். எங்க மாமா ஒருநாள் திடுதிப்பென்று அங்கே வந்து சேர்ந்தார்.

நான் ஓடி வந்துவிட்டேன்........."

"ஆமாம். அதைக் கேட்க மறந்துட்டேனே! நீ உங்க மாமாவுக்கு ரொம்ப வேண்டாதவன் போல இருக்கே! என்னத்தையோ கிளப்பிண்டு போயிட்டாயாமே? ஆனுல் மங்காமட்டும் உங்கிட்டே சந்தேகப்படவேயில்லை. எல்லாம் உன் போதாதகாலந்தான் என்று சொல்லுகிருள்!"

"மங்கா ரொம்ப தங்கமான பெண். நான் மறுபடியும் சொல்றேன், ராமசாமி! நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி! ஒரு காலத்திலே நான் நினைத்தேன்—மங்காவை ஒரு சர்வ சாதாரணமான பிரகிருதி என்று—அது கிடக்கட்டும். மீதியைக் கேளு. ஏதோ அசட்டுத்தனமா மாமா வீட்டிலேயிருந்து எங்க அம்மாவின் நகை ஒன்றைச் சொல்லாமல்கொள்ளாமல் எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டேன். மங்கா அதையெல்லாம் உனக்குச் சொல்லியிருப்பாள். மாமாவைக் கதலீபுரத்தில் தற்செயலாகப் பார்த்தவுடன் அவரைக்காண அஞ்சி அங்கிருந்து ஓடிவந்து விட்டேன். சென்னைக்குவந்து பேப்பரில் பார்க்கிறேன். ஒரு விளம்பரம்.

என் அங்க அடையாளங்களைச் சொல்லி நான் ஸார்ஜெண்ட் வீட்டு வைர அட்டிகையைத் திருடிவிட்டதாயும், பிடித்துக் கொடுத்தால் ஆயிரம் ரூபாய் இனும் என்றும் போட்டிருந்தது!..."

"துரதிர்ஷ்டம்! அப்பவே தெரிந்திருந்தால் அந்த ஆயிரம் ரூபாய் பரிசை அடித்துக்கொண்டு போயிருப்பேன்!"

"இப்போ பூர்வகதைச்சுருக்கம் இதுதான். நான் அங்கிருந்து ஓடிவந்த சமயம் பார்த்து இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட் அட்டிகையைக் கிளப்பிக்கொண்டு, என் பேரில் பழிபோட்டு விட்டான்போலிருக்கிறது. என் மாமாவும் தன் சாட்சியத்தைச் சேர்த்திருக்கிருர் என்று நினைக்கிறேன். இப்போ அந்த ரோக்—காலாடி ராஸ்கல்-தான், மாட்டிக் கொள்ளக்கூடாது என்பதற்காகச் சாவகாசமாய் அதை விற்க இங்கு வருகிருன். என்னிடம் அகப்பட்டுக் கொள்ளப் போகிருன்!... ஆமாம். நீ அவனை வரச் சொன்னுயா?"

"இன்னும் நாலுநாள் கழித்து அவன் மறுபடியும் இங்கே வருகிருன்!"

"பேஷ்! அவன் வருகிற அன்று எங்கேயாவது ஒளிந்து கொண்டிருக்கிறேன். வந்தபிறகு சொல்லியனுப்பு!... இனிமேல் நான் தைரியமாக எல்லோரையும் பார்க்கலாம். இதுவரை நான் செய்யாத ஒரு குற்றத்திற்காக அஞ்சி ஓடி ஒளிய வேண்டியிருந்தது. இனி நான் ஒரு சுதந்திர மனிதன். எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு என்று பாடினுரே அந்தக் கவியார்? கம்பனு, பாரதியா அல்லது திருவள்ளுவரா? சனியன் பிடித்தாற்போல் அமெரிக்காவில் சுற்றியதில் தமிழே மறந்துபோய்விட்டது!..." என்று ஒரு வழியாய் பேச்சை முடித்தான் சேகரன். உற்சாக பெருக்கினுல் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

சமீபத்தில் டன்லப் கம்பெனியாரின் பொன்விழா சென்னையில் நடந்தபோது மந்திரி ஸ்ரீ கோபால் ரெட்டியார் அதில் பேசினார். மந்திரிக்கு இடதுபுறம், ஜில்லா மானேஜர் மிஸ்டர் லக்ஹாம்; உதவி மானேஜர் ஸ்ரீ செல்லம் வலதுபுறமிருக்கிறார்.

"அப்பா! உன் பேச்சை முடித்துவிட்டாயா? சரியாய் ஐந்து நிமிஷம் மூன்று செகண்டு மூச்சு விடாமல் பேசியிருக்கிறாய், கிடக்கட்டும். ஒரு சமாசாரம், என் மாமனார்....."

"என் மாமா"

"ஆமாம்! உன் மாமா... தன்பெண்ணை..."

"உன் ஒய்ப்பை"

"ஆமாம். இதென்னடா குறுக்கே பேசிண்டு? என் ஒய்பை சென்னைக்கு அழைத்துக்கொண்டு வரச்சொல்லி எழுதியிருக்கிறார். அப்படியே என்னையும் அங்கே கொஞ்சநாள் இருந்து சீராடச் சொன்னார்...... அதனால் இன்னும் நாலைந்து நாளில் நானும், மங்காவும் சென்னைக்குப் போகிறோம்."

"வைர அட்டிகை!"

"அவனைப் பிடித்து விட்டுத்தான்!"

"அப்போ ரொம்ப சரி! அவனைப் பிடிச்சாச்சு என்றால் நானும் உன்னோடு வருகிறேன்." கதவிடுக்கிலிருந்து மங்களத்தின் குரல் கேட்டது. "அத்தான்! பழைய சமாசாரத்தையெல்லாம் மறந்துவிட்டு நீங்களும் நம்மாத்துக்கு வரணும். அப்பாவை நான் சரிப்படுத்திவிட்டேன். இந்த வைர அட்டிகை சமாசாரம் தெரிந்தவுடன் அவர் உங்களை அப்படியே ஆலிங்கனம் செய்து கொண்டு விடுவார்!"

"வெரிகுட், மங்கா! நான் உங்காத்துக்கு நிச்சயமாய் வருகிறேன்...இப்போ திருப்திதானே?"

மங்களம் கணவன் முகத்தைத் திருப்தியுடன் பார்த்தாள்.

(தொடரும்)



11

அண்ணாமலைக்கு அரோஹரா

★

மறுநாள் அண்ணாமலைத் தீபம், இன்றிரவு (டிஸம்பர் 13) மின்சார வெளிச்சம் திடீரென்று நின்றுவிட்டது: இரவு முழுதும் வராதென்று தெரியும். நான் ஒரு குத்துவிளக்கில் வீட்டில் இருந்த சொற்பக் கடலை எண்ணெயை வார்த்துத் திரி போட்டு மினுமினுவென்று எரியும்படி லேசாகத் தூண்டி வைத்துவிட்டு, அப்படியே கட்டிலில் படுத்துக்கொண்டேன். குத்துவிளக்கிற்கு அருகே, அவசியமானால் உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று இரண்டு மெழுகுவர்த்தி விளக்குகள் வைத்திருந்தேன். ஒன்று, அரைகுறையாக எரிந்து அணைத்து வைக்கப் பட்டிருந்தது. இரண்டாவது மெழுகுவர்த்தியோ புத்தம் புதிது; எரிவது இன்னதென்றே தெரியாதது.

விளக்குகளின் சம்பாஷணை

விழிப்பு-நிலையைவிட்டு நித்திரா தேவியின் பிரதேசத்தில் பிரவேசிக்கும் தருணம்; இந்தப் பிரபஞ்சத்திலிருந்து அந்தப் பிரபஞ்சத்திலே விழுந்துகொண்டு இருந்தேனென்று சொல்லலாம். அப்போது குத்துவிளக்கிற்கும், மெழுகுவர்த்திகளுக்குமிடையே ஒரு சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது. சம்பாஷணையின் ஒரு பகுதிதான் எனக்குப் புலனாயிற்று.

புதிய மெழுகுவத்தி தன் தமையன்மாரை நோக்கி தீபம் எரியும்போது எத்தகைய உணர்ச்சி—எப்படிப்பட்ட அனுபவம் ஏற்படுகிறது என்று கேட்டிருக்க வேண்டும். அந்தக் கேள்வி என் காதில் விழவில்லை; குத்துவிளக்கின் விடையிலிருந்துதான் அந்த வினாவை நான் ஊகித்துக்கொண்டேன்.

அந்த விடை இது: 'அனுபவித்து அறியாத உனக்கு அதை நான் எப்படித்தான் விளக்கமுடியும்? இனிமேல் அத்தகைய மூடக் கேள்விகளைக் கேட்கவேண்டாம்.'

அதே கேள்வியைப் புதிய மெழுகுவத்தி எரிந்து அணைந்திருந்த பழைய மெழுகுவத்தியை நோக்கிக் கேட்டது. பழைய மெழுகுவத்தி பதில் சொல்வதற்குள்ளே குத்துவிளக்கு, 'பையனைப் பேசாமல் இருக்கச்சொல்லு. அந்த அம்மாளைப்போல் நானும் தூங்கப்போகிறேன்' என்றது. அப்போது குத்துவிளக்கு மங்கிக்கொண்டிருந்தது.

அரைகுறையாக இருந்த மெழுகுவத்தி புதிய மெழுகுவத்தியை நோக்கி, 'தம்பி! நீ கேள்வி கேட்டது சரிதான். தெரியாததைத் தெரிந்துகொள்வது நியாயம்தான். ஆனால் உன் கேள்விக்கு விடை கூறுவது அவ்வளவு எளிதன்று. என்றாலும் சுருக்கமாய்ச் சொல்லத் தொடங்குகிறேன். ஏதாவது செய்துகொண்டிருக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படும்போதே, அது இன்பமாகத்தானே இருக்கிறது' என்று சொல்லிற்று.

அதற்குப் புதிய மெழுகுவர்த்தி, 'அப்படி என்ன செய்துவிட்டீர்கள் நீங்கள் இருவரும்? அண்ணா! நீ செய்ததெல்லாம் எரிந்து குறைந்து என்னைக்காட்டிலும் குறுகிவிட்ட செய்கைதானே? அந்தக் கோபக்காரக் குத்துவிளக்கு—முத்தண்ணாவும் எரிந்து எரிந்து எண்ணெய் குறைந்து இறக்கும் நிலையில் இருக்கிறார். சாகப் போகிறவர் "உறங்கப் போகிறேன்" என்கிறார். உங்களுடைய நிலைமை எனக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. என்னைக் கேட்டால் என்போல் சும்மா இருப்பதுதான் சுகம் என்பேன்: எரியவும் வேண்டாம், பொரியவும் வேண்டாம்; குறையவும் வேண்டாம், மறையவும் வேண்டாம்; நோகவும் வேண்டாம், மாளவும் வேண்டாம் என்று ஒரு பிரசங்கம் செய்து விட்டது.

'வாய்தான் நோவாதா? நான் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவேன்!' என்றது குத்துவிளக்கு.

தியாகமே இன்பம்

பழைய மெழுகுவர்த்தி புதிய மெழுகுவர்த்தியை நோக்கி, நீ தீபமாக ஒளி வீசுவதை விரும்பவில்லையா? அந்தச் செயல் திறத்திலே தியாகமும் இருக்கிறதல்லவா? அந்தத் தியாக உணர்ச்சிதான் உண்மையான இன்ப உணர்ச்சி' என்றது.

'தியாகமும் மாச்சு, யாகமும் ஆச்சு என்னுடைய இந்த உடம்பை எப்படியாவது காப்பாற்றிக் கொண்டிருந்தால் போதாதா? எனக்கு இதுவே யோகமும் போகமும்! நம்முடைய உடம்பைச் சந்தனக் கட்டை போல் தேய்த்தோ, உங்களைப் போல் மாய்த்தோ பணிபுரிவதில் இன்பம் இருக்கமுடியாதென்றே நான் நினைக்கிறேன் தன் உடல், பொருள், ஆவியைச் செலவுசெய்து "இது தியாக இன்பம்" என்றால், என்னால் துளியும் நம்ப முடியவில்லையே! வேறு யாருக்கோ ஒளி காட்டி நீங்கள் பெறும் லாபம்

தான் என்ன?' என்றது புதிய மெழுகுவர்த்தி.

'இந்த அதிகப்பிரசங்கிக்கு நீ ஏன் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறாய், எரிந்து ஒளிகண்டு தியாகநெறிகண்ட மெழுகு வத்தியே!' என்று ஓங்கி எரிந்தது குத்துவிளக்கு.

'அண்ணா! தாங்கள் கோபிக்காமல், கவலையில்லாமல் உறங்கப் போகலாம். இந்தப் பிள்ளைக்கு நான் வழிகாட்டுவேன்' என்றது பழைய மெழுகுவர்த்தி.

'உயர் திருவாளர் உறங்கப் போகிறாரா, அயர்ந்து மறைந்து போகிறாரா?' என்றது புதிய மெழுகுவர்த்தி.

'இந்தப்பிள்ளைக்கு ஒளி தெரியுமா? தியாகவழி தெரியுமா?' என்று சிறிச் சிந்தனைச் சுடர்களைச் சிதறிய வண்ணம் உறங்கி விழுந்தது குத்துவிளக்கின் ஒளி.

பிறகு பழைய வர்த்தி புதிய வர்த்தியை நோக்கி, 'தீபமாக விளங்குவதுதான் நமக்கு யாகமும் தியாகமும் அப்பா! தீபமாக ஒளி காட்டுமென்றால் அது சாதாரண உணர்ச்சியா? விண்ணிலே தீபங்களாகச் சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் விளங்குகின்றன. மண்ணிலே தீபங்கள் நாம்! இந்தப் புகழ் கொஞ்சமோ? பகலில் சூரியன் செய்யும் பெரும்பணியை நாம் ஒருவாறு இரவில் செய்கிறோம். சூரியன் உதயமானதும் இருள் ஓடுகிறதே, அப்படி ஓடுகிறது இருளும் நாம் தீபமாக எரியும் போது! இதிலுள்ள இன்ப உணர்ச்சிதான் கொஞ்சமா?' என்று சொல்லிற்று.

இப்படிப் பழைய வர்த்தி பேசி முடிப்பதற்குள் குத்துவிளக்கு அணைந்துபோயிற்று. இருள் சூழ்ந்துகொண்டது. அப்போது தான் அந்தக் குத்துவிளக்கின் செயல்-திறமும் தியாகமும் புதிய மெழுகு வர்த்திக்கு ஒருவாறு புரிந்தன. 'அடேயப்பா! இவ்வளவு இருளையும் துரத்திக்கொண்டிருந்தாரா அந்தக்குத்துவிளக்கு-மூத்தண்ணா?' என்று வியந்தது புதிய வர்த்தி. எனினும் 'இப்படித் தான் தேயத் தேயத் தவம் செய்ய வேணுமா? இந்தத் தியாகத்தினால் குத்து விளக்கிற்குப் பயன்தான் என்னவோ?' என்று முணுமுணுத்தது புதிய வர்த்தி.

'என் அன்புத் தம்பியே! உடல் தேயாமல், பயன்படாமல் இருந்து நீ பெறும் பயன்தான் என்னவோ? உன் உடம்பெல்லாம் மெழுகும் பஞ்சுத்திரியும்தானே—இப்படிப்பட்ட உடம்பில் பெருமை கொள்ளத்தக்க அம்சம் விசேஷமாக இல்லையே? மனித உடம்பில் கூட ஸோப் செய்யக்கூடிய கொழுப்பு, தீக்குச்சி செய்யக் கூடிய ஜலாகினி (Phospherous) முதலான—சில ரூபாய் பெறத் தக்க—பொருள்களே உண்டு. இத்தகைய உடம்புகளை உபயோகப் படுத்தாவிட்டால், ஒருவருக்கும் ஒருபயனும் இல்லை. குத்துவிளக்கு எரியும்போது அது இருள் துரத்திய ஒரு மங்கள தீபமாகப் பிரகாசித்ததல்லவா? அதுதான் அதன் பெருமை, அதன் தவம், அதன் தியாகம் இத்தகைய இன்பத்தைத் தான் "ஈந்து மகிழும் இன்பம்" என்கிறார் தமிழுக்கு ஓர் அண்ணாமலைத் தீபமாயிருக்கும் திருவள்ளுவர்' என்றது பழைய மெழுகு வர்த்தி.

அண்ணாமலைத் தீபம்

'அது என்ன அண்ணாமலைத் தீபம்? கார்த்திகைத்தீபம் என்று கேட்டிருக்கிறேன்' என்றது புதிய வர்த்தி.

'திருவண்ணாமலையில் கார்த்திகைத்தீபம்தான் அண்ணாமலைதீபம் என்பது. இந்தத் தீபவிழாவை ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் போய்த் தரிசிக்கிறார்கள். இந்தத் தீபம், எல்லா உலகங்களுக்கும் "பரஞ்சோதி" என்ற ஒரே ஜோதியாக விளங்கும் சிவபெருமானுக்கு நினைவுக் குறி. ஒரு காலத்தில்-அதாவது சரித்திரம் எட்டிப் பார்க்க முடியாத புராண காலத்திலே-சிவபெருமான் அடிமுடி தெரியாத ஒரு பெரிய நெருப்பு மலையாகத் தோன்றினாராம். படைப்புக்கடவுளான பிரம்மதேவர் அன்னப்பறவையாகிப் பறந்து போய் அந்த மலைபோன்ற ஜோதியின் முடி காண முடன்றாராம். மகா விஷ்ணு அடிகாணப் பூமியைத் தோண்டிக்கொண்டு புறப்பட்டாராம் வராக வடிவமாகி. எனினும் அடி கண்டாருமில்லை, முடிகண்டாருமில்லை, அந்த மகா சிவஜோதியின் நினைவுக்குறியாகத்தான் திருவண்ணாமலையில் கார்த்திகைத் தீப விழாவைக் கொண்டாடுகிறார்கள்' என்றது பழைய மெழுகு வர்த்தி.

"ஓஹோ! நாம் எரியும்போது சூரிய தீபத்திற்குமட்டும் பிரதிநிதி அல்ல, உலகங்களுக்கெல்லாம் ஒரு தீபமங்கள ஜோதியாக விளங்கும் சிவபெருமானுக்கும் சிறிய நினைவுக் குறிகள் ஆகிறோமா நாமும்? என்ன பாக்கியம், என்ன பேரின்பம்! அத்தகைய இன்ப உணர்ச்சியை நானும் அனுபவிக்க விரும்புகிறேன்' என்றது புதிய வர்த்தி.

பழையவர்த்தி பெரிதும்மகிழ்ச்சியடைந்து, 'அண்ணாமலைக்கு அரோஹரா!' என்று முழக்கியது. அந்த ஸ்தலத்தின் மலையுச்சியின் ஜோதியையே கண்டு விட்டது போல! அந்தப் பக்தி-முழக்கத்தைச் செவி குளிரக் கேட்ட நானும் உள்ளங்குளிர, வாய்குளிர 'அண்ணாமலைக்கு அரோஹரா!' என்று கோஷித்தேன்.

அந்த முழக்கத்திலே முற்றும் விழித்துக்கொண்டு, குத்துவிளக்கு அணைந்திருந்தால், அருகே வைத்திருந்த தீப்பெட்டியை இலக்காக எடுத்து ஒரு மெழுகு வத்தியை ஏற்றினேன். இதுவரை எரிந்து அனுபவம் பெற்றிராத புதிய மெழுகுவர்த்திதான். இந்தப் புதிய அனுபவம் கண்டு அது இன்பமுற்றதுபோலவே தோன்றியது.

அண்ணாமலைக் கதையின் உட்பொருள்

மெழுகுவர்த்தியை ஏற்றிவைத்துக்கொண்டு தேவார திருவாசகங்களிலே அண்ணாமலையைக் குறிக்கும் சில அழகிய பாடல்களை வாய் குளிர மனம் குளிரப் பாடினேன். அப்போது திருமாலும், பிரம்மதேவனும் அடிமுடிதேடிய கதையின் உட்பொருளும் ஒருவாறு விளங்கியது. சரஸ்வதியோடு கூடிய படைப்புக் கடவுள் முடி காணவில்லையென்றால், அறிவுத் திறமையால் கடவுளை அறிந்து கொள்ளமுடியாது என்று ஏற்படுகிறது. மகாலட்சுமியோடு கூடிய திருமால் அடிகாணவில்லையென்பது, 'பொருளால் பரம்பொருளைக் காண முடியாது' என்று பொருள் தரக்கூடும்.

இந்த உட்பொருளை மறுநாள் என் தோழி கமலாவிடம் சொன்னேன். 'இப்படிப் புராண ஸாரத்தைக் கிரகித்துக் கொண்டால் வீணான மதச்சண்டை ஏற்படாது' என்று அவளும் ஒப்புக்கொண்டாள்.

ஆரோக்ய வாழ்க்கை

இக் கட்டுரையில் விளக்கப்படும் வியாதியின் பெயரைப் பெரும்பாலோர் கேட்டிருக்கமாட்டார்கள். முன்னொரு காலத்தில் இரக்த-பித்தம் என்ற இவ் வியாதி பெருவாரியாக ஜனங்களைப் பீடித்ததால் ஆயுர்வேத நூல்களில் இது ஒரு கொடிய நோயாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்நாட்டில் இன்னும் ஒவ்வோரிடத்திலும் சிலர் இப் பொல்லாத ரோகத்திற்கு உள்ளாகிறார்கள். வட ஐரோப்பாவில் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு இது அந்நாட்டினரையே முக்கியமாக பாதிக்கும் நோயாக இருந்துவந்தது. ஆனால் இப்பொழுது மேனாடுகளில் எங்குமே இரக்த-பித்தம் (ஆங்கிலத்தில் ஸ்கர்வி எனப்படுவது) என்கிற இந்நோய் முற்றிலும் அகற்றப்பட்டுப் போய்விட்டது. இந்நாட்டினரை இன்னும் இது பல இடங்களில் பாதிப்பதற்குக் காரணமும், இதைத் தடுக்க அல்லது பரிகரிக்க ஏற்ற உபாயமும் இங்கு சுருங்கக் கூறப்படும்.

இரக்த-பித்தம்

★

வைத்தியரத்னம்

எம். துரைசாமி ஐயங்கார்

இரக்த-பித்த வியாதியில் முதலில் முக்கியமாகக் கவனத்திற்கு வரும் குறி உடல் (சர்ம) நிறத்தில் ஏற்படும் விசேஷ மாறுதலேயாம். சர்மத்தில் அதற்குள்ள சுபாவ நிறம் போய் ஒருவாறு வெளிறிய அல்லது மங்கலான மஞ்சள் நிறம் தோன்றும். அடுத்தாற்போல் அதிக சோர்வும் சுறுசுறுப்பின்மையும் எவ்வேலையைச் செய்வதிலும் வெறுப்பும் உண்டாகும். எழுந்து சிறிது நடந்தாலும் பிணியாளி அயர்ந்துவிடுவான். உடலிலுள்ள நாடி நரம்புகளும் தசைகளும், முக்கியமாய் கைகால்கள அமிதமான கடும் வேலை செய்தாற்போல் மிகவும் வலிப்படையும்.

பிறகு பல்லீறுகள் வீங்கிப் புண்ணாய்விடும்; சிறிது அழுத்தித் தேய்த்தபோதிலும் அவற்றிலிருந்து இரத்தங் கசியும். அவை மிகச் சிவந்து பஞ்சுபோல் சிதைவடையக்கூடிய நிலைமையைப் பெற்றிருக்கும். வியாதி முதிர்வடையுங்கால் இவ்வருவருப்பான குறிகள் அதிகரிக்க, பல்லீறுகள் மிகக் கறுத்துவிடும். உடற்சோர்வு அதிகரிக்கும். ஆகவே சொற்பம் எழுந்து அசைந்தாலும் மூச்சுத் திணற இருதயமும் படபடக்கும். வீங்கிக்கருநிறங்கொண்ட ஈறு பற்களை முற்றிலும் மூடி, பற்களும் எளிதில் ஆடிக் கழன்று விழும் நிலைமையைப் பெறுவதுண்டு. இப்பிணியாளியின் மூச்சுக்காற்று அருகில் இருப்பவனுக்கு அருவருப்புண்டாகுமாறு துர்நாற்றம் வீசும்.

இனி ஏற்படும் உபத்திரவங்கள் பிணியாளிக்கும், பார்ப்பவருக்கும் பெரிதும் அச்சந்தருபவையாயிருக்கும்: அவையே இரக்த-பித்தம் என்கிற வியாதிப் பெயரின் உண்மைப் பொருளை விளக்குபவையெனக்கூறலாம். உடலிலிருந்து இரத்தப் பெருக்கு தோன்றும்: விசேஷமாகப் பல்லீறுகளிலிருந்தும், நாசித்வாரங்களிலிருந்தும், குடலிலிருந்தும், புப்புஸங்களிலிருந்தும் (ச்வாஸப்பைகளிலிருந்தும்) இரத்தப்பெருக்கு காணும். சர்மத்திலுள்ள இரத்தமும் கொதிப்படைந்து, மயிர்க்கால்களிலிருந்தும் உதிரக்கசிவு உண்டாகக் காணலாம். இவ்வித இரத்தக் கசிவு அல்லது இரத்தக் கொப்புளங்கள் முக்கியமாய் இடுப்பிலும் அதற்குக் கீழ்ப்பாகங்களிலும் ஏற்படுவது வழக்கம். இரத்தக் கொதிப்பு ஏற்பட்டுள்ள பாகங்களில் நோவும் அழற்சியும் ஏற்பட்டு, அப்பாகங்கள அசைக்க நேரிட்டால் அச்சங்கடம் தாங்கவியலாததாயிருக்கும். இவ்வுபத்திரவத்திற்கு உள்ளாகும் முக்கியமான அவயவம் முழங்காலின் பின்புறமுள்ள மடிப்பு; இவ்விடம் வீக்கமும் அழற்சியும் பெற்று, முழங்கால் அசைத்து மடக்கவும், நீட்டவும் முடியாததாய்விடும்.

உடலிலிருந்து வெளியாக வேண்டிய வியர்வை நீர், சிறுநீர் முதலியவை மிகக் குறைந்து, சர்மமும் அதிக வறட்சியடையும். சொற்பமாக இறங்கும் சிறு நீர் மிகச்சூடாகவும் செந்நிறமாகவும் அதிக அழற்சியுண்டுபண்ணுவதாகவும் இருக்கும். இப்பிணியாளிக்குப் பெரிதும் அபாயகரமான—அடிக்கடி ஏற்படக்கூடியதான—முக்கியக் குறி மூர்ச்சை அல்லது மயக்கமேயாம். சரீரம் ஏதேனும் காரணத்தினால் சிறிது அசைய நேரிட்டாலும், இருதயவேலை தழுதழுத்துப்போய், மயக்கமுண்டாய், ஒவ்வொரு ஸமயம் அது உயிர் போகும் நிலைமையிலும் கொண்டுவிடுவதுண்டு.

இவ்வளவு அருவருப்பான அபாயகரமான பார்க்கப் பரிதாபமான பல அவலக்ஷணக்குறிகளுக்கிடையே, இந்த ரோகிக்கு இரண்டொரு நற்குணங்களைக்காட்டும். குறிகளும் இருப்பதைக் காணலாம். இப்பிணியாளிக்கு வியாதி ஏற்படுவதற்கு முன்பு இருந்தது போலவே இயற்கைப்பசி தொடர்ந்திருக்கும்; ஜீர்ணசக்தி

யும் பழுதடையாது நடந்து வரும். மனோ நிலைமையும், இயற்கையான மதி கூர்மையும் மந்தமடைவதில்லை. வியாதியின் ஆரம்ப நிலைமையில், (பிணியாளியை அசைத்துத்தடை செய்யாமலிருந்தால்) அவன் அமைதியாக உறங்குவதுமுண்டு. உடல் வலியால் ஏற்படும் ஒருவகை வெருப்பான நிலைமையைத்தவிர, வேறு மனக் கோளாறு எதையும் அவன் அவ்வளவாகப் பெறுவதில்லை. இதற்கு ஒட்டுவாரொட்டியென்கிற தீயகுணமும் கிடையாது.

இரத்தக் கொதிப்பாலும், பித்தநீர் அதிகரித்து அது ஜீரணவேலையில் உபயோகமாகாமற் போவதாலும் ஏற்படுகிறது இவ்வியாதி. தேக போஷணைக்குரிய உணவுச் சத்துகள் இரத்தத்தில் குறைந்து போவது முக்கிய முகாந்தரம் இவ்வியாதிக்கு. தாது போஷணைக்குரிய இரஸாயன குணம் அமையப்பெற்ற காய்கறி வகைகளும், பருப்பு வகைகளும் அடங்கிய உணவுகளை உண்ணாத நபர்களுக்குஇந்நோய் எளிதில் உண்டாகிறது. எவருக்கு எது ஸாத்மியம் என்று சாஸ்திரத்திற் கூறப்படுகிற வழக்கமான உணவோ, அவ்வித உணவை உடனே விலக்கி, வேறு வகை அஸாத்மியம் எனப்படுகிற வழக்கமில்லாத உணவை நீடித்து உபயோகிக்க நேரிட்டாலும் இந்தநோய் ஏற்படலாம். பதினேழாம் நூற்றுண்டின் இறுதியில் முதன்முதலாக பூமண்டலம் முழுதும் மரக்கலம் மூலமாய் பிரயாணம் செய்த முதல் புருஷன் என்று பெயர்பெற்ற லார்ட் ஜார்ஜ் ஆன்ஸன் என்ற மாலுமிதளகர்த்தர் தன் கப்பலில் அழைத்துப்போன நூற்றுக்கணக்கான கப்பல் பிரயாணிகளில் ஐந்தில் மூன்று பங்கு பேருக்கு இக்கொடிய நோய்கண்டு அவர்களை இழக்கநேரிட்டதாகவும், அதற்குக்காரணம் சுமார் இரண்டு வருடங்களாக ஏற்ற காய்கறியும் வழக்கமான உணவும் கிடைக்காமற்போனதே யென்றும் இது ஸம்பந்தமான சரித்திரம் படித்தவருக்குத் தெரிந்திருக்கும்.

இவ் வியாதியைத் தடுக்கவும், தீர்க்கவும் சிறந்த பசுமையான சாக வர்க்கங்களையும், பருப்பு, பழங்கள் முதலியவற்றையும் போதுமான அளவு உபயோகிக்க வேண்டும். இவ் வியாதியால் வருந்துபவருக்கு எலுமிச்சம் பழம் வெகு உபயோகமானது. முக்கியமாய் எலுமிச்சம் பழரஸம், கொடிமாதுளை ரஸம் முதலியவற்றைக் கொண்டு தயார் செய்யப்படும் ஜம்பீர பானகம், காதுலுங்க ரஸாயனம் போன்ற மருந்துகள் சிக்கிரத்தில் நோயைத் தீர்த்து சுகந்தரக் கூடியவை. பாலாரிஷ்டம். தசமூலாரிஷ்டம் முதலியவையும் இந் நோயாளிகளின் உடலைப் போஷித்து, பித்த தோஷத்தைத் தணித்து, இரத்தக் கொதிப்பையும் போக்கி குணந்தரக்கூடிய ஔஷதங்களாகும்.

பிரிட்டிஷ் மன்னருக்கு ரத்த ஓட்டம் தடைப்பட்டிருப்பதால் காலில் கோளாறு ஏற்பட்டிருக்கிறது இதனால் ஒரு காலையோ அல்லது இரண்டையுமேயோ எடுத்துவிடவேண்டுமென்பதாகவெல்லாம் வதந்திகள் உலவுவதை அதிகார பூர்வமாக மறுத்திருக்கின்றனர். மன்னர் கடைசி முறையாக வெளியே நடமாடியது சென்றமாதம் 11-ந்தேதி பெட்போர்ட்ஷயரிலுள்ள விவசாய என்ஜினிரிங் கழகத்தைப் பார்வையிட்டபோதுதான்.

பொன்னித் தேவி

'மாமு'

★

மகேந்திரவர்மன் ஒரு மன்னன். அவன் மரணப் படுக்கையில் இருந்தான். "யாரங்கே?" என்றான் அரசன்.

"அரசே" என்றான் பணியாளன். அடக்கத்துடன் வணங்கி நின்றான்.

"உடனே சென்று, தருமசீலனை அழைத்து வா" என, சேவகன் சென்றான். சிறிது நேரம் கழிந்தது. தருமசீலன் வந்து வணங்கினான்.

"தருமசீலா, நான் உன்னையே நம்பினேன். என் மகன் சித்திராங்கன் சிறுவன். அரசாளுவது அவனால் ஆகாது. எதிரிகள் வசமிருந்து தப்பவும் தெரியாது. நீ அவனைக் காப்பாற்று; நாட்டை நல்வழிப் படுத்து. வாக்குறுதி கொடுப்பாயா? நான் இறப்பது உறுதி. சாம்பலாவது நிச்சயம். ஆனால் என் மனம் வேகுமா? அது உன் வாய்ச் சொல்லில் உள்ளது!" என அரசன் கூறினான். பல முறை இருமினான். படுத்தான், எழுந்தான், அயர்ந்தான். ஒரு நிலையில் இருக்க அவனால் முடியவில்லை!

"அரசே! தங்களுக்கு நண்பர் பலர் உண்டு. ஆயினும் என்னை நம்பினீர். நான் என்ன கைம்மாறு செய்வேன்? தங்கள் கட்டளையை ஏற்றேன். இளவரசனை நான் காப்பேன். அதனால் என் உயிர் போனாலும்கூட, தக்க சல்விக்கும் ஏற்பாடு செய்கிறேன்; இது உறுதி" என்றான் தருமசீலன்.

"ஆனந்தம்! இதோ பல அறைகளின் சாவிகள். ஒரு அறையில் ஒரு அழகியின் படம் உள்ளது. அதனை மைந்தன் காணக்கூடாது. கண்டால் ஆபத்து! கவனம்..." அரசன் வார்த்தைகள் நின்றன. விரைவில் மூச்சும் நின்றது. அவன் இறந்தான். அரச மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டான்.

2

சித்திராங்கன் செல்வமாக வளர்ந்தான். பல கலைகள் கற்றான். அரண்மனையை நன்றாக அறிந்தான். ஒரு அறையில் பொன்னும் மணிகளும்; மற்றொன்றில் நூதன ஆடைகள்! வேறொன்றில் தானியக்களஞ்சியம்! இன்னொன்றில் அதிசய பொருள்கள்! சிறந்த நூல்கள் மற்றொரு அறையில்! கடைசியாகச் சிறிய அறை ஒன்று!

"இந்த அறையில் என்ன இருக்கிறது?"

"அதனைத் தாங்கள் காணக் கூடாது."

"ஏன்?"

"தங்கள் தந்தையின் கட்டளை அப்படி"

"எப்படியும் நான் பார்த்தே ஆகவேண்டும். இல்லாவிடில் உண்ணமாட்டேன்; உறங்கமாட்டேன்."

"இளவரசே! சற்று பொறுங்கள். போதும்"

சித்திராங்கன் சீறினான். தருமசீலன் தரவில்லை. அரசகுமாரனின் ஆவல் அதிகமாயிற்று.

பல நாட்கள் கடந்தன. ஒருநாள் அன்று தருமசீலன் ஏமாந்தான். சின்ன அறையின் சாவி காணோம்! எங்கே போயிற்று? தருமசீலன் ஓடினான். அதே அறை திறக்கப்பட்டிருந்தது! அவனுக்குப் பகீர் என்றது. படபடப்புடன் உள்ளே எட்டிப்பார்த்தான்! உள்ளே ஒரு படம் தொங்கிக்



கொண்டு இருந்தது! அதன்மேல் ஒரு திரை! திரையை இளவரசன் நீக்கப்போனான்.

"அரசே! வேண்டாம், வேண்டாம்......" என்று கூவினான்.

அதற்குள் திரை விலகியது. படத்திலே— இல்லை— பூர்ண அழகி ஒருத்தி இருந்தாள்! இளவரசன் விழிகள் மலர்ந்தன! கண்ணையும் கருத்தையும் அழகு பறித்தது. 'தொப்' என்று தரையில் விழுந்தான்; மூர்ச்சை அடைந்தான்.

"என்ன செய்வேன்! சொன்னால் கேட்டால் தானே, இனி வந்தது வம்பு" என்று தருமசீலன் அலறினான். தலையில்-வயிற்றில் அடித்துக்கொண்டான். தன் வாக்கை எண்ணினான்; விதியை நொந்தான். இளவரசனை மெதுவாகப் படுக்கையில் கிடத்தினான். தண்ணீர் தந்து, விசிறினான். சித்திராங்கன் மெதுவாக விழித்தான். தருமன் உயிர் பெற்றவன் ஆனான்.

"அந்த அழகி யார்?..." என்றான் மன்னன் மகன்.

"அவள் பெயர் பொன்னித்தேவி! அவள் தந்தை தங்கேசுவரன். மங்களபுரியின் அரசன்" என்றான் தருமசீலன்.

"அவளை நான் அடையவேண்டும். வழி சொல்லு இன்றேல் நான் இறப்பது மெய்! அது நல்லதுங்கூட!"

"இளவரசே! நான் இருக்க, தாங்கள் இறக்கவா? அவளை தாங்கள் மணக்க உதவுகிறேன். ஒரு பொன கப்பல் கட்டுக. அதனுள் பல பொருள்களைப் பொன்னால் அமைக்க, பிறகு அங்கு போவோம்" என்றான் தருமசீலன். கட்டளை விரைவில் நிறைவேறியது.

3

பொன் கப்பல் மங்களபுரியை அடைந்தது. "அரசே! தாங்கள் இங்கே இருங்கள். நான் அரசனைக்கண்டு வருகிறேன். முடியுமானால் அழகியையும் அழைத்து வருகிறேன்!" தருமசீலன் பட்டணத்துள் நுழைந்தான். அவனுடன் ஒரு பை. அதிலே பல பொருள்கள். அனைத்தும் கண்ணைக் கவரும் பொன்!

கோட்டை அருகே போனான். பக்கத்தில் ஒரு கிணறு. அதில் நீர் இழுத்துக்கொண்டிருந்தாள் ஒரு அழகி. மேலே வந்த குடமும் பொன்! கீழே கிடந்த குடமும் பொன். தருமசீலன் அவள் அருகே சென்றான்.

"அம்மா! இதுதானே மங்களபுரி?" என்றான்.

"இதுதான். நீங்கள் இந்த ஊருக்குப் புதியவரோ?" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம். விளையாட்டுப் பொருள்கள் விற்கும் வியாபாரி!" என்றான்.

"எங்கே எடும் பார்க்கலாம்"

தருமசீலன் பையினுள் கையை விட்டான். ஒவ்வொன்றாகப் பார்த்தாள். அவள் முகம் மலர்ந்தது.

"ஐயா! இவை மிக அழகாக இருக்கின்றன. எங்கள் அரசிக்கு மிகவும் பிடிக்கும். தயவுசெய்து என்கூட வருகிறீரா? அரண்மனை செல்வோம்" என்று கேட்டாள். தருமசீலன் இணங்கினான். இருவரும் சென்றனர்.

4

அரண்மனை மிக அழகானது. பொன்நிற கட்டடங்கள் நவரத்தினம் பதித்த கூடங்கள்—ஆகாயத்தை இடிக்கும் கோபுரங்கள்! தருமசீலன் அவைகளை வியப்புடன் பார்த்தான். தோழி அரசியின் அந்தப்புரம் சென்றாள். அரசியை அழைத்து வந்தாள்.

"எங்கே அவை? எடுங்கள் பார்ப்போம்" என்றாள் அரசியின் குரலிலே கிளி கொஞ்சியதா? வீணை பேசியதா? குயில் கூவியதா?

தருமசீலன் பையிலிருந்து சில பொம்மைகள் எடுத்தான். எல்லாம் மின்னும் பொன்! பசும் பொன்! ஒரு முயலுக்கு விசையுண்டு. அதைத் தொட்டான். குதித்து ஓடியது அது. ஒரு தவளை 'பாக், பாக்' என்று கதறியது. ஒரு குரங்கு 'பல்டி' அடித்தது. அதன் உடுப்பும், நடையும் காணச் சிரிப்பாயிருந்தது.

"அம்மணீ! இவை மிகச் சிறு பொம்மைகள். பெரியவை—வேடிக்கை நிறைந்தவை கப்பலிலே இருக்கின்றன, ஓடுகின்ற மீன், ஆடுகின்ற நண்டு, பாடுகின்ற முதலை, சண்டையிடும் குருவி எனப் பல தினுசுகள் உண்டு. எடுத்துவர வசதியில்லை. தாங்கள் கூடுமானால் வரலாம்." என்றான் தருமசீலன்.

"அவைகளை நான் அவசியம் காணவேண்டும், இதோ வந்துவிட்டேன்" அரசி ஓட்டமாக ஓடினாள். ஒரு மெல்லிய துணியால்



முக்காடிட்டுக் கொண்டாள். இரு தோழிகளுடன் புறப்பட்டாள். நான்கு சேவகர் அவளைப் பல்லக்கில் தூக்கிச் சென்றனர்.

அரசி துறைமுகத்தை அடைந்தாள். கப்பலின் உட் சென்றாள். பணிப்பெண்களும் உடன்சென்றனர். பெரிய பொருள்கள் பல இருந்தன. ஒருபுறம் ஒரு கூடம். கூரை முதல் கம்பளம் வரை அனைத்தும் பொன்

னாலே! மத்தியிலே ஒரு சிம்மாதனம். அதிலே ஒரு அரசன்! அவனுக்கு இரு பெண்கள் கவரி வீசினர்.

"இவைகள் கூட பொம்மையா?"

"ஆம் தாயே!"

"ஐயோ! இதன் அழகு என்னை அடிமையாக்கி விட்டது. உயிருள்ள அரசர்கள் கூட இவ்வளவு அழகாக இல்லையே!" அரசி ஏங்கினாள்.

"பெண்ணே! வருந்தாதே! என்னைப்போலவே ஒரு அரசன் உண்டு. அவன் பெயர் சித்திராங்கதன்" அரச பொம்மையே இதனைச் சொன்னது.

'அவரை நான் காண வேண்டும்" என்றாள் அரசி.

"ஏற்பாடு செய்கிறேன்–, இங்கே இருங்கள். உடனே வருகிறேன்" என்று தருமசீலன் சென்றான். சிறிது நேரத்தில் திரும்பி வந்தான்.

கப்பல் திடீரென புறப்பட்டுவிட்டது விரைவிலே வேகமாகச் சென்றது. அரசியும், தோழிகளும் கூவினர். பயனில்லை. கப்பல் போய்க்கொண்டே இருந்தது!

எல்லோரும் ஒரு நாள் காலை ஒரு துறைமுகத்தில் இறங்கினர். முன்னதாக பொம்மைகள் இறங்கின. பிறகு தருமசீலன், பின்னர் அரசி!

'ஐயா! வன் இப்படி எங்களை வஞ்சனை செய்தீர்! சித்திராங்சதர் இருப்பது உண்மையானால் காட்டுங்கள். இன்றேல் நான் தற்கொலைசெய்து கொள்வேன்!' எனச் சீறினாள் அரசி.

"வேண்டாம் அந்தக்கவலையை மறந்துவிடு இதோ! நான் இருக்கிறேனே—உன் அருகிலேயே!" அரச பொம்மை கூறியது இப்படி.



''ஸம்பத்தை பாருங்கோன்னா! ஒரு பருக்கை சாதம்கூட சாப்பிடமாட்டேன்னு அடம் பிடிக்கிறான்''

''ஏண்டியம்மா! உன் சமையல் அவனுக்கும் பிடிக்கலை போலேருக்கு''

"உனக்கு அவ்வளவு ஆணவமா? இரு. உன் தலையை உடைக்கிறேன்" அருகே கிடந்த ஒரு கோலை வீசினாள் அரசி. பொம்மையின் கிரீடம் தரையில் உருண்டது. பொன் உடைகளைக் களைந்து நின்றான் சித்திராங்கதன். அவனே இதுவரை அரச பொம்மை! அரசி அவனைக்கண்டு மயங்கினாள். இருவரையும் தருமசீலன் வாழ்த்தினான்.

அதே சமயம் அரசியின் தந்தை ஒரு பெரும் படையுடன் வந்தான். மகளின் நிலை அறிந்து–சண்டைபோட வந்ததை மறந்து—மகிழ்ந்தான். நன்னாளில் சித்திராங்கதனுக்கும், பொன்னித்தேவிக்கும் சிறப்பாக மணம் முடிந்தது.

பொன்னித்தேவி பொம்மைகளைப் பத்திரமாக வைத்திருந்தாள். சித்திராங்கதன் அரசன் ஆனான். தருமசீலன் கடமை முடிந்ததால் களித்தான்.



கணபதி சொன்ன கதை

—ப. ராதாகிருஷ்ணன்—

லொட படவென்ற பிரமாதமான சப்தத்துடன் எதிர் வீட்டு வாசலில் வந்து நின்றது ஒரு இரட்டை மாட்டு வண்டி. அதற்குத் தகுந்த ஆர்ப்பாட்டத்துடன் அதிலிருந்து இறங்கினான் என் நண்பன் கணபதி. அவனைத் தொடர்ந்து இறங்கிய அவனது வேலைக்கார முனியன் வண்டியினுள்ளிருந்த சாமான்களையும், மூட்டைகளையும் வீட்டினுள் கொண்டு சேர்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்தான். என் வீட்டு வாயிற்புறத்து 'ஆபீஸ்' அறையில் ஈஸிசேரில் சாய்ந்தவண்ணம் பத்திரிகையைப் புரட்டிய வண்ணமிருந்த நான் என் கவனத்தைத் தெருவில் நடந்துகொண்டிருந்த மேற்படி ஆரவாரங்களில் செலுத்தினேன்.

வீட்டு வாசற்படியில் நின்றுகொண்டு முனியனைப் பிரமாதமாக அதிகாரம் செய்துகொண்டிருந்தான் கணபதி. சாமான்கள் வெகு ஜோராக முனியனின் தலைமேலேறிக்கொண்டு சவாரி செய்தன. இரண்டு மூன்று பெரிய பெட்டிகள், பூதாகாரமான ஒரு படுக்கை, கைப்பிடியைப் பறிகொடுத்து விட்டுப் பரிதாபகரமான தோற்றமளித்த இரண்டு பைகள், பழங்கள் வைப்பதற்கே தகுதியற்ற ஒரு பழக்கூடை எல்லாவற்றையும் ஒவ்வொன்றாய்ச் சுமக்க முடியாமல் தட்டுத்தடுமாறிச் சுமந்துகொண்டு உள்ளே வைத்துவிட்டுத் திரும்பி வந்தான் முனியன்.

"டேய் முனியா, அந்தப் புஸ்தகக் கட்டை எடு, ஜாக்கிரதை. உன் கை பட்டுப் புஸ்தகங்களெல்லாம் அழுக்காய்விடப் போகிறது. முதலில் கையை நன்றாய்த் துடைத்து விட்டு எடு, போதும்." என்று ஏதோ இரைந்துகொண்டிருந்தான் கணபதி. மறு நிமிஷம் தடிற்தடியான புஸ்தகங்களடங்கிய கட்டொன்று வண்டிக்குள்ளிருந்துவெளிப்பட்டு முனியன் தலைமேலேறியது. ஆச்சரியத்தினால் என் கண்கள் மலர்ந்தன.

"இதென்ன இது? புஸ்தகங்கள்! அதிலும் சரியான 'மோட்டா' புஸ்தகங்கள்!! இவை நம் கணபதியிடம் எப்படி வந்து மாட்டிக்கொண்டன?" என்பதுதான் என் யோசனை. கணபதியின் இரைச்சல் மறுபடியும் கிளம்பி என் யோசனையைக் கலைத்தது.

"டேய் முனியா, அந்தப் பெட்டியைக் கொஞ்சம் ஜாக்கிரதையாய் எடுடா. அவ்வளவும் கண்ணாடி பாட்டில்கள். அதில் ஒன்று உடைந்து மருந்து ஏதாவது கொட்டிக் கிட்டிப் போச்சோ, அப்புறம் உன்னை......" என் வியப்பு எல்லை மீறியது. அதை இன்னும் அதிகரிக்கச் செய்வதுபோல் நண்பன் கணபதியே முன் சென்று வண்டிக்குள்ளிருந்து ஒரு கண்ணாடிக் கருவியை எடுத்தான். சாதாரணமாக ரஸாயனசாலைகளில் காணப்படும் 'ரிடார்ட்' என்ற கருவி அது. அதன் நீண்ட மூக்கு கணபதியின் மூக்கையொத்திருந்தது என்பதைத்தவிர அவனுக்கும் அதற்கும் வேறு எவ்விதமான சம்பந்தமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

என் ஆச்சரியத்திற்குக் காரணமில்லாமலில்லை. கணபதி என் பால்ய சிநேகிதன். கேவலம் எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும் என்றுதான் அவன் தன் படிப்பை அவ்வளவுடனே நிறுத்திக் கொண்டுவிட்டிருந்தான். தடிப் பிரமசாரியாய் வீட்டிலுட்கார்ந்துகொண்டு தன் தகப்பனார் குவித்து வைத்து விட்டுப் போயிருந்த செல்வத்தையெல்லாம் உண்பதிலும் உறங்குவதிலும் கரைத்துக்கொண்டிருந்தான். கோடையைக் கழிக்க நீலகிரிக்குப் போய் இரண்டொரு மாதம் தங்கியிருந்து விட்டு, இப்போதுதான் திரும்பி வருகிறான். இந்தச் சொற்ப காலத்திற்குள் அவனிடம் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்க முடியுமா என்பதுதான் என் மூளையைக் குழப்பும் சந்தேகமாயிருந்தது.

மேற்படி ரஸாயனக் கருவிகளையெல்லாம் வீட்டினுள்ளனுப்பிய பின், கம்பீரமாக இடுப்பில்கையை ஊன்றி நின்றுகொண்டு தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று ஒரு முறை சுற்றுமுற்றும் நோக்கினான் கணபதி.

ஜன்னல் கம்பிகளுக்கிடையில் முகத்தைப் பதித்தவண்ணம் நின்றுகொண்டிருந்த நான், "அடே கணபதி, எப்படா வந்தாய்?" என்றொரு கூப்பாடு போட்டேன். என்புறம் திரும்பிப் பார்த்துவிட்டு கணபதி "இப்போதானடா வந்தேன். ஏன்? நான் வண்டியிலிருந்து இறங்கி சாமான்களையெல்லாம் எடுத்து வைத்ததை நீ பார்க்கவில்லையா என்ன?" என்று பதிலுக்குக் கத்திக் கொண்டே தெருவைக் கடந்து என் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன் முகத்தில் காணப்பட்ட லேசான ஏமாற்றத்தின் ரேகையை நான் சரியாகவே அர்த்தம் செய்து கொண்டுவிட்டேன். தான் கொண்டு வந்திருந்த அந்த விக்ஞா

னக் கருவிகளைப் பிறர் பார்த்துத் தன்னிடம் ஒரு புது மதிப்புக் கொள்ள வேண்டுமென்று நண்பன் கணபதியின் ஆவல். எனவே நானும் அதற்குத் தகுந்தாற்போல் பேசி அவனிடமிருந்து விஷயத்தைக் கிரகிக்க முயன்றேன்.

"எல்லாம் பார்த்துக்கொண்டு தான் இருந்தேன். ஆனால் அதற்காகச் சம்பிரதாயமாய்க் கேட்கிற கேள்வியை விட்டு விடுவார்களா என்ன? அதிருக்கட்டும். ஏண்டா கணபதி, வெயிலில் உன் மூளை உருகிப் போகிறதென்று தானே நீ நீலகிரிக்குப் போனாய்? அங்கு போனபின்பும் உன் மூளைக்கு என்னடா ஆகிவிட்டது? திரும்பி வரும்போது பிரமாதமாய்ப் புஸ்தகங்களும், ரஸாயனச் சாமான்களுமாகப் பெரிய மூட்டை கட்டிக் கொண்டு வந்திருக்கிறாயே. நாங்களெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம் உனக்கும், கல்வியறிவிற்கும் காததூரம் என்று. நீ என்னடாவென்றால்........'' என்று நான் முடிப்பதற்குள் கணபதி குறுக்கே விழுந்து, தான் புத்துயிர் பெற்ற விருத்தாந்தத்தை விரிவாகச் சொன்னான்.

கணபதி சொன்னான்:—

நீலகிரியில் நான் தங்கியிருந்தது மலைச்சரிவிலிருந்த ஒரு பெரிய பங்களா. அதில் நானும் என் வேலைக்கார முனியனும் மட்டும்தான் இருந்தோம். இந்தப் பங்களாவின் பக்கத்தில் சுமார் ஐம்பது கஜதூரத்திற்கப்பால் இன்னொரு பங்களா, அதுவும் முற்றிலும் காலி. அந்தப் பக்கத்தில் அருகாமையில் வேறு ஒரு வீடும் கிடையாது. வெகு நாட்களாகப் பூட்டிக் கிடந்து கவனிப்பாரற்று இருந்ததுபோலும் அந்த பக்கத்துப் பங்களா. கிட்டத்தட்டப் பாழடைந்து காணப்பட்டது அது. அதன் தோற்றத்தைப் பார்க்கும்போது அதற்கு யாரும் குடியிருக்கவோ அல்லது சொற்ப காலமேனும் தங்கியிருப்பதற்குக் கூட வருவார்களென்று எனக்குத் தோன்றவில்லை. எனக்குப் பேச்சுத் துணைக்கு ஆள் இல்லாமல் சிறிது கஷ்டமாகவே இருந்தது. ஆனால் நான் சென்ற வேளையின் விசேஷமோ என்னமோ எனக்கு வேறு சௌகரியமான இடம் கிடைக்கவில்லை.



"திடீரென்று ஒரு நாள் மாலை அந்தப்பங்களாவின் கதவுகள், ஜன்னல்களெல்லாம் திறந்திருப்பதைப் பார்த்தேன். நான் எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக அங்கு யாரோ குடிவந்திருந்தார்கள். என் மனம் சற்றே மகிழ்ச்சியுற்றது. வந்திருப்பவரிடம் பேசிப் பொழுது போக்கலாமென்றெண்ணித்தான். ஆனால் அதற்குள் என்ன ஏமாற்றம்! என் வேலைக்காரன் வாயிலாக, வந்தவர் ஒரு பிரபல விஞ்ஞானசாஸ்திரியார் என்றறிருந்தேன். 'இவர் வராமலே இருந்திருந்தால் தேவலையே' என்றுகூட எண்ணினேன். 'விஞ்ஞானம்' என்றால் எனக்கு அத்தனை பயம். பயம் காரணமாக வெறுப்பு. நாம் மூன்றாவது பாரம் படித்துக் கொண்டிருந்தபோது ஒருநாள் நம் ஸ்கூல் ரஸாயனசாலையில் பரிசோதனைகள் நடத்திக் கொண்டிருந்தோமல்லவா? அப்போது கந்தகம் முதலான மருந்துகள் வெடித்து அதன் பலனாய் என் மூஞ்சியெல்லாம் ரணமாகி விட்டதெல்லாம் உனக்குத்தான் நன்றாய்த் தெரியுமே. திரும்பத் திரும்ப அதே நினைவுதான் வந்து என்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது. அதிலும் இவர் பெரிய விஞ்ஞானி, பல மருந்துகளைக் கண்டுபிடித்து ஏராளமாய் உற்பத்தி செய்து அவற்றிற்கெல்லாம் உரிமை (Patent) பெற்றவர். நானோ? என்னைப்பற்றி நான் சொல்லிக்கொள்ளவே வேண்டியதில்லை. எனக்கும் அவருக்குமிடையில் மலைக்கும் மடுவுக்குமுள்ள பேதம்

இருந்தது. மேலும் அவருடன் பேச்சுக் கொடுத்தால் பிரம்மாண்டமான வாயில் நுழையாத விக்ஞான வார்த்தைகளையெல்லாம் பிரயோகித்து என்னைத் திணற அடித்து விடுவாரென்று வேறு யோசனை எனக்கு. எனவே கூடிய வரை அவரது கண்களில் தட்டுப் படாமலேயே சிறிது நாள் தள்ளினேன்.



ஆனால் நான் அவ்வளவு சிரமமெடுத்துக்கொண்டு ஒளிந்து மறைந்திருக்க வேண்டியதில்லையென்று பின்புதான்தெரியவந்தது. சுபாவமாகவே யாருடனும்தானாக நெருங்கிப் பேசிப் பழகுபவரல்ல அவர். தன்வேலையுண்டு, தானுண்டு என்றிருப்பார். வேலையென்றால் எப்படிப்பட்ட வேலை! அப்பப்பா! அந்த மாதிரி அல்லும் பகலும் அலுக்காது உழைப்பவரை நான் எங்கும் கண்டதில்லை. என் அறையின் ஜன்னலிருந்து பார்த்தால் அவர் தன் அறையில் உட்கார்ந்திருப்பது தெரியும். சுற்றிலும் பலவிதமான ரஸாயனப் பொருள்கள், கண்ணாடிக் கருவிகள், ஒரு பூதக்கண்ணாடி (Microscope) இவைகளை வைத்துக்கொண்டு அவர் பண்ணும் அமர்க்களம் சொல்லிமுடியாது. பொழுது விடிந்தால் பொழுது போனால் அவருக்கு இதே வேலை. என் வேலையென்னவென்கிறாயோ? ஈஸிசேரில் சாய்ந்தபடி அவற்றைக் கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருப்பது. எந்த நிமிஷமும் அந்த ரஸாயனப் பொருள்கள் கைத்தவறுதலாக வெடித்து அந்தப் பக்கத்துப் பங்களாவே என் கண்ணெதிரில் தூள் தூளாகிவிடலாம் என்ற அச்சம்கூட ஒவ்வொரு சமயம் என் நெஞ்சில் உதிப்பதுண்டு.

அவர் ஏகாங்கி. விவாகமே செய்து கொள்ளவில்லையாம். ஒரு இடத்திலும் நிலையாக வசிப்பதுமில்லையாம். நம் நாட்டிலும், மேல் நாட்டிலும் பல வருஷங்களாக சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருந்தாராம். கடைசியாக இப்பொழுது கோடையைக் கழிக்கும்பொருட்டு நீலகிரிக்கு வந்திருக்கிறார். இவ்வளவில் விசேஷம் என்னவென்றால் அந்தப் பங்களா அவருக்கே சொந்தமாம். அதை அவர் காலி செய்து கொண்டு லோகசஞ்சாரம்செய்யத்தொடங்கியிருந்ததிலிருந்து கடந்த இருபது வருஷங்களுக்குப் பின் இப்போது தான் மறுபடி இங்கு வருகிறார். இந் நீண்டகாலத்தில் வேறு ஒருவரையும் குடிக்கூலிக்குக்கூட இந்தப்பங்களாவில் அனுமதித்ததில்லையாம். இவ்வளவு விவரங்களையும் என் வேலைக்காரன் மூலமாக அறிந்து கொண்டேன். அந்த விக்ஞானிப்பெரியவரின் வேலையாளும் நம் முனியனும் தான் ஆப்த சிநேகிதர்களாகி விட்டிருந்தார்களே!

அவர் வந்து சில நாட்கள் ஆகி விட்டன. நாங்களிருவரும் இன்னும் ஒருவருக்கொருவர் பரிச்சயமேயாகவில்லை. எப்படி ஆகியிருக்க முடியும்? அன்று இரவு காற்றும் மழையும் வெகு கடுமை. குளிரோ கேட்கவேண்டியதில்லை, கதவு ஜன்னலொன்றும் திறந்து வைக்க முடியாதபடி. ஆனால் எனக்கு ஹோட்டலிலிருந்து சாப்பாடு வாங்கி வைத்துவிட்டு மாலையிலேயே ஊர் சுற்றிவரக் கிளம்பிவிட்டான் முனியன். அவனுடன் மேற்படி விக்ஞானியின் வேலையாளும் போயிருந்தான். இரவில் பாதை கண்டுகொண்டு வீட்டுக்குத் திரும்புவது கஷ்டம் என்று தெரியுமாதலால் முனியனை காலையில் வந்தால்போதும் என்று நானே சொல்லியனுப்பிவிட்டேன். எனவே என் பங்களாவில் நானும் அடுத்த பங்களாவில் விக்ஞான நிபுணர் மிஸ்டர் ஆர்யாவும் தனிமையில்தானிருந்தோம்.

சாதாரணமாகவே நான் பெரிய தூங்குமூஞ்சி. அதிலும் நீலகிரிமலையுச்சியில் இந்தப் பல்லைக் கிட்டுகிற குளிரில் எப்படித் தூங்குவேனென்று கேட்கவாவேண்டும்! கம்பளிமேல் கம்பளியாகப்போர்த்துக்கொண்டு சுருண்டு படுத்துப் பிரமானந்தமான நித்திரையிலாழ்ந்திருந்தேன். வெளியேநடந்து கொண்டிருந்த இயற்கையின் ஆர்ப்பாட்டங்களெல்லாம் என் நித்திரைக்குப்பங்கம் விளைவிக்கமுடியவில்லை.

நடு நிசி வேளை. யாரோ 'தட தட'வென்று கதவைத் தட்டும்

சப்தம் கேட்டது. தூக்கிவாரிப் போட்டுக்கொண்டெழுந்தேன். கதவுக்கு வெளிப்புறமிருந்து ஒரு அறிமுகமில்லாத குரல் கேட்டது "ஸார் கொஞ்சம் கதவைத் திறக்கமாட்டீர்களா?" என்று கெஞ்சும் தோரணையில். உள்ளூறப் பயமிருந்ததென்றாலும் அதை வெளிக்காட்டாமல் எழுந்து சென்று கதவைத் திறந்தேன். கொட்டுகிற மழையில் நனைந்து கொண்டு குளிரால் நடுங்கிக்கொண்டு நின்றிருந்தார் விக்ஞான நண்பர். இந்நேரத்தில், இந்நிலையில் இவர் இங்கு வரக் காரணம் யாதாயிருக்க முடியுமென்று அதிசயித்தேன். ஆனால் மறுகணம் வெளிச்சத்தில் அவர் முகத்தைப் பார்த்ததுமே என் அதிசயம் மாறி, என்னையும் திகில் பற்றிக்கொண்டது.

'பயமறைந்தவன் மாதிரி' என்பார்களே, அதை அன்றுதான் கண்கூடாகக் கண்டேன். அவர் உடலின் ஒவ்வொரு தசையும் நடுங்கிக்கொண்டிருந்ததைப் பார்க்கும்போது, அது கேவலம் குளிரினால் மட்டுமல்ல என்று விளங்கியது. அவரது விழிகள் பயங்கரமாகப் பிதுங்கி வெளி வந்துவிடும் போலிருந்தன. என்னைப் பார்த்து வாய் பேசாமல் ஒரு கணம் விழித்தவர் உடனே என் கையைப்பற்றி என்னைக் கதவுக்கு வெளியே அழைத்துச் சென்றார். அப்போதிருந்த எங்கள் மனோ நிலையில் கொட்டுகிற மழையைத்தானா பொருட்படுத்தியிருக்கப் போகிறோம்?

அவர் தன் கையால் சுட்டிக் காட்டினார். அவர் வழக்கமாக உட்கார்ந்து வேலை செய்யும் அதே அறை. உள்ளே எரிந்துகொண்டிருந்த பிரகாசமான மின்சார விளக்கின் வெளிச்சத்தில் நான் கண்டதென்ன? அப்பப்பா! நினைக்கும்போதே மெய் சிலிர்க்கிறது. விக்ஞானியாரின் நாற்காலியில் தூய வெண்ணுடை தரித்த ஒருருவம் அமர்ந்து, மேஜைமீது வைக்கப்பட்டிருந்த சூக்ஷ்மதரிசினி



"நம்ப வக்கீல் சுந்திரமய்யருக்கு இப்பொல்லாம் பிரமாத 'ப்ராக்டீஸ்' போலேருக்கு. அவர் வீட்லே கக்ஷிக்காரா வருவதும் போவதுமாக இருக்காளே......"

"சரியாப்போச்சு போங்கோ; அவருக்கும் எனக்கும் 'ப்ராக்டீஸ்' வேறயா கேடு! அவாள்ளெல்லாம் கடன்காரா ஸ்வாமி, கடன்காரா."

யில் (Microscope) கண்ணை வைத்துக்கொண்டு மிகக் கவனத்துடன் எதையோ பரிசீலித்துக்கொண்டிருந்தது. அவ்வுடையின் வெண்மையுடன்போட்டிபோட்டுக்கொண்டு நீண்டு வளர்ந்து அதன் மார்பில் படிந்திருந்தது ஒரு வெண் தாடி. பார்க்கும்போதே அதனிடம் ஒரு அமானுஷ்யத்வம் காணப்பட்டது.

சுட்டிக் காட்டின நண்பருக்குப் பேச நாவெழவில்லை. நான் ஒரு மாதிரியாகத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அவரை நோக்கிக் கேட்டேன்.

"அது யார் தெரியுமா உமக்கு?"

"தெரியும். அது ஒரு பிசாசு" என்று தடுமாறும் குரலில் பதில் வந்தது.

"அது பிசாசு என்று நீர் எப்படிச் சொல்லுகிறீர்? நம்மைப் போலவே அது ஒரு உயிரும் உடலும் கூடிய மனிதனாக இருக்க முடியாதா?" என்றேன் நான். கேட்டதில் எனக்கே நம்பிக்கையில்லை.

"இல்லை. அது பிசாசுதான்—அதிலும் இது என் புரொபஸரின் (Professor) பிசாசு. இது மனித உடலில் இருக்கும்போது இதை நான் நன்கறிவேன். இதே ஊரில் இதே பங்களாவில்தான் அவர் இறந்து இங்கேயே அடக்கம் செய்யப்பட்டார். அச்சமயம் நான் எல்லாவற்றையும் என் கண்ணாலேயே பார்த்தேன். மனிதர்களில் அவரைப்போல் உருவமுடையவர்கள் வேறொருவருமே இருக்க முடியாது." என்று உறுதியாய்ச் சொன்னார் நண்பர் ஆர்யா.

"உம்முடைய புரொபஸர் தானே? அவரிடம் ஏன் இப்படிப் பயப்படுகிறீர்? நீர்தான் எல்லாம் படித்துத் தெரிந்துகொண்டுவிட்டீரே. அவர் ஏதாவது கேள்வி கேட்டால் 'டக்'கென்று பதில் சொல்லிவிட்டால் போகிறது. அப்படியே பதில் சொல்ல உமக்குத் தெரியாவிட்டால்தானென்ன? உம் தலையையொன்றும் நறுக்கிவிடமாட்டாரே." என்று பரிகாசமாய்ச் சொன்னேன். உள்ளூற என்னமோ எனக்கும் திகில் இருக்கத்தான் செய்தது.

[அடுத்த இதழில் முடியும்.]

நாமொன்று நினைக்க......!

ய. மகாலிங்க சாஸ்திரி எம்.ஏ.பி.எல.

உஷா ஸ்ரீ வேங்கிடசுப்பையரின் பாதங்களில் பணிந்து நின்ருள். அவள் தலை கவிழ்ந்து கண்கள் கீழ் நோக்கின. முகத்தில் நாணம் தாண்டவமாடிற்று. இடது கையை இடுப்பின் லேசாய்ப்பொருத்தியும் வலது கையை சுபாவமாய் தொங்கவிட்டுக்கொண்டும் விறைப்பில்லாமல் வணங்கிய கொடிபோன்ற சரீரத்துடன் இடது கால் கட்டைவிரலால் தரையைக் கீறிக்கொண்டு அவள் நிற்கும் நிலை வேங்கிடசுப்பையரின் உள்ளத்தைக்கவர்ந்தது. ராமநாதன் மறைவாய் மாடிப்படியில் நின்றுகொண்டு, அவள் புருவத்தின் வில்போல் வளைந்த கூரிய கோடுகளையும், அஷ்டமி சந்திரன் போன்ற நெற்றியையும், அரைவாசி மூடிய கண் இதழ்களின் அடர்ந்த இமைகளையும், துளிர் போன்று மெல்லியதும் அழகுக்குமிழியையொத்த நுனியை உடையதும் எடுப்பாய் விளங்குவதுமான நாசியையும் அச்சடித்து வரையப்பட்டதுபோன்ற உதடுகளின் வசீகரமானசுரைவுகளோடு கூடிய ரேகைகளையும், தள தளவென்று பிரகாசிக்கும் நிர்மலமான கபோலங்களையும் முகமாகிற கண்ணுடிக்குப் பிடிபோன்ற எழில் நிறைந்த தாவாக் கட்டையையும் விரிந்த கண்களால் பருகி ஆனந்த பரவசனானன்.

காந்திமதி, அவள் கருங் கூந்தலைப் பிணைத்து முதுகு நடுவே நீண்டு தொங்கும்படி விடப்பட்ட பின்னலைத் தன்னை அறியாமலே கிட்டேவந்து தடவிக்கொடுத்து "உஷா" என்று அருமையாய் அழைத்துத் தன் சகோதரித் தன்மையை உணர்த்துபவள் போல் முகத்தைக் குனிந்து நோக்கினாள். செல்லம் "நானல்லவா சகோதரி" என்று போட்டிக்கு வருபவள்போல் உஷாவின் மறு பக்கத்தில் வந்து நின்றுகொண்டு அவள் இடது புஜத்தை லேசாகப் பற்றிக்கொண்டாள். சங்கரி அம்மாள் கண்குளிர அந்த திவ்ய ரூபத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். கோபிநாத் கோமதியைத் தனியே அழைத்து "இவள் யார்?" என்று விசாரிக்கலானார். குழந்தை ராதா தாத்தாவின் காலடியில் நின்றுகொண்டு உஷாவை ஆச்சர்யத்துடன்நோக்கி அவள் நிருத்த நிலையை அப்யஸிக்கலானாள். மதுரப்பாட்டி, "இது ஏதுடி! அதிசயம்!" என்று மூக்கில் ஒரு விரல் சேர முகத்தில் ஒரு கோணல்தோன்ற முழங்கை விரிய இடுப்பில் மற்றொரு கையை முட்டுக் கொடுத்துக்கொண்டு எதிர் நாட்டியத்திற்குத் தயாராயிருப்பவள்போல் ஒரு பக்கத்தில் காட்சி அளித்தாள்.

சிவராமன் அத்திம்பேர் என்ன சொல்லப் போகிறாரோ என்று ஆவலுடன் அவர் முகத்தைப் பார்ப்பதும் உஷாவை கவனிப்பதுமாயிருந்தார்.

வேங்கிடசுப்பையர் சிவராமனை நிமிர்ந்து பார்த்தார். "சிவராமா! இந்தக்குழந்தையை எட்டு, ஒன்பது வயதுவரை நீதானே ஸம்ரக்ஷித்து வந்தாய்!"

"ஆமாம்"

"இவள் தன் பெரியாயியிடம் வந்து ஒருவருஷம்தானே ஆகிறது?"

"ஆமாம்."

"இவளுக்கு ஸங்கீதமோ, நாட்டியமோ அழகிரி ஒன்றும் வாத்தியாரை வைத்துச்சொல்லிக் கொடுக்கவில்லையே?"

"கிடையாது. உஷா தன் தாயாரிடத்திலும் அவளுக்குப் பந்துவான வேறொரு நட்டுவனாரிடத்திலும்தான் சிட்சை சொல்லிக் கொண்டது"

"அழகிரி இவளுக்கு ஒரு வருஷம் சாப்பாடு போட்டிருக்கிறானே?"

"ஆம், அவ்வளவுதான்."

வேங்கிடசுப்பையர் அரை நிமிஷம் மௌனமாயிருந்துவிட்டு, காந்திமதியைப்பார்த்து, "காந்திமதி! உஷாவுக்கு உங்களுக்குப்பக்கத்தில் ஒரு ரூம் ஒழித்துக்கொடு" என்று ஆக்ஞாபித்தார்.

"அவள் இப்போது ஸத்தியாக என் ரூமிலேயே இருக்கட்டும் என்று சொல்லிச்செல்லம் உஷாவின் கையைப் பிடித்துத்தன் பக்கம் அவளை இழுத்துக்கொண்டாள்.

வேங்கிடசுப்பையர்; "சரி, சிவராமா! ஒரு காரியம் முடிந்தது. இரண்டாவது என்னவென்று கேள்—" என்று ஆரம்பித்தார்.

சிவராமன் ஒன்றும் புரியாமல் விழித்தார். உஷாவுடன் செல்லமும் காந்திமதியும் பக்கத்து ரூமுக்குச் சென்றுவிட்டார்கள். சங்கரிதான் அங்கு இருக்கலாமோ, இருக்கக்கூடாதோ என்று சந்தேகங்கொண்டவள்போல்பின்னே இரண்டடி நகர்ந்தாள். வேங்கிடசுப்பையர் அந்த ஜாடையறிந்து அவள் அடுத்ததான மந்திராலோசனைக்கு இன்றியமையாதவள்

என்று தெரிவிக்க நினைத்தவர் போல் அவள் பக்கம் திரும்பி, "நீ ஏதோ சொன்னுயே—ஹெட்மாஸ்டரை விசாரித்தால் தெரியும் என்று—அதுதான் இரண்டாவது விஷயம்." என்று வியாக்யானம் பண்ணினுர்.

"ஆமாம். காந்திமதி சொன்னது தான் எனக்குத் தெரியும்." என்ருள் சங்கரி, ஏதோ பொறுப்பை ஒப்புக்கொள்ள பயந்தவள்போல்.

"காந்திமதி சொன்னது போதும்" என்று அவளுக்குப்பதில் சொல்லிவிட்டு வேங்கிடசுப்பையர் சிவராமனைப் பார்த்து, "சிவராமா! நீ போய் இந்தக் குட்டிகள் படிக்கும் பள்ளிக்கூட ஹெட்மாஸ்டரை அழைத்து வா, கார் டிரைவருக்கு அவர் வீடு தெரியும்" என்று கட்டளையிட்டார்.

சிவராமன் சற்று தயக்கத்துடன் மென்று விழுங்கிக்கொண்டு, "போகும்போது உஷாவைக் கொண்டுபோய் அவள் வீட்டில் விட்டுவிட்டுப் போகலாமல்லவா? அரை மணியில் அவளைத் திருப்பிக் கொண்டு வந்து விட்டுவிடுவதாய்ச் சொல்லி அழைத்து வந்தேன்" என்று தெரிவித்துக்கொண்டார்.

வேங்கிடசுப்பையர் லேசாகச் சிரித்துக்கொண்டு, "அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு; சிவராமா! நீ போய் நான் சொன்ன காரியத்தைக் கவனி:' என்று கூறினுர்.

சிவராமன் புறப்பட்டுப்போன பிறகு அழகிரி அனுப்பிய ஆள் ஒருவன் சைக்கிளில் வந்து உஷாவைப் பொன்னுசாமி பிள்ளை பார்த்துவரச்சொன்னதாகத் தெரிவித்துவிட்டுக் காத்திருந்தான்.

மதுரப்பாட்டியைத் தவிர மற்றவர்கள் அந்த தூதன் வரவைக் கண்டு அஞ்சினுர்கள். ஐயர் என்ன பதில்சொல்லப் போகிருரோ என்று எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். ஐயருக்கு தூதன் வரவைப் பொக்கையன் தெரிவித்தான்.

இரவு அவள் அங்கேயே சாப்பிட ஏற்பாடாயிருப்பதாய் வேங்கிட சுப்பையர் பொக்கையன் மூலமாய் வந்தவனுக்குப் பதில் அனுப்பினுர். இந்தப் பதில் உஷாவுக்கு உயிர்பிச்சை அளிப்பதுபோலிருந்தது. அவள் தோழிகள் கவலை நீங்கினர்.

இரண்டு நாழிகைகள் சென்ற பின், முகுந்தராஜய்யங்காரின் குமாஸ்தா வந்தார் அவருடன் வந்தவன் கதிர்வேல் ஆசாரி என்ற நகைசெய்யும் நபர்.

குமாஸ்தா வேங்கிடசுப்பையரிடம், தான் கொண்டுவந்த பேபர் ஒன்றை நீட்டினுர். அதைப் படித்துப்பார்த்துவிட்டு வேங்கிட சுப்பையர் ராமநாதனைக் கூப்பிட்டார். அந்தப் பேபரை அவன் கையில் கொடுத்தார். ராமநாதன் அதைப் படித்துப் பார்த்தான். அது மாஜிஸ்ட்ரேட் முன் அழகிரி பேரில்தான் கொடுக்கும் தாவாவாக இருந்தது. அதில் தன்னிடமிருந்து பலாத்காரமாக அழகிரி வைரப்பித்தான் ஸெட்டை அபகரித்துக்கொண்டதாக மட்டும் எழுதியிருந்தது. வேங்கிடசுப்பையர் ராமநாதனை அதில் கையெழுத்திடும்படி சொன்னுர். குமாஸ்தா அவன் கையெழுத்துப் போடவேண்டிய இடங்களைச் சுட்டிக்காட்டினுர். இது முடிந்ததும் வேங்கிடசுப்பையர், "உன்வைரப் பித்தான் ஸெட்டைக் கழற்றிக் கொடு" என்று ராமநாதனைக் கேட்டார். ராமநாதன் மூன்று பித்தான்கள் இரண்டு கப் பித்தான்கள் இவைகளைத் தகப்பனுரிடம் கழற்றிக் கொடுத்தான். வேங்கிட சுப்பையர் ஆசாரியிடம் அவைகளைக் கொடுத்தார். ஆசாரி வணக்கத்துடன் பித்தான்களைப் பெற்றுக்கொண்டான்.

குமாஸ்தா போகு முன் வேங்கிட சுப்பையரிடம், 'ராத்திரியே போலீஸுக்குச் சொல்லிவிடுகிறேன். பொழுது விடிந்ததும் ஸர்ச்சு ரெடியாக இருக்கும்." என்ருர். வேங்கிட சுப்பையர் தலையசக்கினுர்.

குமாஸ்தா போகும்போது ராமநாதனைத் தன்னுடன் அழைத்துச் சென்ருர்.

ஆசாரி உத்திரவு பெற்றுக் கொள்ளும்போது வேங்கிட சுப்பையர் அவன் கையில் ஒரு கத்தை நோட்டுகளைத் திணித்தார்.

அழகிரியிடமிருந்து "உஷா சாப்பிட்டாகிவிட்டதா" என்று விசாரிக்க ஸைக்கிள் ஆசாமி மறுபடி வந்தான். "அவள் இன்னும் சாப்பிடவில்லை' என்று அவனுக்குப் பதில் அளிக்கப்பட்டது. "அவளுக்குக் "கார்" அனுப்பட்டுமா?" என்று அழகிரி கேட்டுவரச் சொன்னதாய் ஸைக்கிள் ஆசாமி தெரிவித்துக் கொண்டான். "கார் எங்களிடமே இருக்கிறது" என்று அதற்குப் பதில் கூறப்பட்டது. மேலே என்ன கேட்பது அல்லது சொல்வது என்று புரியாமல் ஸைக்கிள் ஆசாமி சற்றுத்தயங்கி நின்ருன். உஷாவும் அவன் கண்ணில் படாமல் பதுங்கியிருந்தாள். சிறிது நேரத்தில் ஸைக்கிள் ஆசாமி தன் வாகனத்தைச் செலுத்திக்கொண்டு மறைந்தான்.

சிவராமன் "போன காரியம் பிரயோஜனப்படவில்லை" என்று சொல்லிக்கொண்டு இரவு எட்டு மணி சுமாருக்குத் திரும்பினுர். "ஹெட்மாஸ்டர் வீட்டிலில்லை. அவர் ஒரு மீட்டிங் சம்பந்தமாய் பள்ளிக்கூடத்தில் தாமதிப்பதாயும், வர நேரமாகுமென்றும் அங்கிருந்த ஒரு பையன் சொன்னுன். நான் வெகுநேரம் காத்திருந்தேன். அவர் வராததால், நாளைப் பார்த்துக் கொள்ளலாம் என்று திரும்பி வந்துவிட்டேன்."

"அந்தப்பையன் யார் என்று விசாரித்தாயா?' என்று கேட்டார் வேங்கிட சுப்பையர்.

"நான் அவ்வளவு தூரம் விசாரிக்கவில்லை. பையன் அவர் வீட்டோடு இருப்பவனுகத் தெரிந்தது. அவருக்குப்பந்துவாக இருக்கலாம். அல்லது ஆச்ரிதனுன வேறு ஏழைப்பையனுகவிருக்கலாம். ஹெட்மாஸ்டரை அவன் "அப்பா" என்ருவது, "மாமா" என்ருவது சொல்லிக் கொள்ளவில்லை. பொதுவாய் 'ஸார்" என்றுதான் குறிப்பிட்டுப் பேசினுன்."

"நானுயிருந்தால் அவள் குலம் கோத்திரம் வரலாறுகளைக் கிண்டிக் கேட்காமல் வரமாட்டேன். இவ்வளவு நேரம் அவனேடு உட்கார்ந்திருந்தாயே! இருவரும் 'எதி

ரும் புதிருமாய் மௌன ஜபம் நடத்தினீர்களோ?"

"இல்லை, அத்திம்பேரே! அவன் என்னை யார் என்று விசாரித்தான்."

"கெட்டிக்காரன்"

"கெட்டிக்காரன்தான். கட்டுக் குடுமியும் அவனும் கண்ணுக்கு மன்மதனைப் போலிருக்கிறான்."

"சரி. நீ என்ன உன்னைப்பற்றிச் சொல்லிக்கொண்டாய்?"

"நான் ஒரு பேரண்ட்; ஹெட் மாஸ்டரைப் பார்க்க வந்தேன்" என்றேன்.

"நீ அமுத்தலாய்த்தான் பேசியிருக்கிறாய்" என்றார் விசேஷமாய் வேங்கிடசுப்பையர்.

"உங்கள் பையன் எந்த பாரத்தில் வாசிக்கிறான்" என்று கேட்டான் அவன்.

"பேஷ்! நல்ல கேள்வி?"

"என் பையனல்ல. என் பெண் என்று நான் சொல்லவேண்டியதாயிற்று!

"சரி மேலே"

"பெண்ணு, என்று சொல்லிக் கொண்டு அவன் பின்பு மௌனமாயிருந்துவிட்டான்"

"அது முதல் மௌனஜபம் ஆரம்பமோ?', என்றார் தமாஷில் ருசியுடன் வேங்கிடசுப்பையர்.

"இல்லை அத்திம்பேரே! அவனை அத்துடன் நான் விடவில்லை. நீ ஸ்கூலில்தான் வாசிக்கிறாயா! என்று நான் அவனைக்கேட்டேன். 'ஆம், ஆறுவது பாரம் வாசிக்கிறேன்' என்று அவன் பதில் சொன்னான். 'உனக்குச் செல்லம், காந்திமதி என்ற பெண்களைத் தெரியுமா" என்று கேட்டேன். அவன் ஆச்சரியத்துடன் என்னை உற்று நோக்கிவிட்டுத் 'தெரியும்' என்று தலையசைத்தான். "நான் செல்லத்தின் தகப்பனார்! என்றேன். அவன் முகத்தில் ஒரு பயம் தோன்றி மறைந்ததுபோலிருந்தது. சற்றுப்பொறுத்து அவன் என்னிடம், "நீங்கள் ரொம்ப நாழியாய்க் காத்திருக்கிறீர்களே! சில சமயம் ஹெட்மாஸ்டர் இரவு பத்து மணிக்குக்கூட வருவார்! என்று சொல்லி என்னை அனுப்பி விடுவதில் சிரத்தை காட்டினான். நானும் "காரை" எடுத்துப்போனதால், அதிகம் தாமதிக்கக்கூடாதென்று நினைத்தேன். மேலும் அகாலமாகிவிட்டால் ஹெட்மாஸ்டர் வந்தாலும் அவரை அழைத்து வருவது அசௌகரியமாயிருக்குமென்று தோன்றிற்று. நான் வந்துவிட்டுப்போனதாக அவரிடம் சொல்' என்று அந்தப் பையனிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டேன். காலையில் அவரை வரச் சொல்! என்றும் சொன்னேன்."

"ஸ்ரீமான் வேங்கிடசுப்பையர் வீட்டிற்குத்தானே என்று கேட்டான் அந்தப்பையன்."

"பலே! அவன் புத்திசாலி என்று தெரிகிறது. நீயே அல்லவா உன் அட்ரஸைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்!"

"நன் காந்திமதி பேரைச் சொன்னதால் அவன் என் அட்ரஸ்ஸைத் தெரிந்து கொண்டான்."

"அதுதான் புத்திசாலித்தனம் என்கிறேன்"

"மேலும், அவனுக்கு சீதாராமனைத் தெரியும்போலிருக்கிறது. சீதாராமன் ஊரிலிருந்து வந்துவிட்டானு" என்று விசாரித்தான்.

இன்னும் வரவில்லை என்று நான் பதில் சொன்னேன். அத்துடன் கார் சப்தம் போட்டுக் கொண்டு நகர்ந்தது."

"அவன் பெயரை நீ கேட்கவில்லையா?"

"இல்லை."

(தொடரும்.)

சென்ற வாரம் கோகலே ஹாலில் ஜஸ்டிஸ் ஏ. எஸ். பி. ஐயர் முன்னிலையில் நடன ஆசிரியர் வழுவூர் ஸ்ரீமான் ராமையா பிள்ளையின் சிஷ்யையும், சங்கீதவித்வான் ஸ்ரீ அண்ணாமலை பிள்ளையின் புத்திரியுமான குமாரி ரேணுகாதேவியின் பரத நாட்டியம், அபிநயம் நடைபெற்றது. வாலாஜாபேட்டை விநாயகர்கோயில் திருப்பணிக்காக நடந்த உதவிக் கச்சேரி.

காஷ்மீர்-குஸும்
என்ற மலர் மூலிகையை
கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்

M.P. & Co's
ஸாண்டலக்ஸ்
நறுமண சந்தனக் களிம்பு
தீப்புண், வெட்டு, சொறி பரு, புண்களுக்கு (கைவிடா உதவி)

M. R. ஜெட்டப்பா அவர்களின்
பிரேமலீலா
மைசூர் ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர், அம்பர்

ஏஜெண்டுகள்: யுனைடெட் ஏஜன்ஸீஸ், 54, பந்தர் வீதி, மதராஸ்.

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

டிப்போக்கள் : மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

கண்ணுக்கு
அழகு
கருத்துக்கு
விருந்து!
மாடர்ன் தியேட்டர்ஸ்....
ஆதித்தன்
கனவு
பாட்டு:
பாபநாசம் சிவன்
சங்கீதம்:
ஜி. ராமநாதன்....
ஸினேரியோ:
எம். எல். டாண்டன்
டைரக்ஷன்:
T. R. சுந்தரம்
B. A. B. Sc (LEEDS)
—: நடிகர்கள் :—
T. R. மகாலிங்கம்
K. K. பெருமாள்
K. P. கேசவன்
M. G. சக்ரபாணி
காளி N. ரத்னம்
M. E. மாதவன்
அஞ்சலிதேவி
T. R. ரஜினி
ஜெயகௌரி
P. K. சரஸ்வதி
C. T. ராஜகாந்தம
ஏழுமலை
நடனம்:
லலிதா & பத்மினி
தாரா சௌத்ரி
மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட், சேலம் & மதுரை
சென்னையிலும்
மற்ற நகரங்களிலும்
வெற்றிகரமாக
நடைபெற்று
வருகிறது.
★
தமிழ்ப்படவுலகின்
உன்னத சிருஷ்டி
★
ஆரம்ப முதல்
கடைசிவரை
தெவிட்டாத கதை
அடுக்கடுக்கான
சம்பவங்கள்!
இனிய கானம்
இன்ப நடனம்!

காச குலாந்தகம்

சரீரம் மெலிந்து, அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து, பார்வை குன்றி, கஷ்டப்படும் அன்பர்களே !

சுவாசக் குழாய்களிலும், சுவாசப் பைகளிலும் தடைபட்டு நிற்கும் கபம் விலகிப்போவதைத்தவிர, நெஞ்சிலும், விலாப்பக்கத்திலும் வலி, இருமல், இழுப்பு, பலக்குறைவு, மார்பு அடைப்பு, தலைவலி, காய்ச்சல், குரல் அடைப்பு, நாசி வழி ஜலம் வடிதல், க்ஷயம, சுவாசக் குழாய்களிலிருக்கும் பழுப்பு, கபத்தாலுண்டாகும் இழுப்பு முதலிய சுவாசப்பையை ஒட்டிய சகலவித நோய்கள் யாவற்றையும், ஆதவனைக்கண்ட பனிபோல் விரைவில் மாற்றிவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கடின பத்தியமில்லை.

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால செலவு அணா 14 முன் பணம் அனுப்பி பெறுக்கொள்ளலாம் விவரமான கூட்லாக் இறும்.

மலையாள மெடிகல் ஹால்

H O. TRIVANDRUM.

189, வக்கீல் புது தெரு - P. B. No 27 மதுரை.

கிளை ஸ்தாபனங்கள்:— 207, நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம். 20, கோவிந்தப்பநாயக்கன் தெரு. சென்னை G. T. 58E. தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர், 179. SEA ST.. COLOMBO.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்.

Dr பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

Lovely long hair

ASOKA AMLA

HAIR OIL

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும

VIJAYA CHEMICAL & TOILET WORKS

21 & 22 Suriyanarayana Chetty St., Royapuram, Madras.

Rgd. No. 2221.

28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S. I. R.*

A. B. C. Talks	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்

" சுதேசமித்திரன் " புத்தகசாலை மவுண்ட்ரோட், மதராஸ்.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்.

தலைமை ஆபீஸ் :	லக்ஷ்மி & கோ.,
வால்டேர், ஆர். எஸ்.	2/135, பிராட்வே, மதராஸ்.

ரூ. 500 இனும்

ஆச்சரியகரமான சக்திவாய்ந்த சித்த யந்திரம்.

சக்தி வாய்ந்தது. இந்த "கவசத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை இதனால் நீர் விரும்பும் (ஆண், பெண்) எவராகிலும் உனக்கு அடங்கி வருவர் அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனும்.

செப்பு மூடியுடன் ரூ. 5
மூன்று வாங்கினால் ரூ. 12.

வெள்ளி மூடியுடன் ரூ 7.
மூன்றுக்கு ரூ. 18.

தங்க மூடியுடன் ரூ. 15.
மூன்றுக்கு ரூ 40.

Sri Kamrup Kamakshya Ashram,
199/B. P.O. Rajdhanwar, (Hozaribagh)



பிரசித்தி பெற்ற

'காஸினோ ஸ்னோ'

உங்கள் முகப்பருவைப்போக்கி, சருமத்தை மிருதுவாக்கி முகத்தைப் பொலிவுடன் பிரகாசிக்கச் செய்வது 'காஸினோ ஸ்னோவே' வாங்கும்பொழுது "காஸினோ" மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

CHANDRA TRADING CO.,
93, ACHARAPPAN ST., G.T. MADRAS I

எலக்டிரிக் சாமான்கள்

ENGLISH MAKE

Switches Porcelain Base.	Dozen Rs.	19-8-0
Staircase Switches	,, ,,	36-0-0
Holders Bakelite	,,	8-8-0
Cealing Roses Bakelite	,,	8-12-0
Wall plugs & Pins Bakelite	,,	15-8-0
C.M.A. 1/18 V.I.R. COILS 100 yards		15-8-0
,, 14/36 Flexable wires	,,	30-0-0
15 to 30 walls India Bulbs	Dozen	18-8-0
15 amp. Ironclad Main Switches	each	11-0-0
9" O. C. Braket & Holder	,,	2-8-0
Kantark 15 amp. Fuse units	,,	3-0-0
11 m-m pipes. 10 Feet	,,	3-8-0
2½ amp. A. C. Venner Meters	,,	50-0-0
Transformer lights GEC	,,	8-0-0
Langham Shades "Colour Border"	,,	2-8-0

மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும்.

M. R. PARTHASARATHY IYENGAR

Electrical Dealers

29A, T. P. KOIL STREET
TRIPLICANE :: MADRAS. 5

45 வருஷமாகப் புகழும் நற்சர்டிபிகேட்சுளும் பெற்றுவரும் மருந்துகள்:

தாளக பஸ்பம்

காசம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு 7 விதமும் அஸ்திசுரம், எலும்புருக்கி (T. B.) க்ஷயரோகமும் தீருகிறது. ½ மண்டல பஸ்பம், தாளிசபத்திரி சூரணமும் ரூ. 10.

அப்ரேக் செந்தூரம்

அடிக்கடி போகும் நீர், தாகம், வரட்சி, எலும்புருக்கி, பவுத்திரம், நீரில்உள்ள சர்க்கரைசத்து பூரண சுகமாகிறது. ½ மண்டலம் அனுபானத்துடன் ரூ. 15.

எவ்வித மருந்துகள் சாப்பிட்டும் தீராத கொடிய வியாதிகளுக்கு வியாதி விவரம் தெளிவாக எழுதினால் தகுந்த உயர்ந்த மருந்துகள் கொடுத்து குணப்படுத்துகிறோம்.

வைத்தியபதி

R.M. நாராயணசாமி பிள்ளை

தன்வந்திரி வைத்தியசாலை,
பழனி. (S. I.)

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்லு உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் செகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285. Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

இந்தியாவின் புகழ்

லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

மலபார், கொச்சி, திருவாங்கூர்

தென் கன்னடத்துக்கு

ஏஜண்டுகள் :

கொச்சி மெடிகல் ஸ்டோர்ஸ்,

மட்டஞ்சேரி (கொச்சி)

ஜாதகம்! ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விரம்:- 1 முதல் 3 உமது எதிர் கால கேள்விகட்கு ரூ. 2 3-ககு மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்தும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு :—வெளிநாட்டுககு இரட்டிப்புக் கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ கூறுவதைக் கவனியுங்கள்:-தாங்கள் அனுபபிய ஜாதக பலன் வியக்கத்தக்கது எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

Regd. No. 2514.

இந்த பெயர்...



ஹாஜ்மல்ஸ்

வைர நகை வியாபாரிகள்

உங்கள்

நகைகளின்
கௌரவத்தை
அதிகரிக்கும்.

313, எஸ்பிளனேட்,
மதராஸ்.